Sri M. NARAYANA KURUP :—" The main reasons why the grower gets a poor return are (1) the processing is controlled by foreign interests, and (2) the sale is not regulated by any marketing system. May I request the Government to look into these two things and do the needful?"

The Hon. Sri M. BHAKTAVATSALAM :—" The Government of India have already set up an Export Promotion Council for pepper and cashewnut with its headquarters at Cochin. The Government will look into what further steps are necessary."

Sri S. DAIVASIGAMONEY :—" Is the Hon. Minister aware that the import of cashewnut in our State is more than the local production and in view of this, will the Government stop permitting the export of cashewnut from our State?"

The Hon. Sri M. BHAKTAVATSALAM :—" Since this is a dollar-earning product, we should rather encourage export."

Sri M. PALANIYANDI :—" முந்திரிக் கொட்டை தோலிலிருந்து ரசாயன சாமான்கள் செய்யப்படுகின்றன. அதற்காக பெரிய தொழிற்சாலைகளை ஏற்படுத்த சர்க்கார் முன்வருமா ?"

The Hon. Sri M. BHAKTAVATSALAM :—" அது எல்லாம் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது."

Sri P. RAMAMURTHI :—" The Government must be aware that cashewnut is grown only in India and South Africa. In view of the near-monopoly position which this State is having, will this Government recommend to the Central Government the setting up of a Government corporation to look after the export of this commodity?"

[6th August 1955

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" I have already stated that the Government of India have set up an Export Promotion Council for pepper and cashewnut. I hope that a corporation also is under consideration."

SRI K. P. GOPALAN :—" As cashewnut is a dollar-earning commodity and as cashewnut industry is monopolised by English companies like Parry & Co., will the Government themselves be pleased to start cashewnut industry in various centres where cashewnut is grown? The Central Minimum Wage Advisory Board has unanimously recommended to the Government the payment of a minimum wage to the workers and I want to know from the Hon. Minister . . ."

MR. SPEAKER :—" The second part of the question does not arise. The first part will be answered."

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" Government are fully aware of the importance of this both as an agricultural product and as an industrial product and as to what should be done to the workers engaged in the industry. I may tell this House that there is a programme to bring under cashewnut cultivation 34,000 acres of additional lands within a period of ten years."

Recruitment of Sub-Magistrates in the State.

* 1984 Q.—SRI P. RANGASWAMI REDDIAR: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether recently persons were recruited to the post of Sub-Magistrates in the State;

(b) the number of persons applied, the number of persons selected and who was the selection authority; and

(c) whether it is a fact that a large number of Brahmins were selected even overlooking the claims of Backward Class candidates and if so, what the reasons were?

THE HON. SRI C. SUBRAMANIAM :—" (a) Yes.

" (b) (i) For direct recruitment—

Number of persons applied—55.

Number of persons selected—16.

Selection authority—The Madras Public Service Commission.

(ii) For recruitment by transfer—

Number of persons applied—39.

Number of persons selected—10.

Selection authority—The High Court, Madras.

" (c) No, Sir."

SRI P. RANGASWAMI REDDIAR :—" How many were selected by direct recruitment from Backward Classes, how many from Scheduled Cast seo,hw many from Brahmin Community and how many from Non-Brahmin community? "

6th August 1955]

THE HON. SRI C. SUBRAMANIAM :—" Four candidates from Backward Classes were recruited by direct recruitment, and in the recruitment by the High Court two Backward Class candidates were taken. Thus, on the whole six were taken. I do not have figures with regard to Non-Brahmans and Brahmans."

SRI V. R. NAGARAJAN :—" Among the Backward Class applicants, how many from the Vanniyakula Kshatriya community applied and were any of them selected? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" We do not recognize Vanniyakula Kshatriyas as a separate entity within the Backward Classes. The entire category of Backward Classes is taken as a whole and so I have got figures only for Backward Classes as a whole."

SRI P. RANGASWAMI REDDIAR :—" In clause (c) of the question, I have specifically mentioned that a large number of Brahmans had been selected. We understand that of late, caste appellations are not to be mentioned in the applications for admission to medical colleges, engineering colleges, etc., for obvious reasons. How are we to understand whether only members of a particular community had been selected or whether the selection had been done by taking in members of all the communities equitably? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" The hon. Member knows that we can make reservations for Backward Classes and Scheduled Castes. As far as the other sector is concerned everyone has to compete irrespective of the caste, creed or religion to which he belongs. Hereafter it is not be possible to have communitywise figures with regard to those other than the Backward Classes and Scheduled Castes."

SRI V. R. NAGARAJAN :—" I really appreciate that no preference can be given to any community in this land. But in view of the paucity of the people of this community being employed in this State, I submit that there will not be even one or two in the judicial service, whether as a criminal judicial officer or as a civil judicial officer. May I, therefore, beseech the Hon. the Finance Minister, to be more proper, the Hon. the Law Minister, to recruit them? " 9-a.m.

THE HON. SRI C. SUBRAMANIAM :—" I am sorry we cannot give representation to every community on the basis of community. After all, we can recognize only backward sections of the community as a whole. That is recognized and proper representation is given to them. Reservation is made for them."

SRI V. BALAKRISHNAN :—" May I know whether any ladies have been recruited? "

[6th August 1955

THE HON. SRI C. SUBRAMANIAM :—" I really forgot that the hon. Member might put a supplementary question of this nature. Hereafter I shall bear this in mind and get figures."

Labour dispute in the Cheroli Mills.

* 1985 *Q.*—SRI K. P. GOPALAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state what conciliation measures the Government have taken in the labour dispute between the workers and the management of Cheroli Mills Kunhimangalam, North Malabar, regarding the dismissal of 5 workers from the mills on 15th December 1954 without giving any notice either to the workers or to the Government?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" It is reported that no worker employed in the mills was dismissed from service."

SRI K. P. GOPALAN :—" Sir, I want to make a correction in the question. The name of the mills is Chenoli Mills and not Cheroli Mills. May I know from the Hon. Minister whether the Government are aware that the Regional Factory Inspector visited the factory and found that the names of many workers were not entered in the register? He has found out that about 50 workers had been dismissed. May I know wherefrom the Government got this information—whether it was from the Labour Officer or whether it was from the Regional Inspector of Factories—that there was no such dismissal and that there were efforts at conciliation? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" The Labour Officer, Kozhikode, conducted an inquiry on the 7th February 1955 regarding the alleged dismissal of workers and he listened to both the management and the workers. The workers submitted to the Labour Officer a list of workers who, they said, had been dismissed. The Labour Officer obtained from the management the muster roll and the wage register of the factory and found none of those names in the register. Therefore, it is now clear that those who had been dismissed were not the workers who were on the muster roll and the wage register. Perhaps, they were casual labourers."

SRI P. RAMAMURTHI :—" Will the Hon. Minister call for a report from the Regional Factory Inspector in view of the fact that there is a possibility of the muster roll having been burked? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" If any specific allegation is made to the Government, the Government will inquire into the matter."

6th August 1955]

" Special reward amount " in the Police department.

MR. SPEAKER :—" As the hon. Member Sri M. Dharmalingam who gave notice of this question is not in his place, the answer together with the question will be printed in the official proceedings."

* 1986 Q.—SRI M. DHARMALINGAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the officers above the rank of head constables in the Police department are allowed to have some amount as special reward amount;

(b) if so, what is the maximum amount that they can possess and for what purpose it is to be spent; and

(c) why the head constables and constables are not allowed to have such special reward amounts?

THE HON. SRI C. SUBRAMANIAM :—" (a), (b) & (c) It will not be in the public interest to give information."

Kudroli Commonwealth Tile Factory.

* 1987 Q.—SRI K. ISHWARA : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether the Kudroli Commonwealth Tile Factory is running a canteen for the workers in the factory;

(b) if so, why the Harijan workers in the factory are not allowed to enter the canteen to take coffee;

(c) whether it is a fact that the Factory Manager prohibited the Harijans from entering the canteen;

(d) if so, what action the Government propose to take in the matter;

(e) whether the Government have received any memorandum from the Harijan workers of the factory; and

(f) whether the Labour Officer enquired into the matter; and if so, what action was taken?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" (a) Yes, Sir.

" (b) The management has not restricted the entry of Harijans into the canteen.

" (c) No, Sir.

" (d) Does not arise.

" (e) No memorandum was received from the Harijan workers of this factory.

" (f) Does not arise."

[6th August 1955

Panchayat Court elections.

* 1988 *Q.*—SRI M. NARAYANA KURUP : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state—

(*a*) whether there is any property qualification fixed for candidates contesting Panchayat Court elections; and

(*b*) if so, when it was fixed and the reasons for its continuance?

THE HON. SRI C. SUBRAMANIAM :—" (*a*) & (*b*) For panchayat courts set up under the Madras Village Courts Act, 1888, a rule issued in 1920 prescribes certain property qualifications which apply to all except Harijans. The object of prescribing this qualification at that time was to ensure that those who are to administer Law in a village through the panchayat court in an honorary capacity should be men of some status. A proposal to have this rule revised is under the consideration of Government.

Where, however, a panchayat is constituted under the Madras Village Panchayats Act, 1950, the panchayat will also function as a court, replacing the panchayat court set up under the earlier Act. No property qualification is prescribed for becoming a member of a panchayat under the new Act."

SRI M. NARAYANA KURUP :—" The Hon. Minister in his reply has guarded himself by saying ' at that time '. Now, inasmuch as the highest posts in our State both at the Centre and in the State do not require any qualification, without considering the matter further, will the Government issue immediately instructions to cancel this out-moded rule? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" Consideration does not mean consideration whether to have it or not to have it. Even the cancelling of it has to go through certain routine processes. That is being done."

SRI K. VINAYAKAM :—" Is it necessary for a person to possess any legal knowledge to be a member of this court, or is it given to anybody who has been elected by the people? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" No legal qualification is prescribed."

MR. SPEAKER :—" Questions are over."

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—STATEMENT UNDER RULE 40 *RE* THE PENALTY RATES COLLECTED FROM THE RYOTS IN THE LOWER BHAVANI AREA OF ERODE, GOPI AND DHARAPURAM TALUKS IN COIMBATORE DISTRICT.

MR. SPEAKER :—" Notices of motions under rule 40 have been received from two hon. Members, namely, Sri N. K. Palanisami and Sri K. T. Raju regarding the penalty rates collected from the ryots in the Lower Bhavani area. I must tell the House that

I have included in the same motion the motions given notice of by the hon. Members Sri Adityan and Sri Arumugam also. There is a slight difference in the wording of the motions. But the subject-matter is the same. Therefore, I am allowing all the hon. Members to have their say in the matter.''

* SRI K. T. RAJU :—'' The motion I have given notice of is to call the attention of the Minister to a matter of urgent public importance, viz., that the Revenue authorities in the Lower Bhavani irrigation area, are collecting penalty at a very high rate from the peasants who have raised paddy crops in the lands marked as dry during the last season. There were heavy rains during the last sowing season, when water was allowed in the canal also. Due to this fact, the lands became unfit for dry crops and the peasants had no other alternative except raising paddy. Now the penalty levies are demanded from the peasants which, if enforced, would ruin them. The levies are very high as Rs. 105 per acre. It is advisable that the penalty may be waived as a special case.

'' கனம் சபாநாயகர் அவர்களே, சட்டசபையின் 40-வது விதியின் பிரகாரம் நான் கொடுத்திருக்கக்கூடிய பிரேரணை என்னவென்றால் ஈரோடு தாலூகா, லோயர் பவானி பாசனப் பிரதேசத்தில் சென்ற வருஷம்தான் தண்ணீர் விடப்பட்டது. புது வாய்க்கால் ஆனபடியினால் கறையிலிருந்து தண்ணீர் கசிவு ஏற்பட்டதோடு அந்தக் காலத்திலே மழை பெய்த காரணத்தினால் விவசாயிகள், சர்க்கார் குறிப்பிட்டபடி, புஞ்சை தானியம் பயிர் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டது. ஆகையால், அந்தப் பிரதேசத்தில் இருக்கக்கூடிய விவசாயிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எழுதிக் கேட்டுக்கொண்டார்கள். 'புஞ்சை தானியம் விதைப்பதற்கு சாத்தியம் இல்லை, ஏராளமான தண்ணீர் குளம் குட்டைகளில் நிரம்பிவிட்ட காரணத்தினால் நெற்பயிரைத் தவிர வேறு ஒன்றும் விவசாயம் செய்ய முடியாது, ஆகவே, நெற்பயிர் விளைவிப்பதற்கு அனுமதிக்க வேண்டும்' என்று அங்குள்ள விவசாயிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குக் காலாகாலத்தில் விண்ணப்பம் செய்து கொண்டார்கள். அதிகாரிகள் காலாகாலத்தில் அந்த இடத்திற்குப் போய்ப் பார்க்க முடியாததினால் வேறு வழி எதுவுமில்லாமல், பருவம் தவறிவிடும் என்ற காரணத்தினால், அவர்கள் நெற்பயிர் விவசாயம் செய்யவேண்டி ஏற்பட்டது. சட்டத்திற்கு விரோதமாக வேண்டுமென்றே விவசாயிகள் வாய்க்காலிலிருந்து தண்ணீர் எடுத்து நெற்பயிர் விளைவித்தால் அப்பொழுது சர்க்கார் தண்டத் தீர்வை விதிப்பதில் நியாயம் இருக்கிறது. ஆனால், எதிர்பாராத விதமாக, மழையும் பெய்ய, வாய்க்காலிலிருந்து கசிவும் ஏற்பட்ட விஷயத்தை கனம் அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்ததன்பேரில், தண்டத் தீர்வை விதிக்கக்கூடாது என்று கிளர்ச்சி செய்ததன்பேரில், அந்தத் தண்டத் தீர்வை ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. நான் இப்பொழுது சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுவது என்னவென்றால் இந்தத் தண்ட வரியை ரத்து செய்து விடவேண்டும் என்பதுதான். இது ஒரு பெரிய காரியம் அல்ல. இது புதிய வாய்க்கால் பிரதேசம். ஏற்கெனவே பல அபிவிருத்தி வரிகள் விதிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் இந்த தண்ட வரி விதிப்பைக் கண்டு அங்குள்ள விவசாயிகளிடையே ஒரு பீதி ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பீதியை உண்டாக்காமல் தண்டத் தீர்வையை ரத்து செய்யவேண்டுமென்று நான் மீண்டும் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

'' இதே வாய்க்கால் பிரதேசத்தில் சென்ற வருஷம் மழையின் காரணமாக தண்ணீர்க் கசிவு ஏற்பட்டு கரை யோரங்களிலுள்ள வீடுகள் இடிந்து விழுந்தன. மராமத்து மந்திரி அவர்கள் இது விஷயமாக வேண்டிய

ஏற்பாடு செய்வதாக வாக்களித்திருக்கிறர். ஆகவே, ஈரோடு தாலூகாவில் ஆயிரக்கணக்கான விவசாயிகளுக்கு விதிக்கப்பட்ட தண்டத் தீர்வையை ரத்து செய்யவேண்டிய அளவுக்கு கனம் மந்திரி அவர்களுடைய பதில் இருக்கவேண்டுமென்று நான் எதிர்பார்க்கிறேன்.''

* SRI N. K. PALANISAMY :—'' Sir, the motion I have given notice of is to call the attention of the Minister to a matter of urgent public importance, viz., that penalty rates have been collected from the ryots in the Lower Bhavani area of Erode, Gopi and Dharapuram taluks in Coimbatore district for raising paddy crops thus causing difficulties and pauperisation of the ryots.

9-28 a.m. "கனம் சபாநாயகர் அவர்களே, லோயர் பவானி பாசனப் பிரதேசத்தில் தண்ணீர் பாயக்கூடிய இடங்களில் இருக்கக்கூடிய விவசாயிகள் மீது தண்டத் தீர்வை போடப்பட்டிருக்கிறது என்பது தெரிந்த விஷயம். கனம் மந்திரி அவர்கள் சொல்லலாம், ' ஏற்கெனவே நாங்கள் உத்தரவு போட்டிருக்கிறேம், சர்க்கார் அதிகாரியாகிய தாசில்தார் அனுமதியின் பேரில்தான் நெல் பயிர் வைக்கவேண்டும், இல்லாவிட்டால் வைக்கக்கூடாது, அனுமதியில்லாமல் நெற்பயிர் வைத்தார்கள், ஆகவே தீர்வை போட்டிருக்கிறேம்' என்று. இரண்டு லட்சம் ஏக்கரா நிலங்கள் இருக்கின்றன. எத்தனை இடங்களில் தண்ணீர் கசிந்தது என்பதைத் தெரிந்து கொள்வதற்கு எத்தனை அதிகாரிகள் நியமிக்கப்பட்டார்கள் என்பதைச் சர்க்கார் சொல்லமுடியுமா ?

" கனம் மந்திரி அவர்கள் சொல்லலாம் ; ' மேலே இருக்கக்கூடியவர்கள் தண்ணீரை இறைத்து நெற் பயிர் வைத்துக்கொண்டால் கீழே உள்ளவர்களுக்குத் தண்ணீர் போய்ச் சேருவதில்லை ' என்று. இன்றைய தினம் பல இடங்களில் தண்ணீர் விட்டும்கூட தூரமாகப் பாயவில்லை. ஆனல், வரி போட்டிருக்கிறர்கள். கோபிசெட்டிப்பாளையம் தாலூகா போன்ற பிரதேசங்களில் இருக்கிறவர்கள் இம்மாதிரி வரிகளைப் போடக்கூடாதென்று கேட்டுக்கொண்டிருக்கிறர்கள். ஈரோடு தாலூகா, கீழ் பவானிப் பாசனப் பிரதேசத்தில் விவசாயிகள்மீது வரி போடக்கூடாதென்றும் அங்குள்ளவர்களுக்கு விலக்களிக்க வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்."

MR. SPEAKER :—'' The hon. Member is repeating the same points mentioned by Sri K. T. Raju. He may give some new points if he has.''

* SRI N. K. PALANISAMY :—'' They are collecting illegally, Sir.

" இப்பொழுது ஏராளமான பேர்களுக்கு வரி போட்டிருக்கிறர்கள். தண்ணீர் விடாமலேயே வரி போட்டிருக்கிறர்கள் என்பதை கனம் மந்திரி அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். நிலவரி, தண்ணீர்த் தீர்வை, தண்ட வரி ஆகியவைகள் தண்ணீர் பாயாமலேயே போடப்பட்டிருக்கின்றன. அங்கிருக்கக்கூடிய விவசாயிகள் மிகவும் கொதிப்படைந்திருக்கிறர்கள். ரெவினியூ போர்டு மெம்பர் ஸ்ரீ டி. என். எஸ். ராகவன் வந்து பார்த்து விட்டுப் போனபோது தண்ட வரியை ரெவினியூ போர்டு ரத்து செய்யும் என்று சொன்னபிறகும்கூட தண்ட வரி போட்டார்கள். பிறகு அது நிறுத்தி வைக்கப்பட்டதுபற்றி சர்க்காருக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறர்கள். இந்த வரி போடாமல் ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த தண்ட வரி போடப்பட்டதால் ஜனங்கள் மிகவும் கொதிப்படைந்திருக்கிறர்கள்."

* SRI S. T. ADITYAN :—" கனம் சபாநாயகர் அவர்களே, கீழ் பவானித் திட்டத்திற்கும் திருநெல்வேலிக்கும் ஒரு வித்தியாசம் என்ன வென்றல் கீழ் பவானித் திட்டத்தில் தண்ணீர் எடுத்துக் கொண்டால்

தான் வரி, திருநெல்வேலி ஜில்லாவில் (**Compounded double crop land**) தண்ணீர் வந்தாலும் சரி, தண்ணீர் வராவிட்டாலும் சரி, பயிர் விளைந்தாலும் சரி, பயிர் விளையாவிட்டாலும் சரி, ஒரு எக்கருக்கு கிட்டத் தட்ட ரூ. 20 அரசாங்கத்திற்குக் கொடுக்கவேண்டும். இரண்டு போகத் திற்கும் சேர்த்து கிஸ்தி வசூலிக்கப்படுகிறது. இரண்டு போகப் பயிர் களுக்குத் தண்ணீர் கொடுக்க முடியும் என்று அரசாங்கத்தார் உத்தர வாதம் அளித்திருந்தபோதிலும்கூட, அதன்படி கிஸ்தி வசூலித்துக் கொண்டிருந்தும்கூட, பலவித காரணங்களால் அந்த விதமாக தண்ணீர் கொடுக்க முடியவில்லை. அப்படிப்பட்ட நிலைமையில் இருந்துங்கூட அனேக மாக ஒரே ஒரு போகம் மாத்திரம் விளைந்துகொண்டிருக்கிறது. இரண்டா வது போகம் விளைவது இல்லை. இந்த வருஷம் விளைந்தது. அநேக இடங்களில் தண்ட வரி போடப்பட்டிருக்கிறது. எக்கருக்கு ரூ. 100 வரையிலுங் கூட அநேக இடங்களில் தண்ட வரி போட்டிருக்கிறார்கள்.

" அந்தத் தீர்வை போட்டிருக்கிற அநேக இடங்கள் தேங்கலான வாய்க் கால் நிலங்கள். வீணைக் கடலுக்குப் போகும் கழிவுத் தண்ணீரை எடுத்து பயிர் செய்தாலும் அந்த இடங்களுக்கும் தண்டத் தீர்வை போட்டிருக்கிறார் கள்.

" 50 வருஷமாக நஞ்சையைத் தவிர புஞ்சை விளையக்கூடிய பள்ளங் கள், அந்த இடங்களுக்கும் தீர்வை போட்டிருக்கிறார்கள்.

" கூடிய சீக்கிரம் மணிமுத்தாறு திட்டம் வரப்போகிறது. அந்தத் திட்டம் வந்து சாஸ்வதமாக தண்ணீர் சப்ளை செய்யமுடியும். மணிமுத் தாறிலிருந்து நாங்கள் தண்ணீர் கொடுக்கிறோம் என்று வாக்குறுதி கொடுக்கப்பட்டிருக்கிற இடங்களில்கூட போட்டிருக்கிறார்கள்.

" ஒரு கிராமத்தில் 20 எக்கர் இருக்கும். அந்த 20 எக்கர் நிலமானது தலைக்கு அரை எக்கர் வீதம் 40 புள்ளிகளின் கையில் இருக்கும். அந்த 40 புள்ளிகளும் தனித் தனியாக மனுப்போட வேண்டுமென்று கேட்கி றார்கள். வக்கீல் வைத்து தனித் தனியாக ஒவ்வொருவரும் மனுப் போடுவதென்றால் செலவு ஜாஸ்தியாகும். ஆகவே, ஒரே மனுவாக ஏற் றுக்கொண்டு இம்மாதிரி வரியை அநேகமாக ரத்து செய்து விடும்படியாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

* THE HON. SRI M. A. MANICKAVELU :—" Sir, on the various representations from the ayacutdars of the Lower Bhavani Project area, the Government passed orders in G.O. No. 3015, Revenue, dated 19th October 1954, that the cultivation of ground-nut and gingelly might also be allowed in addition to cotton and millets subject to the understanding that no water would be made available before the 15th September or so, when the canals would be opened for irrigation. The Government also ordered that cultivation of tobacco, chillies, turmeric, castor, tapioca, yams and pulses might be allowed in the Project area in fields which have the support of wells. No new wells or deepening of existing wells would, however, be permitted in the Project area for the present, that is, until the Project has been functioning for some years. The cultivation of tobacco, chillies, turmeric, castor, tapioca, yams and pulses would be limited to 25 per cent of the maximum extent irrigated under the well in any one fasli during the last ten faslis. If, during the same fasli, the same piece of land has been irrigated for two crops or more, its extent would be 9-34 a.m.

counted only once for determining the maximum extent. On the remaining 75 per cent of the ayacut under wells, all the crops permitted for the Project in general, viz., cotton, millets, groundnut, gingelly, etc., would be allowed and also pulses and castor as mixed crops. In the case of mixed crops, only the appropriate highest water cess would be charged. The cultivation of sugarcane, betels and plantains has been prohibited except that back yard cultivation of plantains and vegetables has been allowed to the extent of 10 cents for each existing well without any penalty. Further, scattered fruit trees, coconuts and plantains have also been allowed but not on a field scale, i.e., trees not exceeding 10 in number per acre.

" As regards cultivation of paddy, the Government in the Public Works Department have ordered in G.O. No. 2621, P.W., dated 28th July 1954, that pending localization and zoning of ayacut, which will be finalized after watching the progress of cultivation during the next two years such of the lands as are percolation affected will continue to be classed as dry and appropriate water cess and penalty as usual will be charged, if paddy is grown out of necessity, but the jamabandi officer may examine each case and remit the penalty in full, if he is satisfied that by reason of seepage the land could not possibly have been cultivated with dry crops. This concession will be for each fasli year until observational data is collected for some years and will be subject to revision and cancellation at any time and from any fasli and subject to the condition that canal water will not be allowed in excess of what is required for an irrigated dry crop, the lands being classified only as ' dry ' till a final decision is reached. The particulars mentioned above were already given to the hon. Members on the floor of the House on 17th February 1955 in reply to question No. 1042 put by the hon. Member Sri N. K. Palanisamy.

" Sir, petitions and representations have recently been received against levy of penalties for the cultivation of paddy. In this connection, I may also tell the House that there is a keen competition between the Communist Party and the Praja Socialist Party as to who should win the laurels in this agitation. But, the Government are not concerned with that. We want to do the right and just thing in the circumstances. The Government have examined the case in detail and have come to the conclusion that the levy of penal assessment for cultivation of prohibited crops in the area should be decided by the local Revenue authorities on the merits of each case based on the orders mentioned above.

" Sir, with regard to the question of Tirunelveli district, I am not in a position to make a definite statement just now."

SRI K. T. RAJU :—" Sir, . . ."

6th August 1955]

MR. SPEAKER :—" There cannot be any debate on this matter."

*** SRI K. T. RAJU** :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விஷயத்தில் கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் சோஷலிஸ்டுக் கட்சிக்கும் இடையே யாதொரு விதமான அபிப்பிராய பேதமோ, தகராரோ கிடையாது. இரண்டு கட்சிகளைச் சேர்ந்த அங்கத்தினர்களும் இங்கே இருக்கிறோம். விவசாயிகள் மீது போடக்கூடிய தண்ட வரியை ரத்து செய்யவேண்டுமென்பதில் எங்களுக்குள் அபிப்பிராய பேதமே கிடையாது. நண்பர் ஸ்ரீ கே. ஆர். நல்லசிவம் அவர்கள்கூட இங்கேதான் இருக்கிறார். வேண்டுமானால் கேட்டுக்கொள்ளலாம். எப்படியாவது தண்டவரியை ரத்து செய்யவேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொள்ளுகிறோம்."

*** SRI N. K. PALANISAMY** :—" கனம் மந்திரி அவர்கள் சரிவர பதில் சொல்லாமலேயே சர்க்கார் உத்திரவைப் படித்துவிட்டார். ஏதோ தவறுதலாக புது வாய்க்காலிலிருந்து தண்ணீர் எடுத்து நெற் பயிர் சாகுபடி செய்துவிட்டார்கள். அதற்காக தண்டத் தீர்வை போட்டிருப்பதினால் அங்கேயுள்ள விவசாயிகளுக்கு கொதிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த வரியை ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டோம். ஆனால் அதற்கு மந்திரி அவர்கள் பதில் சொல்லவில்லை."

Report of the District Revenue Administration Enquiry Committe—Request for discussion.

SRI M. NARAYANA KURUP :—" Mr. Speaker, a very important report, viz., the Report of the District Revenue Administration Enquiry Committee and the decisions of the Government on it have been placed on the table of the House. These are very important documents. I would like to know whether this House will be given an opportunity to express its opinion on the same."

THE HON. SRI C. SUBRAMANIAM :—" I shall consider the suggestion of the hon. Member."

III.—GOVERNMENT BILL.

THE MADRAS CULTIVATING TENANTS PROTECTION BILL, 1955.

* THE HON. SRI M. A. MANICKAVELU :—" Mr. Speaker, Sir, I beg leave to introduce the Madras Cultivating Tenants Protection Bill [a], 1955 and move—

'*That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses consisting of 30 Members, 20 Members from the Assembly and 10 members from the Council to consider the Madras Cultivating Tenants Protection Bill, 1955, and that the following Members of this House be selected to serve on such a Joint Select Committee.*'

" I will give the names of Members later on, Sir.

" As already stated by the Governor in his Address certain Constitutional and legal difficulties have arisen in implementing the comprehensive land reforms which are under the consideration of the Government and they are examining how best to overcome the difficulties.

a Published in *Fort St. George Gazette*, dated 3rd August 1955.

[Sri M. A. Manickavelu] [6th August 1955

"Meanwhile it has been brought to the notice of the Government that in anticipation of land reforms legislation and the possible fixation of ceilings on holdings, owners of land are evicting cultivating tenants with a view to bringing the land under their personal cultivation. Such evictions will, if allowed to continue, lead to agrarian trouble, disturbances and to breach of the peace. The Bill accordingly seeks to provide that subject to the payment of current rent no cultivating tenant shall be evicted from his holding for a period of one year. This protection will not apply to a cultivating tenant who has done any act or has been guilty of any negligence which is destructive of or injurious to the land or any crop therein or has altogether ceased to cultivate the land or has used the land for any purpose contrary to that for which the land was let. The Bill provides for the restoration of cultivating tenants who were in possession of any land on 1st December 1954 on application to the Revenue Divisional Officer except when they have been evicted under the orders of the competent court or the landlord subsequent to 1st December 1954 *bona fide* had admitted some other cultivating tenant to possession of the land and such other tenant had cultivated the land before the day when this Bill becomes law.

"As the intention of the legislation is to protect the cultivating tenants against arbitrary eviction by the landlord, and not one class of tenants against other, the Government consider that the *bona fide* cultivating tenants admitted after 1st December 1954 need not be disturbed if they had already taken to cultivate the land. This Bill will not apply to areas where the Malabar Tenancy Act of 1929 and the South Kanara Cultivating Tenants Protection Act, 1954, are in force and the lands to which the Tanjore Tenants and Pannaiyal Protection Act, 1952, applies. This is only an interim measure brought forward to meet an emergent situation and will therefore remain in force only for a year for the present. Another Bill for the fixation of fair rent for other than the Malabar Tenancy Act areas will be brought forward shortly. Sir, I request the House to accept this motion."

MR. SPEAKER :—" Motion moved—

'That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both Houses consisting of 30 Members, 20 Members of the Assembly and 10 Members of the Council to consider the Madras Cultivating Tenants Protection Bill, 1955 and that the following Members of this House be selected to serve on such a Joint Select Committee.'

"I think the hon. the Leader of the Opposition has given notice of a motion to refer the Bill to a Committee of this House. I think he is not moving it.

"The motion is before the house for discussion."

* SRI M. NARAYANA KURUP :—" Mr. Speaker, Sir, while I appreciate the Government's stand in referring the Bill to a Joint Select Committee, it is my opinion that there cannot be any

6th August 1955] [Sri M. Narayana Kurup]

substantial alteration in the provisions of the Bill in view of the very restricted scope. I have never seen any tenancy legislation which is so hollow as this. Of course, this measure is a face-saving retreat from the brave words that have been spoken by men of authority before the public. We know that our Chief Minister is a people's representative sharing their hopes and aspirations. But he is surrounded by interests from which he cannot extricate himself. While speaking on the purity resolution in Avadi Congress, Pandit Nehru feelingly referred to the influx of elements in post-independent Congress and he said that Congress could be a useful instrument of public service only if the Congress workers could purge the Congress organization of these impurities. I need not say whether the position has improved or worsened after this Session of the Congress. Events are showing that vested interests are having their strangle-hold on this organization more and more every day. We find now that the excuse given for failure to implement a comprehensive agrarian reform is one of constitutional difficulty. So far as I know no other State has raised this bogy of Constitutional difficulty. I submit it is only an excuse to postpone agrarian reforms. Even in its restricted scope, the present Bill is very defective in its drafting in one or two respects. I would like to point out that it will take away the entire benefit that is sought to be conferred on the cultivating tenant. For instance it begins by saying that a tenant cannot be evicted by a landlord except under the following conditions. The conditions themselves are so comprehensive and can be interpreted in such a manner that no tenant's position is safe. Apart from that the Bill presupposes that there are only two elements to be considered, that is, the landlord and the cultivating tenants. But, Sir, take for instance a big landlord or a mirasdar who has given on lease hundred acres of land to 'A'. There are under 'A' ten other tenants who are cultivating the land. There are numerous cases of this kind. I have consulted my Friends on this side as to the position in Tamil district about this. I have been assured that there are innumerable cases where the cultivating tenants are holding land not directly under the landlord but as sub-tenants under intermediary landlords. Now what is their position? It has been held by the Madras High Court that such cultivating tenants are not tenants of the landlord and they can be absolutely turned out of their possession however long they might have been there without any excuse and irrespective of any provision that might be contained in this Act.

"Another point is this. It has been stated that arrears of rent is one ground for eviction. I agree, if a tenant fails to pay fair rent within a fixed period, it may be a ground for eviction. But in this connection we must consider this fact. The Government have not sought to bring in a Bill for fixation of fair rent even till today. It may be that the holdings are rack-rented and the tenants are unable to pay the contract rent that is now existing. We have had instances in Malabar where the existing rents have been reduced to one-half or one-fourth or even less. It may be that Government propose to bring in such a Bill. When fair rent is fixed, the rent

payable by a tenant would be far less. Therefore till that Bill comes into force, the tenant will have to pay rent, that is the rack-rent. This he might be unable to pay. For his inability to pay this rack-rent under the provisions of this Bill he will be straightway evicted. Therefore without a provision for fixing fair rent, if the tenant is to be evicted from the land if he fails to pay existing rent, that would be negativing the very limited benefit that is proposed to be conferred on him by this Bill. Even assuming that non-payment of rent is to be a cause for eviction, it is well-known that in many cases, common law recognises that in such suits if the tenant deposits into court the arrears of rent and cost, he is given relief against forfeiture. There is such a provision in the Transfer of Property Act. There is that provision under the Rent Control Act. Even that salutary provision is absent in this Bill. Within one month if the tenant fails to pay the rack-rent, assuming it is so, then he has no remedy even though at a later stage he deposits it into a court.

9-50 a.m. "Sir, these are not important points. Of course, there are technical and legal defects in this Bill which I do not wish to go into now, inasmuch as it is going to the Select Committee. It would have been proper and we could have appreciated the intention of the Government, had they brought forward the Bills relating to fixity of tenure and the fixation of fair rent simultaneously, as has been done in some other States. We know in the Travancore-Cochin State they brought forward seven Bills simultaneously so that they could be considered as a whole and a correct appraisal of reaction on each of the Bills could be made. Therefore, I submit that this is only a temporary and face-saving measure and ultimately it will not bring to the tenants even the limited benefit which the Government intend to confer upon them."

***Sri C. Kandasamy**:—"உதவி சபாநாயகர் அவர்களே, கனம் ரெவின்யூ மந்திரியார் அவர்கள் பிரேரேபணை செய்த நில வெளியேற்றத்தைத் தடுக்கும் இந்த மசோதாவைப்பற்றி பொதுப்படையாக சில வார்த்தைகள் கூற முன் வந்திருக்கிறேன். இந்த ஏற்பாடானது, இனி மேல் கொண்டு வரப்போகும் நிலச் சீர்திருத்த சட்டத்திற்கு, முதல்படி என்று கவர்னர் அவர்கள் பிரசங்க உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த மசோதா சட்டமாகி நடைமுறைக்கு வந்த பிறகு, வாரம், குத்தகை என்பதை நிர்ணயிக்கும் மசோதா வரும். அதற்குப் பிறகு ஒருவர் நிலம், எவ்வளவு வைத்துக் கொள்ளலாம் என்பது பற்றிய மசோதா வரும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த அரசாங்கத்தில், இதுவரை, நில வெளியேற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களுடைய நிலைமையைப்பற்றி கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டும். தொன்றுதொட்டு, சம்பிரதாய மாக உழுது கொண்டு வந்த விவசாயிகள் நிலத்திலிருந்து வெளியேற்றப் பட்டிருக்கிறார்கள். அவர்களை மறுபடியும் அந்த நிலத்தில் புகுத்தி, அவர்கள் மறுபடியும் சாகுபடி செய்ய சர்க்கார் இந்த மசோதாவின் மூலம் உதவி செய்யப் போவதாக யாரும் நினைத்துவிடக் கூடாது. ஏனென்றால் சென்ற சில வருஷங்களாக, தஞ்சாவூர் பண்ணையாள் பாது காப்புச் சட்டம் எப்படி அமுலாக்கப் படுகிறதென்பதை அனுபவத்தில் கண்டிருக்கிறோம். இந்த பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் அமுலுக்கு வந்த பிறகு நம் நாட்டிலுள்ள தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள விவசாயிகள், தங்கள் வாழ்க்கையில் ஏதாவது முன்னேற்றம் அடைந்திருக்கிறார்களா என்று பார்த்தால், அது தான் கிடையாது. அங்கிருக்கும் மிராசுதார்கள் இந்த சட்டம் வந்தவுடன், என்றாவது ஒரு நாள் நிலச்சீர்திருத்த சட்டம்

6th August 1955] [Sri C. Kandasamy]

வர வேண்டிய நிர்ப்பந்தம், இந்த நாட்டிலே வரும், அதனால் தங்களுடைய நன்மைகள், பொருளாதாரம் சுகமெல்லாம் பாதிக்கப்படும் என்று உணர்ந்து, தங்களுடைய சொத்துக்களுக்கு பாதுகாப்பு தேட ஆரம்பித்து விட்டார்கள். குறிப்பாக தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள மிராசுதாரர்களுக்கு, தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்பு சட்டம் வந்தவுடன், இந்த உண்மையை எடுத்துக் காட்டிற்று. அந்த நிலைமையில் தற்போது அவர்கள் எப்படியாவது நிலச் சீர்திருத்தம் வந்து விடும் என்று புரிந்துகொண்டு அவரவர்கள், தங்கள் தங்கள் நன்மைகளையும் அதற்கு அஸ்திவாரமான தங்கள் நிலங்களையும் பாதுகாத்துக்கொள்ள, பலவிதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். நில சீர்திருத்தம் வந்தால் பெரிய மிராசுதார்கள் தங்களுடைய நிலங்களை சர்க்காரே எடுத்துக் கொள்ளும், அல்லது குடியானவர்களுக்கு பகிர்ந்து கொடுத்து விடுவார்கள் என்பதையும் உணர்ந்து அவர்கள் இப்போது, அவர்களுடைய நிலங்களை, தங்கள் சொந்தக்காரர்கள், உற்றார் உறவினர்கள், இவர்களுக்கு பிரிவினை செய்து கொடுப்பது என்ற காரியத்தில் வெகு தீவிரமாக முனைந்து வேலை செய்கிறார்கள். சென்ற ஒரு வருஷமாக, இந்த சபையிலே, தஞ்சை ஜில்லாவிலும் மற்ற இடங்களிலும் நிலவெளியேற்றம், கொடுமையாகவும், அக்கிரமமாகவும் செய்யப்படுகிறது. பல்லாயிரக் கணக்கான விவசாயிகள், அதனால் பிழைப்பில்லாமல் கஷ்டப்பட்டு வதிந்து கிடக்கிறார்கள். அவ் விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டியது சர்க்காரின் முக்கிய தீராக் கடமையாகும் என்பதை சுட்டிக்காட்டி வந்திருக்கிறோம். 'நாங்கள் அப்பவே சொன்னோம்' நிதி மந்திரி அவர் சொல்லுவது போல், நாங்கள் என்கிறபடி சம்பிரதாயத்துக்கு சின்ன விஷயங்களைப்பற்றி சொல்லவில்லை. நிலவெளியேற்ற பிரச்னை, ஒரு கிராமத்தின் நிலைமையையே மாற்றக் கூடியதாக இருக்கிறது. அதனால், நாட்டையும், அதன் மக்களையுமே பெரிதாக இச்செய்கை பாதிக்கும். எதிர் கட்சிக்காரர்கள் இதை அடிக்கடி இச்சபையில் எடுத்துகாட்ட கடமைப்பட்டிருக்கிறார்கள். எங்களைப் போன்றவர்கள், நன்றாக கிராமப் பிரச்னைகளையும், நிலவெளியேற்றத்தால், விவசாயிகளும், அதாவது நூற்றுக்கு 85-யாக உள்ள நாட்டுக்கு முதுகெலும்பான விவசாயிகள் எப்படி பாதிக்கப்படுகிறார்கள் என்பதை நன்றாக உணர்ந்துதான், விவசாயிகளைப்பற்றி சதா சொல்லிக் கொண்டே இருக்கவேண்டியதாக இருக்கிறது. அதே சமயத்தில் நிலச் சீர்திருத்த சட்டம் கொண்டு வருவதாக இருந்தாலும், அதை நிறைவேற்ற பல சிக்கல் இருப்பதாகவும் அரசியல் சட்டம் குறுக்கே நிற்பதாகவும் இந்த அரசாங்கம் சொல்லுகிறது. ஒரு அரசாங்கம், தாங்களாகவே முன் வந்து, மக்களுக்காக, ஒரு நன்மையையோ, சீர்திருத்தத்தையோ செய்வார்கள் என்பது சரித்திரத்திலேயே கிடையாது. அவ்விதமாக நாம் நம்பினால், நாம் ஏமாந்து போய் விடுவோம். மக்களுடைய கஷ்டங்களை போக்கிக்கொள்ள, தங்களுடைய கோரிக்கைகளை அடைய இன்றைய தினம் சாதாரணமாக கிளர்ச்சி செய்வதும், போராடுவதும் எல்லா தேசங்களிலும் ஏற்படக்கூடிய நிகழ்ச்சியாகும். அவ்வித போராட்டங்கள் நிகழ்த்தி சர்க்காரை நிர்ப்பந்தப்படுத்தின பிறகுதான், சர்க்கார் ஏதாவது மக்களுக்கு நன்மை செய்ய வரும். மக்கள் கோரிக்கைகளை மதித்து அதற்கான நடவடிக்கைளை எடுக்க முன் வரும். ஆகவே, மக்கள் விவசாயிகள் பல போராட்டங்கள் நடத்தினதின் காரணமாகவே, இச்சர்க்கார் ஏதோ ஒரு கண்துடைப்பு மசோதாவாவது, விவசாய மக்களுக்காக இப்போது கொண்டு வருகிறது.

"நம் நாட்டிலே, நிலவெளியேற்ற செயல்களின் காரணமாக, பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், பிழைப்புக்கு வழி இல்லாமல் தொல்லைகளை அநுபவிக்கிறார்கள் என்பது உலகமறிந்த உண்மை. ஆனாலும் சமீப காலம்வரை, கனம் முதல் மந்திரியார் அவர்கள், இந்த ராஜ்ஜியத்திலே, எந்த விதமான நில வெளியேற்றமும் கிடையாது என்று சொல்லிக்கொண்டே வந்திருக்கிறார்கள். என்றாலும், விவசாயிகள் நிலவெளியேற்றம் ஏற்பட்டு, ஆங்காங்கு,. விவசாயிகளுடைய கூக்குரல் கட்டுக்கு அடங்காத நிலைமைக்கு வந்துகொண்டிருப்பதை நாம் யதார்த்த ரூபத்தில் பார்க்கிறோம். இதிலே ஒன்றும் ஒளிவு மறைவு இல்லை. நான் சொல்லுவது மாத்திரமல்ல. தற்போது திருச்சி ஜில்லாவில்

சில தாலுக்காக்களில் இந்த நிலவெளியேற்றத்தை எதிர்த்து, விவசாயிகள் பல போராட்டங்கள் நடத்துகிறார்கள். கம்யூனிஸ்டுகள் மட்டும்தான் இவ்வித போராட்டங்கள் நடத்துகிறார்கள் என்பது உண்மையல்ல. வேறு கட்சிக் காரர்கள் மட்டுமல்ல. விவசாயிகள், தங்களுடைய பிழைப்புக்கு வழியாக உதவியாக இருந்த நிலங்களிலிருந்து வெளியேற்றப்பட்டால், கண்டிப்பாக தங்களுடைய ஜீவ-மரண போராட்டத்தை நடத்துவார்கள் என்பதை நிதர்சனமாக பார்க்கிறோம். அப்படி போராட்டத்தின் மூலம் நிலச்சுவான் தார்கள் நிர்பந்தப்படுத்தப்பட்டால், போலீஸ் உதவியுடன், நிலச்சுவான் தார்கள், போராட்டத்தில் ஈடுபடும் விவசாயிகளை, வாழவைக் காமல் செய்ய, சிறையில் போட்டு அடைத்து ஒடுக்க, தயாராக இருக் கிறார்கள் என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. இம்மாதம் 30, 31-ம் தேதியில், மதுரை டவுனுக்கு சமீபத்தில், கலெக்டர் ஆபீஸ் பக்கத் தில், பட்டிமேடு என்ற கிராமம், ரோட்டுக்கு சேர்ந்தாற்போல் இருக்கிறது. அங்கு, மிராசுதாரர்கள் செய்த நிலவெளியேற்றத்தை எதிர்த்து, தடுத்து, அங்கிருக்கும் விவசாயிகள் போராட்டம் நடத்தினார்கள். அதிலே 30 விவ சாயிகளை அரஸ்ட் செய்துகொண்டு போய்விட்டார்கள். பலரை நன்றாக போலீசார் அடித்திருக்கிறார்கள், மண்டைகளை பிளந்திருக்கிறார்கள். இந்த நிகழ்ச்சி சர்வ சாதாரணமாக, இந்த அரசாங்கத்தில் நம் ராஜ்ஜியத்தில் நடந்து கொண்டிருக்கிறது. இதை யாரும் மறுக்கமுடியாது. நமக்கும் தெரியாமல் சில இடங்களில் ரகசியமாகவும், தந்திரமாகவும் நில வெளி யேற்றம் ஏற்பட்டிருக்கிறது. குடியானவர்களுக்கு நிலத்தை கொடுக்கிறேன், இந்த நிலத்திற்கும் உங்களுக்கும் சம்பந்த மில்லை, சட்டபூர்வமாக நில த்தை நெடுநாளாக உழுகிறேன் என்ற வார்த்தை போடாமல், ஒரு ஓலை எழுதிக்கொடு, பிறகு உங்களுக்கு சாஸ்வதமாக நிலத்தை கொடுக்கி றேன் என்று சில அப்பாவி விவசாயிகளிடம் எழுதி கையெழுத்து வாங்கி இருக்கிறார்கள். இதை ஏன் கூறுகிறேன் என்றால் இம்மாதிரி பல்லா யிரக்கணக்கான அப்பாவி விவசாயிகளிடம், மிராசுதார்கள் எழுதி வாங்கி தஞ்சை ஜில்லாவிலே நிலவெளியேற்றம், தஞ்சை பண்ணையாள் பாது காப்பு சட்டம் வந்த பிறகு செய்திருக்கிறார்கள் என்பதை கனம் ரெவினியூ மந்திரியார் அவர்கள் அறிந்து கொள்ளத்தான். இதை கனம் மந்திரி யார் அவர்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும், இந்த மசோதா சட்டமாக ஆகுமுன்.

" இந்த மசோதாவின் நோக்க மெல்லாம் ஒரு அளவுக்கு, வரையறைக்கு உள்பட்டதாகும். குறிப்பிட்ட காலத்தில், நியாயவிரோதமாக நிலவெளி யேற்றப்பட்ட குடியானவர்களை, மீண்டும், அந்நிலங்களில் புக, உரிமை கொடுப் பதே இதை சர்க்கார் பரிபூரணமாகச் செய்யவேண்டும். விவசாயி களுக்கு இவ்வுரிமையை கொடுப்பதற்கு, சில நிபந்தனைகளும் இம் மசோதாவில் சொல்லப்பட்டிருக்கின்றன. அதாவது குத்தகை பாக்கி யிருந்தால், இம்மசோதா சட்டமான ஒரு மாதத்திற்குள் கொடுத்துவிட்டால் நில வெளியேற்றப்பட்ட விவசாயிக்கு மீண்டும் அந்நிலத்தில் உழும் உரிமை கொடுக்கப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நானோ, என்னைச் சார்ந் தவர்களோ, அந்த விவசாயி பாக்கி கட்டவேண்டாம், பாக்கி கொடுக்கவேண் டியது நியாயமில்லை, கடன், குத்தகைபாக்கியை, திருப்பிக் கொடுக்காமல் இருக்கவேண்டுமென்று சொல்லவில்லை. அதே சமயத்தில், அந்த விவ சாயிகள் குத்தகை பாக்கியை கொடுக்க முடியாத நிலைமையில் இருக்கிறார்கள் என்று நாங்கள் சொன்னால், அது எப்படி என்று ஆலோசிக்கவேண்டும் இந்த சர்க்கார். நீண்ட நெடு நாளாக நிலத்தில் உழுது, குத்தகைக்கு உழுது வாழும் குடியானவன் இருக்கிறான்; இன்னொருவித பணக்கார குடியானவன் இருக்கிறான். இவன், தன் சொந்தத்திலுள்ள 10 ஏக்கர் நிலத்தையும் சாகுபடி செய்து குத்தகைக்கு சுமார் 50 ஏக்கராவரையில் வாங்கி, 4 ஆயிரம், 5 ஆயிரம் ரூபாய் மூலதனம் போட்டு சாகுபடி செய்யும் படியான நிலைமையில் உள்ளவர்கள் அநேகர் இருக்கின்றனர். இவர்கள், தங்களுடைய நிலங்களை மேற்பார்வை பார்த்துக் கொண்டு, குத்தகைக்கு வாங்கின நிலங்களை, கீழ் குத்தகைக்குவிட்டு, பணத்தை சம்பாதிப்பவர்கள். அவர்களுக்கும் இந்த மசோதாநன்மை அளிக் கிறது என்பதற்காக நான் பொறாமைப்படவில்லை. அவர்களும் இதனால் நன்மை அடைவதைப்பற்றி ஆட்சேபணையில்லை. இன்னொருவிதமான

6th August 1955] [Sri C. Kandasamy]

குடியானவர்கள் ஜனத்தொகையிலேயே பெரும் பகுதியாக இருக்கிறார்கள். இவர்கள் எற்கனவே நிலம்வைத்திருந்து, வாழ்ந்துகொண்டிருந்தவர்கள். ஆனால் இவர்கள் நாளடைவில், நிலபிரபுத்துவ, ஆதிக்கத்திற்கு இரையாகி விட்டு, தங்கள் நிலங்களை, பெரிய மிராஸ்தாரர்களுக்கு விற்றுவிட்டு, இன்றையதினம், இந்த நாட்டிலே, தங்கள் குழந்தைகள், குடும்பங்கள் வாழவேண்டுமென்பதற்காக, யாரையாவது கெஞ்சி, நான்கு எக்கர் நிலம் குத்தகைக்காக வாங்கி, உழவுக்காக பணம் கடன் வாங்கிபோட்டு, நிலத்தை உழுது அதிலே வரும் ஊதியத்தை, வருவாயை வைத்துக்கொண்டு காலம் தள்ளுபவர்கள். இவர்கள் பல்லாயிரக்கணக்கானவர்கள் இந்த நாட்டில் அவதியுறுகின்றனர். இப்பேர்பட்ட குடியானவர்கள், தங்கள் குழந்தைகளுடைய கல்யாணம், படிப்பு முதலியவைகளுக்கு செலவு செய்யவேண்டியதாக இருப்பதால், சாதாரணமாக, இம்மாதிரி குடியானவர்கள்மேல் ஒரு வருஷம், இரண்டு வருஷம் குத்தகைபாக்கி இருக்கத்தான் செய்யும் என்பதை கனம் மந்திரியவர்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். மீண்டும் அவர்கள் அந்த குத்தகை பாக்கியை திருப்பிக் கொடுக்கவேண்டுமென்றால், அதற்கு, கால வரையறை எல்லாம் தேவைப் படும். திடீரென்று அந்த பாக்கியை திருப்பிக் கொடுக்கவேண்டுமென்று மசோதாவில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதன்படி, நடந்து கொள்ள வேண்டுமென்று நிலவெளியேற்றப்பட்ட விவசாயியை நிர்ப்பந்தம் செய்தால் என்ன ஆகும் என்பதை யோசிக்கவேண்டும். 1954-ம் வருஷம் டிசம்பர் மாதம், நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்ட விவசாயி என்ன கெதியில் இருப்பான் என்பதை நம் மனக்கண்முன் கொண்டுவந்து பார்க்க வேண்டும். தன்னுடைய சொந்த நிலத்தை நில பிரபுத்துவம் விழுங்கி விட்டது. தான் குத்தகைக்கு கஷ்டப்பட்டு கெஞ்சி எடுத்து உழுதுகொண்டிருந்த நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டுவிட்டான். அந்த நிலத்திலிருந்து, இந்த வருஷத்தில் ஏதோ 10 கலம் நெல் வரும், அதைக் கொண்டு மனிதனாக இவ்வருஷம் காலந்தள்ளலாம் என்ற எண்ணம் இருந்திருக்கும். அந்த எண்ணத்தில் மண் விழுந்துவிட்டது. இந்த நிலவெளியேற்றத்தினால் மற்ற ஜனங்கள், அவனைப்பற்றி பேசும்போது, அவனிடம் ஒன்றும் கிடையாது, உழுவதற்கு நிலம்கூட இல்லை, அவன் தற்போது ஒரு அன்னக்காவடி என்று நினைத்து அவனுக்கு கைமாற்று கடனாகக்கூட ஒரு காசும் கொடுக்க மாட்டார்கள். வீட்டிலுள்ள பித்தளைச் சாமான்கள், மற்ற சாமான்களை அடகு வைத்துத்தான் இந்த எட்டு மாதகாலமாக ஜீவனம் நடத்தி வருகிறான். இந்த நிலைமையிலுள்ள ஒருவனை, ஒரு விவசாயியை திடீரென்று, இன்னும் ஒரு மாதத்திற்குள் சென்ற காலத்தில் கொடுக்க வேண்டிய பாக்கியான 80 கலம் நெல், நானூறு ரூபாய் அல்லது ஐந்நூறு திருப்பிக்கொடுக்க வேண்டுமென்று நிபந்தனை போட்டால், அது எந்த நிலைமைக்கு அவனை கொண்டுபோய்விடும், இந்த நாட்டின் நிலைமைதான் என்ன ஆகும் என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். யதார்த்தத்தில் பாடுபடும் குடியானவனுக்கு வாழ்கைதரம் உயர நிலச் சீர்திருத்தம் வேண்டுமென்றும், அவர்களுடைய வாங்கும் சக்தி அதனால் அதிகரிக்க வேண்டுமென்று நினைக்கிறோம். இந்த நிலைமையிலுள்ள விவசாய குடியானவன், இந்த மசோதாவால், இந்த நிபந்தனையால் என்ன பலன் ஏற்படமுடியும் ? குத்தகை பாக்கியை கொடுக்கவேண்டாமென்று சொல்லவில்லை. எதற்காக இதை எல்லாம் சொல்லுகிறேன் என்றால், இந்த மசோதாவின் நோக்கத்தின்படி 1-12-1954 வரை வெளியேற்றப்பட்ட குடியானவர்களில் நூற்றுக்கு 10 பேருக்குக்கூட நன்மை ஏற்படாதே என்று தெரிவதால்தான். எனவே, இந்த மசோதாவை மிக முக்கியமாக கவனித்து சில மாறுதல்கள் செய்தாலொழிய இதனால் எந்த விவசாயிக்கும் அநுகூலம் ஏற்படாதென்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

"குத்தகை பாக்கி என்பதே, மிராசுதார்கள் விவசாயிகளை, பணயமாக வைத்துக்கொண்டு அடிமைகளாக, தங்களின் கீழ் இருக்கச் செய்யும் ஒரு சாதனமாகும். மிராசுதார்கள், குடியானவன் கொடுக்க முடியாத குத்தகையை மேலும் மேலும் சேர்த்து, அதற்காக அவனிடத்திலிருந்து எழுத்து மூலமாக எழுதி வாங்கிக்கொண்டு அந்த பாக்கி பணத்திற்காக, அவனை பணயம் வைத்துக்கொண்டு, அவன் தன்னிடம் அடங்கி, ஒடிங்கி

[Sri C. Kandasamy] [6th August 1955

நடப்பதற்காக, அந்த பாக்கித் தொகையை, ஒரு ஜாமீன் தொகை மாதிரியாகவே கருதிக்கொண்டிருப்பார்கள். குடியானவன் நியாய பூர்வமாக தன் குடும்பத்திற்கு செலவு செய்ததாலே, குத்தகை பாக்கித் தொகை கட்டமுடியாமல் நின்றுவிடுகிறது. அனுவசியமாக செலவழித்தோ திருவிளையாடல்கள் புரிந்தோ, அப்பாக்கித் தொகையை கட்டமுடியாத நிலைமை அவனுக்கு ஏற்படவில்லை. தன்னுடைய குழந்தைகளுடைய சௌகர்யத்திற்கு, படிப்புக்கு, கல்யாணத்திற்கு நியாயமாக செலவழித்ததின் காரணமாகவே, அவன் கடனாளியாகிறான். இந்த நிலைமையில், நிலவெளியேற்றத்தால் பாதிக்கப்பட்ட விவசாயியை, ஒரு மாதத்திற்குள் குத்தகை பாக்கிப்பணத்தை திருப்பிக் கொடுத்துவிடவேண்டுமென்று நிபந்தனை ஷரத்து ஊர்ஜிதம் ஆகிவிட்டால், அதனால், குடியானவர்களின் ஒற்றுமையை குலைக்க காத்துக்கொண்டிருக்கும் மிராசுதாரர்களுக்குத் தான் உதவிகரமாக இருக்குமேயொழிய, நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டு அவதியுறும் குடியானவனுக்கு யாதொரு நன்மையும் ஏற்படாது என்று சொல்ல விரும்புகிறேன்.

"இந்த மசோதாவின், காலவரை ஒரு வருஷம்தான். ஆனால் தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தின் காலவரை 5 வருஷம். இதையும் முக்கியமாக கவனித்து, இதனுடைய காலவரையையும் ஏன் 5 வருஷங்கள் ஆக்கக்கூடாதென்று யோசிக்கவேண்டும். இந்த சந்தர்ப்பத்தில் ஒன்று குறிப்பிட ஆசைப்படுகிறேன். சீக்கிரம் நிலச்சீர்திருத்த சட்டம் கொண்டு வரப்படுமென்று சர்க்காரால் சொல்லப்பட்டது. கனம் ரெவினியூ மந்திரியார் அவர்கள், இந்த நில சீர்திருந்தச் சட்டம் ஆகஸ்டு மாதத்திலேயே வந்துவிடுமென்று சொல்லியிருக்கிறார்கள். முதல் மந்திரியும் அவ்விதமே பல இடங்களில் கூறி இருக்கிறார்கள். ஆனால் ஆகஸ்ட்டு மாதத்திற்கு 10 நாளைக்கு முன்பு, அச்சட்ட சம்பந்தமான யோசனைகளை இந்திய சர்க்காருக்கு அனுப்பி விட்டதாகச் சொன்னார்கள். மந்திரிகளினுடைய நல்ல நோக்கத்தைப்பற்றியோ, காங்கிரஸ் கட்சியிலுள்ள முற்போக்கு வாதிகளையோ, இது விஷயமாக நான் சந்தேகிக்கவில்லை. ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். தஞ்சாவூர் ஜில்லா காங்கிரஸ் யார் கையில் இருக்கிறதென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அவ்வூர் காங்கிரசில், நிலப்பிரபுக்களுடைய செல்வாக்கு சக்தி வெகுவாக ஓங்கி நிற்கிறது. தஞ்சாவூர் ஜில்லா 5, 6 காங்கிரஸ் கமிட்டி மெம்பர்கள், 10 ஆயிரம் ஏக்கர் கணக்கில் ஒவ்வொருவரும் நிலங்களை வைத்திருக்கிறார்கள். கனம் காமராஜர், மாணிக்கவேலர் இவர்களுடைய நல்லெண்ணத்தை நான் சந்தேகிக்கவில்லை. அந்த நிலபிரபுக்கள், காங்கிரசிலே, ஓரளவுக்கு நல்ல பலம் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் அந்த பலத்தைக்கொண்டு, இவர்களை முற்போக்கு பாதையில் செல்ல முடியாமல் முட்டுக் கட்டை போடுகிறார்கள், இவர்களை பிடித்து இழுக்கிறார்கள். தற்போது கொடுத்திருக்கும் காலவரை, ஒரு வருஷமாக இருப்பது போதாது; விவசாயிகளுக்கு நல்ல ஒரு உற்சாகமூட்டுவதற்கும் அவசியம்; மற்றும், இந்திய சர்க்காரிடம் இந்த சர்க்கார் சில சட்ட நுணுக்க பிரச்சனைகளை தீர்க்க தொடர்பு கொண்டிருக்கிறது, ஆகவே, விவசாயிகளுக்கு நிலச் சீர்திருத்தத்திற்கு உத்திரவாதம் கொடுக்கும் முறையில், இந்த காலவரையை ஐந்து வருஷங்களாக ஏன் மாற்றக்கூடாது என்பதையும் கனம் மந்திரியார் அவர்கள் கவனிக்க வேண்டுகிறேன். அப்படி ஏற்பட்டால், என்ன தப்பு ஏற்படும்? பின்னால் நிலச் சீர்த்த சட்டம் வந்தவுடன், அதை ரதது செய்துவிட்டால் அது தானாகவே ரத்தாகிறது.

"தஞ்சாவூர் ஜில்லாவிலோ, பண்ணையாள் பாதுகாப்பு சட்ட விஷயமாக எழும் தகராறுகளை, ஒரு டிப்டி கலெக்டரிடம் போய்தான் தீர்த்துக் கொள்ளவேண்டுமென்று நிர்ணயித்திருக்கிறார்கள். தஞ்சாவூர், பட்டுக்கோட்டை, மன்னார்குடி, இம்மூன்று தாலூக்காக்களிலும் ஏற்படும் தகராறுகளைத் தீர்க்க ஒரு டெபுடி கலெக்டரை ஏற்படுத்தி இருக்கிறார்ள். தஞ்சை பண்ணையாள் பாதுகாப்பு சட்டப்பிரகாரம், ஒரு ஐந்து ரூபாய் கூலி பாக்கிக்காக பிராது போடவேண்டுமென்றால், சுமார் 40 மைல், 50 மைல் பிரயாணம் செய்து டிப்டி கலெக்டரிடம் போய், அப்பிராது கொடுக்கவேணடும். அதன் **summon process** செர்வ்

6th August 1955] [Sri C. Kandasamy]

செய்வதற்கு பணச்சிலவு, வக்கீல் சிலவு முதலிய செலவுகள் அச்சிறிய கூலி பாக்கிக்காக, ஒரு விவசாயி செய்யவேண்டியதாக இருக்கிறது. இவ்வளவு செலவு செய்தும், அவனுக்கு நியாயம் கிடைப்பது துர்லபமாக இருக்கிறது. ஆகவே, எந்த நிலச் சீர்திருத்தம் வந்தாலும், அதிலே குறிப்பிட்ட சலுகைகள், விவசாயிக்கு கிடைக்கவேண்டுமென்ற அக்கரையை, கவனத்தை, ஸ்ரத்தையை எடுத்துக்கொண்டாலும், நில வெளியேற்றம் கூடாதென்று சொன்னாலும், இன்று இருக்கும் ஜனநாயக அமைப்பு, கிராம அமைப்பு எப்படி இருக்கிறதென்பதைப் பார்க்கும்போது, நிலப் பிரபுக்கள், அந்த சட்டங்களை புறக்கணிக்கவும், துர்விநியோகம் செய்யவும், அதிகாரத்திலுள்ள கட்சியில், தங்களுக்குள்ள செல்வாக்கையும், சக்தியையும் உபயோகப்படுத்தி, சூழ்ச்சிகள் செய்து, முடிவில் விவசாயிகள் பயன் அடைவதற்குப் பதிலாக, துன்பமே அடைகிறார்கள். அந்த சட்டங்களால், என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, கிராமங்களுக்கு அதற்கென்று நியமிக்கப்பட்ட அதிகாரிகள் நேரில் சென்று, ஏற்கனவே அங்கிருக்கும் நிலங்களை யார் விவசாயம் செய்தார்கள், யார் யார் உண்மையில் குத்தகைக்கோ, வாரத்திற்கோ வைத்துக்கொண்டிருந்தார்கள் என்பதையெல்லாம் விசாரித்து அறிந்தாலொழிய, தற்போதைய மசோதாவில் குறிப்பிட்டபடி, ஏற்கனவே பெரிய ஜூரிஸ்டிக்ஷனும், பல வேலைகள் வைத்துக்கொண்டிருக்கும் டிப்டி கலெக்டர்களிடம் இந்த நில வெளியேற்ற விஷயமாக, மனு போட்டு, ருசுப்படுத்தி, தங்களுடைய நிலங்களை, அடையவேண்டுமென்றால், கட்டாயம், இந்த துர்பாக்கியமான, விவசாயிகளுக்கு இந்த மசோதாவின் கீழ் நியாயம் கிடைக்காது, என்ன முயற்சித்தாலும் நியாயம் கிட்டாது என்பது மாத்திரம் திண்ணம்.

" ஆகவே நீங்கள் சர்க்கார் செய்ய உத்தேசித்திருக்கும், இந்த சின்ன சலுகையையாவது, அவ்விவசாயிகளுக்கு கிடைக்கும்படியாக செய்யவேண்டும். இதற்கு வேண்டிய ஏற்பாடுகள் இந்த மசோதா சட்டம் ஆவதற்குள் செய்து முடிக்கவேண்டும். தஞ்சை சட்டம் வந்த பின்னும் ஒரு நாளைக்கு இரண்டு படி நெல் கூலி கொடுப்பவர்கள் மிராசுதார்கள், இருக்கிறார்கள், இன்னும் எந்த விதமான கூலியும் கொடுக்காத மிராசுதார்களும் இருக்கிறார்கள். இது பல்லாயிரக்கணக்கான விவசாயிகளுக்குத் தெரியாது, தெரிந்தாலும் அந்தக் கூலியை கேட்கவும் தெரிவதில்லை. தப்பித் தவறி எதாவது மிராசுதார்கள் கூலியைக் கொடுக்காமலிருக்கும் அக்கிரமத்தை எடுத்துச்சொன்னால், உடனே அவனை கிளர்ச்சிக்காரரென்று குற்றஞ் சாட்டுகிறார்கள். இப்படி எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறான் குடியானவன். ஆகவே அவர்களுக்கு உண்மையாகவே, இம்மசோதாவின் மூலம் நன்மை செய்வதாக இருந்தால், சர்க்கார் இவ்விதமெல்லாம், மிராசுதாரர்களால் துன்பமடையும் விவசாயிகளை இவ்விஷயமாக கலந்தாலோசித்து அவர்களுக்கு நியாயம் எளிதாகக் கிடைக்கும் வரையில், இம்மசோதாவை சட்டமாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இம்மசோதாவில் கண்டிருக்கும் ஷரத்துக்களை பார்க்கும்போது, வரக்கூடிய நிலசீர்திருத்த மசோதாவிலும் இத்தகைய தன்மையுள்ள ஷரத்துக்கள் இருக்குமோ என்று சந்தேகிக்க வேண்டியதாக இருக்கிறது. முன்கூட்டியே அதைப்பற்றி நான் அபிப்பிராயம் சொல்வதாக நினைக்கக்கூடாது.

" நூற்றுக்கு 85 சத விகிதமுள்ள விவசாயிகளில் அநேகர், ஆயிரக்கணக்கில், தற்போது அவர்கள் உழுதுகொண்டிருந்த நிலங்களிலிருந்து வெளியேற்றப்பட்டு, ரொம்ப கொடுமையான நிலைமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். மீண்டும், அவர்களுக்கு அந்த நிலங்களைக் கொடுத்து, அவர்களை வாழ்விக்கச் செய்வது சர்க்காரின் மிக முக்கிய கடமையாகும். ஐந்தாண்டு திட்டம் அவசியமானதுதான். அதைப் பேசி கர்லம் போக்குவதில் விவசாயிகளுக்குத் தற்போது பயனில்லை. சிவில் சட்டத்திலுள்ள ஷரத்துக்களை வைத்துக்கொண்டு அதன்படி குத்தகை பாக்கி, விவசாயி கொடுக்கவேண்டாமா என்று வாதங்கள் செய்துகொண்டிருப்பதில் பிரயோசனமில்லை. யதார்த்தமாக எப்படி நில வெளியேற்றம் செய்யப்பட்டவர்களை அந்த நிலங்களில் புகுத்தி விவசாயம் செய்யச் சொல்லி வாழ்விக்க வைப்பது என்பதைப்பற்றி முக்கியமாக நல்லெண்ணத்தோடு கவனித்து

இது விஷயமாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஜாய்ன்ட் செலெக்ட் கமிட்டி, நல்ல சீர்திருத்தம் செய்தால் அது உண்மையாகவே அரசாங்கத்தின்விவசாயி கள்பாலுள்ள நல்ல நோக்கத்தையும் அந்தரங்க சுத்தியையும் எடுத்துக் காட்ட உதவும், மற்றும் மக்களுக்கு இந்த அரசாங்கத்தின் மேல் நல்ல அபிப்பிராயம் கொள்ள ஒரு வாய்ப்பும் கிடைக்கும்.

"இனிமேல் விவசாயிகள், தங்கள் சிறிய குறைகளுக்கு பரிகாரம் காணுவிட்டாலும் சும்மா இருக்கமாட்டார்கள். நான் இவ்விதம் சொல்லு வதால் நாங்கள் ஏதோ சர்க்காரை பயமுறுத்துவதாக நினைக்கக்கூடாது. உண்மை நிலையை அறிந்தவன் என்ற முறையிலேயே இதைச் சொல்லு கிறேன். விவசாயிகள் பிரச்சினைகளில், பொதுஜனங்கள் பிரச்சினைகளும் கலந்துவிட்டிருக்கின்றன என்பதை எல்லோரும் உணர்ந்திருக்கும் காலம் இது. சர்க்கார் தவருன பாதையில் செல்லுமானுல், மக்களுக்கு செய்யவேண்டிய காரியங்களிலிருந்து தவறினுல் எல்லோருமாகச்சேர்ந்து அச்செயலை எதிர்த்து ஒரு நியாயமான போராட்டத்தை நடத்த உரிமை யுண்டு. அதே சமயத்தில் சர்க்காருக்கும், அப்போராட்டம் நடக்காமல் தடுத்து நிறுத்தி, அடக்குமுறை நிலைமையை ஏற்படுத்த, சகல நடவடிக்கை களும் எடுக்க உரிமையுண்டு, கடமையும் உண்டு. ஆகவே அவைகளுக்கு எல்லாம் இடம் கொடுக்காமல் இந்த முக்கியமான குடியானவனுடைய ஜீவ மரண போராட்டத்தில் அவனுக்கு வாழ வழி வகைகள் வேண்டும், உழுவதற்கு நிலம் வேண்டும், என்பதை எல்லாம் மனதில் வைத்து சர்க்கார் இந்த மசோதாவை நல்ல நியாயமான முறையில் விவசாயிகளுக்கு உண்மையில் பலன் தரத்தக்க விதத்தில் திருத்தங்கள் செய்யவேண்டு மென்று கேட்டுக்கொண்டு இத்துடன் என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்."

10-10 a.m. SRI P. CHOCKALINGAM :—"கனம் உதவி சபாநாயகர் அவர்களே, எப்படியாயினும் ஆகஸ்டு மாதத்திலே நிலச்சீர்திருத்த சட்டம் கொண்டுவருவதாக வாக்களித்த இந்த சர்க்கார், அதன் முதல் படியாக வாவது ஒரு சட்டத்தை அதாவது இந்த குத்தகைதாரர் நில வெளியேற்ற தடுப்புச் சட்டத்தை கொண்டுவந்தது வரவேற்கத் தகுந்தது என்றுதான் சொல்லவேண்டும். ஆனுலும், சர்க்கார் ஏற்கனவே கொடுத்த வாக் குறுதியின்படி இரண்டாவது படியாகவும், மூன்றுவது படியாகவும் கொண் டுவரயிருக்கிற நிலச்சீர்திருத்தச் சட்டங்களை அவசியம் கொண்டுவரவேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த சந்தர்ப்பத்தில் ஒரு விஷயத் தை சபையின் ஞாபகத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். இந்த நில வெளியேற்ற தடுப்புச் சட்டத்தில் திருச்சியில் நடைபெற்றிருக் கக்கூடிய விவசாயிகளின் கிளர்ச்சி சம்பந்தமான நிர்ப்பந்தங்களையும் கணக் கில் எடுத்துக்கொண்டிருக்கிருர்கள் என்றுதான் சொல்லவேண்டும். ஆன திலுலே, சர்க்காருடைய நல்ல மனப்பான்மையை சந்தேகிப்பதற்கில்லை. அவர்கள் உள்ளபடியே நாட்டில் இருக்கக்கூடிய ஏழை விவசாயிகளுக்கு நலனை செய்ய விரும்புகிருர்கள் என்பதை ருசுப்படுத்த வேண்டுமென்றுல், ஏற்கனவே தோழர் மணலி கந்தசாமி அவர்கள் என்னென்ன காரணகாரியங் களை விளக்கி சீர்திருத்தங்கள் செய்யவேண்டுமென்று கோரினுர்களோ அவை களைப் பரிபூரணமாய் ஏற்றுக்கொண்டால்தான் விவசாய மக்களிடை நம் பிக்கை ஏற்படும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1952-ம் வருஷம் தஞ்சை பண்ணையாள் பாதுகாப்பு சட்டம் அமுலுக்கு வந்ததி லிருந்து சர்க்கார் கொடுக்கும் பல வாக்குறுதிகளை மனதில் கொண்டு தங்க ளுடைய லாப நலன்கள் பறிபோய்விடும் என்று பயந்து இருக்கக்கூடிய நிலச் சொந்தக்காரர்கள் பொதுவாக நில வெளியேற்றத்தை அதிக துரிதப்படுத்தி வந்திருக்கிருர்கள் என்பதை சர்க்காருக்கு நான் எடுத்துக்காட்டவேண்டி யிருக்கிறது. பல இடங்களிலிருந்து வந்திருககும் புகார்களும் அவர்க ளுக்கு ருசுவாக விளங்கும் என்று கருதுகிறேன். நிலச் சீர்திருத்த சட்டம் தங்களுக்கு வரப்போகிறது, அதனுல் ஓரளவிற்கு வரி, குத்தகை சவுகரி யங்கள் கிடைக்கப்போகிறது. நீண்ட காலமாக கஷ்டப்பட்டதற்கு பரிகாரம் கிடைக்கப்போகிறது. வாழ்க்கை நிலைமை சீர்பட்டு உறுதியடையப்போகிறது என்ற ஆசையுடன் இருந்த விவசாயிகள் பலர் ஏற்கெனவேயே வெளியேற்ற

றப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் கிராமத்தில் வேறு என்ன தொழில் இருக்கிறது. அவர்களால் சட்டி பானை செய்ய முடியுமா வேறு என்ன தொழில் செய்ய முடியும் கூலி வேலையை தவிர, அந்த கூலி வேலையும் கிடைக்கவில்லையென்றால் அவர்கள் கூலி வேலை தேடி வேறெங்காவதுதான் சென்றாகவேண்டும். எனக்குத் தெரிந்து எங்களுடைய ஜில்லாவில் பல கிராமங்களில் நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டவர்கள் வேறு பகுதிகளுக்கு போய்விட்டார்கள் என்பதை ருசுவுடன் நிரூபிக்க முடியும். தங்களுக்கு எதிர்காலம் நல்லவிதமாக இருக்கிறது என்று நம்பிக் கொண்டிருந்தவர்கள் பலர் நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். எனது ஜில்லாவில் அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கவேண்டியது சர்க்கார். கடமையாகும் வரப்போகிற நிலச் சீர்திருத்த சட்டங்களில் அவர்களுக்கு வரி, குத்தகை சவுகரியங்கள் கிடைக்க கட்டாயம் வகை செய்தாக வேண்டும் என்று நான் அவர்கள் சார்பில் சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன். தவிரவும், இந்த குத்தகைதாரர்கள் வெளியேற்ற தடுப்பு மசோதாவை 1954-ம் வருஷம் டிசம்பர் மாதம் 1உயிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களுக்குத்தான் பாதுகாப்பு என்றிருப்பதை மாற்றி, இரண்டு மூன்று வருஷ காலமாக வெளியேற்றப்பட்டவர்களுக்கும் அந்த பாதுகாப்பு கொடுக்கப்படும் என்று முடிவு செய்வார்களேயானால் எல்லோராலும் வரவேற்கத் தகுந்ததாக இருக்கும் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

" தவிரவும் R. D. O.க்களிடம் மனுக் கொடுத்து பாத்திய உரிமையை நிலைநாட்டிக்கொள்ளவேண்டும் என்று விதித்திருப்பது அனுபவத்தில் சாத்தியமில்லை எங்கள் ஜில்லாவில் கன்னியாகுமரியிலிருந்து பழவூர், சங்கரன்கோவில், சிவகிரி வரை கிட்டத்தட்ட 150 மைல் வரை R.D.O. பார்வையில் இருக்கிறது. ஆகவே எந்த பகுதியில் Camp செய்கிறார் எங்கு சென்று விவசாயிகள் மனு கொடுக்கவேண்டுமென்பதை எப்படி தெரிந்துகொள்ள முடியும். ஏற்கெனவேயே தாலூகாதோறும் Conciliation Officer களை போட்டிருக்கிறார்கள். அவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி, ஒவ்வொரு கிராமத்திற்கும் அவர்கள் சென்று விவசாயிகளிடமிருந்து மனுக்களை வாங்கி நேரிடையாக அங்கேயே விசாரணை செய்து அவர்களுடைய பாக்கி சாக்கி என்ன என்பதை தெரிந்து அவர்களுடைய நிலைமையை அறிந்து மனுக்களை பைசல் செய்தால் விவசாயிகளுக்கு அனுகூலம் ஏற்படும். இல்லாது போனால் நிலச் சொந்தக்காரர்கள் பலவிதமான சாக்குபோக்கை வைத்துக்கொண்டு நியாயம் குடியானவர்களுக்குக் கிடைக்காமல் செய்ய எவ்வளவோ வழிகள் இருக்கின்றன. ஆகையினால் சர்க்காருடைய விருப்பம் குடியானவர்கள் பிழைக்கவேண்டுமென்றிருந்தால் இவைகளை கவனித்து Select Committee-ல் இந்த மசோதாவிற்கு அந்த இனங்களில் தகுந்த மாற்றம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

" அதே நேரத்தில் குடியானவர்கள் குத்தகை பாக்கி கொடுக்கவேண்டும் என்ற காரணத்தைக் கொண்டு நிலச் சொந்தக்காரர்கள் அவர்களை வெளியேற்ற இந்த மசோதா அனுமதி கொடுக்கிறது. மேலும் குத்தகை பாக்கியை ஒரு மாத காலத்திற்குள் செலுத்தினால்தான் அவர்கள் உரிமையை நிலைநாட்ட முடியும் என்ற ஒரு நிபந்தனை இந்த மசோதாவில் விதிக்கப்பட்டிருக்கிறது. இந்த பிந்திய குத்தகை பாக்கி எப்படி ஏற்பட்டது என்பதைப்பற்றி ஸ்ரீ கந்தசாமி அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார். விவசாயிகள் கையில் எந்த விதமான மிச்சமும் இல்லை என்பதை சர்க்காருக்கு புள்ளி விவரத்தோடு பல தடவைகள் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. உழவனுக்கு தார் கொம்புகூட மிஞ்சுவது இல்லை என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையை அவர்கள் உரிமையைப் பெற பாக்கி கடன் தொகையை ஒரு மாத காலத்திற்குள் செலுத்துவது என்பது சாத்தியமில்லை. ஆகையினால் இந்த கடன் பாக்கி தொகை கோர்ட்டு மூலம் தீர்த்துக்கொள்ள விட்டுவிடவேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டால்தான் குடியானவர்களுக்கு பலன் தரக்கூடியதாகும் என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

" தவிரவும் இந்த சட்டம் ஒரு வருஷம்தான் அமுலில் இருக்கும் என்று குறிப்பிட்டிருப்பது போதாது. நிலச் சீர்திருத்தம் வரும்போது வரட்டும் நீங்கள் கொண்டுவரப்போவதாக சொல்லுவதை நம்புகிறேம். இருந்தாலும் எத்தனையோ பல அசந்தர்ப்பங்கள் இடையே ஏற்படலாம். எத்தனையோ தவிர்க்க முடியாத இடையூறுகள் துரதிர்ஷ்ட வசமாக ஏற்படலாம் அப்படி ஏற்பட்டால் நிலச்சீர்திருத்தம் வர இன்னும் சில வருஷங்கள் ஆகலாம். அதற்குள் இந்த சட்டத்தின் ஒரு வருஷ கால உயிர் போய்விட்டால் குடியானவர்களுக்கு என்ன உரிமை இருக்கிறது நில வெளியேற்றத்திலிருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ள. ஆகையால் செய்கிறது செய்கிறீர்கள் நன்ருக கவனித்து குடியானவர்களுக்கு பிரயோஜனகரமாக செய்யுங்கள். உங்களுடைய அனுதாபத்தை அவர்களுக்கு ருசுப்பிக்கவேண்டுமென்ற அக்கரையிருக்குமேயானுல் இந்த சட்டத்தின் ஆயுளை ஒரு வருஷத்திலிருந்து மூன்று வருஷம் அல்லது ஐந்து வருஷமாக்கினுல் தான் உள்ளபடியே அதனுடைய பலன் குடியானவர்களுக்கு கிடைக்கும் என்பதை வற்புறுத்தாமல் இருக்க முடியவில்லை.

" ஆகவே இந்த மாதிரி கடந்த 2, 3 வருஷங்களில் வெளியேற்றப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு கொடுப்பதுடன் R. D. O.-க்கு மனுச் செய்து பாத்தியதையை நிரூபித்துக்கொள்ளவேண்டும் என்று போட்டிருக்கும் நிபந்தனையை மாற்றி நல்ல முறையில் முதலில் நான் எடுத்துக்காட்டியுள்ளதை போல அமைத்துக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்."

10–20 a.m. * **Sri B. K. NALLSWAMI** :—" கனம்துணை சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கோயம்புத்தூர் ஜில்லாவைப் பொருத்த வரையில் எடுத்துப் பார்த்தோமேயானுல், இந்த மசோதா இல்லாமலேயே நடைமுறையில் பொதுவாக யாரும் நிலத்திலிருந்து அகற்றப்படுவதில்லை என்பதை சந்தோஷமாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 50, 60 வருஷ காலமாக தொடர்சியாக உழுதுகொண்டிருப்பவர்களை எங்கள் ஜில்லாவில் ஆயிரக்கணக்கிலே பார்க்கலாம். ஆகவே, இந்த மசோதா, ஏற்கனவே இருக்கக்கூடிய நிலைமையை ஊர்ஜிதம் செய்கிறதேயொழிய கோயம்புத்தூர் ஜில்லாவை பொருத்த வரையில் புதிதாக நன்மை ஒன்றும் இந்த மசோதாவால் ஏற்படவில்லை என்று நான் கருதுகிறேன். ஆனுல், சர்க்கார் பிரசுரித்து இருக்கக் கூடிய அசல் மசோதாவில் பல திருத்தங்கள் செய்தாகவேண்டும் என்பதை எல்லோரும் ஒப்புக்கொண்டாகவேண்டும். தஞ்சை பண்ணையாள் சட்டத்திலும்கூட சொந்த விவசாயத்துக்கு என்று ஒரு வேலி நஞ்சை அல்லது 3 வேலி புஞ்சை ஒதுக்கப்பட்டிருப்பது நமக்கு தெரியும். இந்த மசோதாவில் அந்த அம்சம் இல்லை. சமீபகாலமாக, பல குடும்பங்களில் பிள்ளைகள் வேலையில்லாமல் அவஸ்தை பட்டுக்கொண்டிருக்கிறர்கள். அவர்கள் படிப்பு முடிந்தவுடனே விவசாயத்திற்கு அடுத்த வருஷம் வரவேண்டுமென்ருல் அவர்களுக்கு பூமி கிடைக்கமுடியாத நிலைமை இந்த மசோதாவால் ஏற்படும். இதே மாதிரி பல கஷ்டங்கள் இந்த மசோதா அப்படியே சட்டமானுல் ஏற்படும் என்பதை மனதில்கொண்டு, Select committee-ல் சொந்த சாகுபடிக்கு ஓரளவு பூமி ஒதுக்க ஒரு ஷரத்தை சேர்க்கவேண்டியது அவசியம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

10–18 a.m. " இப்பொழுது விலைவாசிகள் எல்லாம் வீழ்ந்து கொண்டிருக்கின்றன. எங்கள் ஜில்லாவை எடுத்துக்கொண்டால் பணமாக குத்தகை வாங்குவதெல்லாம் புஞ்சை பூமியாகத்தான் இருக்கும். எல்லா இடங்களிலும் அப்படித்தான் இருக்கும். விலை வீழ்ச்சியின் காரணமாக இப்பொழுதுள்ள நிபந்தனை அப்படியே இருந்தால் பழைய குத்தகையே கொடுக்கவேண்டும். நிலச்சுவான்தார்கள் வற்புறுத்தக்கூடிய நிலைமை ஏற்படும். அதற்காக இந்த விஷயத்தில் கனம் குரூப் அவர்கள் சொன்னதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். கூடவே நியாயக் குத்தகைச் சட்டம் செய்தால்தான் இந்த நிலைமைக்கு பரிகாரம் ஏற்படும். அடுத்த மே மாதத்திற்குள் இந்த மாதிரியான சட்டத்தைக் கொண்டு வந்தால் இந்தப் பிரச்னை பெரும்

6th August 1955] [Sri B. K. Nallaswami]

பிரச்னேயாக இருக்காது. இல்லேயானுல் பணக் குத்தகையாக இருக்கும் இடங்களில் பெரிய தகராறுகள் ஏற்படும் என்பதை மாத்திரம் நம்முடைய சர்க்காருக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

" அத்துடன் இன்னும் சில கஷ்டங்கள் இருக்கின்றன. பெரும் நிலச் சுவாந்தார்கள் நிறைய கடன்பட்டிருக்கிருர்கள். இத்துடன் கடனே மறுப்பு சட்டமும் வரவேண்டும் என்று கூட ரொம்பவும் தீவிரமாக யோசிக்கும் படியாக இருக்கிறது. இம்மாதிரியான நிலச்சுவான்தார்களுடைய நிலைமை யைப்பற்றி சிந்தித்து இருந்திருக்க வேண்டும். வரப்போகிற நிலச் சீர் திருத்த சட்டத்தோடு இப்படி கடன்பட்டவர்களுடைய நிலைமையை மனதிற் கொண்டு திருத்தம் சட்டத்தில் கொண்டு வரவேண்டும். அவர்கள் வாங்கிய கடனே நியாயமாகத் திருப்பிக் கொடுக்க வேண்டாமா என்பதைப்பற்றியெல் லாம் சிந்திக்கவேண்டியதாக இருக்கிறது. ஆனுல் இந்த சட்டத்தை செய் யும்போது எதிர்க்கட்சிக்காரர்கள் எல்லோரும் பெரும் சந்தேகத்தைக் கிளப்புகிருர்கள். சட்டம் உடனடியாக கொண்டுவராமல் டில்லிக்கு அனுப்பி வருகிருர்கள் என்றும் அதனுல் காலதாமதம் ஏற்படுகின்றன என்றும் சந்தேகப்பட்டுக் கொண்டிருக்கிருர்கள். அது கட்சி மனப்பான்மையில் அப்படி சந்தேகப்படுகிருர்களேயொழிய வேறு ஒன்றும் இல்லை. பொது மக்களுக்கு ஆவன செய்யவேண்டும் என்பதுதான் எங்களுடைய நோக்கம். இப்படி சந்தேகப்படுவதெல்லாம் பிரசாரத்திற்காக வைத்துக் கொள்ளு வார்கள். சமீபத்தில் முனிசிபல் தேர்தல் நடக்கப் போகிறது அதன் பிர சாரத்திற்கு உபயோகமாக இப்படி பேசலாம். அதற்கு இது உபயோக மாக இருக்கலாம். ஒத்திப்போட வேண்டும் என்று டில்லிக்கு அனுப்பு கிருர்கள் என்று சொன்னுல் அது சரியல்ல. எதிர் கட்சியில்தான் அப் படிப்பட்ட சந்தேகம் ஏற்படுமேயொழிய மக்களுக்கு எங்கள் அந்தரங்க சுத்தியில் இப்படிப்பட்ட சந்தேகமே இருக்காது. நேற்றுகூட கேள்வி நேரத் தின்போது கனம் மந்திரி பக்தவத்சலம் அவர்கள் நில சீர்திருத்தம் கண் டிப்பாக வரப்போகிறது என்று தெள்ளத் தெளிவாக சொல்லிவிட்டார். நிலத்தை யாருக்கும் சொந்தமாக விட்டுவிடப்போவதில்லை, கோவில் நிலத் தைக்கூட விடப்போவதில்லை என்றெல்லாம் சொல்லிவிட்டார். இனி சந் தேகத்திற்கே இடமில்லை. இன்று சீனுவையும் ரஷ்யாவையும் உதாரணம் சொல்லப்படுகிறது. அங்குகூட நிலங்களைக் நிலச்சுவான்தார்களுக்கு நிலம் கொடுத்து உழச் சொல்லுகிருர்கள். அப்படி ஒவ்வொரு நாடுகளிலும் இருக்கின்றன. அதற்கு அத்தாட்சி வேண்டும் என்றுலும் கொடுக்க முடி யும். அதனுல் மற்ற நாடுகள் முன்னேற்றம் அடைந்து விட்டது, நம் நாடு பிற்போக்காக இருக்கிறது என்று சொல்வதில் அர்த்தம் இல்லை. ஈஜிப்டில் உயர்ந்த பட்சம் 200 ஏக்கர் இருக்கலாம் என்று வைத்துக் கொண் டால் இங்கு 40 அல்லது 50 ஏக்கர் உயர்ந்த பட்சமாக வைத்துக் கொள்ள லாம் என்று இருக்கலாம். இதில்தான் வித்யாசம் இருக்குமே தவிர வேறு விதத்தில் கொஞ்சம்கூட வித்யாசம் கிடையாது என்பதை எதிர்க் கட்சிக்குச் சொல்லிக்கொண்டு இந்த மசோதாவை ஆதரித்து என்னுடைய பிரசங்கத்தை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்."

***Sri P. RANGASWAMI REDDIAR** :—". கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்று கனம் ரெவினியூ மந்திரி அவர்கள் பிரேரேபித்து இருக் கும் மசோதாவில் முக்கியமாக 1954-ம் வருஷம் டிசம்பர் மாதம் 1-ம் தேதி நிலத்தில் சாகுபடி செய்தவர்களே நிலத்திலிருந்து வெளியேற்றியிருந்து மீண்டும் அவர்கள் விரும்பினுல் சில நிபந்தனைகளுக்குட்பட்டு அவர்களுக்கு நில சுவாதீனம் கொடுக்கவேண்டும் என்பது ஒன்று. மற்றப்படி நிலத் தை வேண்டுமென்று கேட்பவர் குறிப்பிட்ட காலவரைக்குள் குத்தகை பாக்கி இருந்தால் அதைக் கொடுத்து விடவேண்டும் என்பது மற்றெரு முக்கியமான அம்சம். இந்த மசோதாவைக் கொண்டு வந்ததின் கார ணம். 'இந்த ராஜ்யத்தில் பெருவாரியான நிலப் பிரபுக்கள் பெருவாரி யான விவசாயிகளே நிலத்தை விட்டு வெளியேற்றியிருக்கிருர்கள் என்றும் அப்படி வெளியேற்றி பர்சனல் கல்டிவேஷன் 'அதாவது தாங்களே நிலத்தை பயிரிட ஆரம்பித்து விட்டார்கள்' என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த

[Sri P. Rangaswami Reddiar] [6th August 1955

சந்தர்ப்பத்தில் ஒரு விஷயத்தை மனதில் வைத்துக் கொள்ளவேண்டும். பர்சனல் கல்டிவேஷன் செய்வதில்கூட மிராசுதார்கள் விவசாயிகளை வைத்துக்கொண்டுதான் விவசாயம் செய்வார்கள். மிராசுதார் குடும்பங்கள் தாங்களே நிலத்தில் இறங்கி விவசாயம் செய்வதில்லை. குத்தகைதாரர்கள் இருந்த இடத்தில் விவசாய தொழிலாளர்கள் அமர்த்தப்படுகிறார்கள். அதனால் பேச்சுக்காகத்தான் அலங்காரமாக நிலத்தை விட்டு விவசாயிகளை வெளியேற்றிவிட்டார்கள் என்று சொல்லலாம். நெருக்கடி ஏற்பட்டுவிட்டது என்று சொல்லலாம். ஆனால் விவசாயம் எப்பொழுதும் போலவேதான் நடந்துகொண்டிருக்கிறது. பண்ணையாட்களும், குத்தகைகாரர்களும், விவசாயத்தில் ஏதாகிலும் லாபம் அடையலாம் என்பதற்காகத்தான் வேலை செய்கிறார்கள். குத்தகைதாரர்கள் அடைந்த லாபத்தை விவசாயத் தொழிலாளர்கள் அடைகிறார்கள். வேண்டுமானால் கொஞ்சம் குறைந்த அளவில் அதற்காக ஏதாகிலும் செய்வார்களே தவிர அதாவது குத்தகைக்கு விடாமல், சொந்த சாகுபடி செய்வார்களே ஒழிய வேறு எந்தவிதமான மாறுதல்களும் இருப்பதாகவே தெரியவில்லை, விவசாயம் செய்வதில்

"ரொம்ப நாளைக்கு முன் நான் மகாபாரதக் கதை ஒன்றை கேட்டிருக்கிறேன். அந்தக் காலத்தில் ஒரு குடியானவன் தன்னுடைய நிலத்தை வேறொரு குடியானவனுக்கு விற்றான். வாங்கிய குடியானவன் அந்த நிலத்தை வாங்கின பின் உழ ஆரம்பித்தான். அவனுடைய ஏருக்கு அடியில் ஏதோ புதையல் ஒன்று அகப்பட்டது. உடனே அதை எடுத்துக் கொண்டு போய் தனக்கு நிலம் விற்றவனிடம் அந்தப் புதையல் நிலத்தை விற்றவனுக்குத்தான் சொந்தம் என்று சொல்லி அதை விற்றவனிடம் கொடுத்தான். ஆனால் நிலத்தை விற்றவன் 'நிலம் அதிலுள்ள எல்லா ஜங்கமத்தையும் தான் விற்றுவிட்டேன், அதனால் புதையல் வாங்கினவனுக்குத்தான் சொந்தம், தான் எடுத்துக்கொள்ளமாட்டேன்' என்றும் சொல்லிவிட்டான். பிறகு இரண்டு பேர்களுக்கும் சேர்ந்து தர்மராஜாவிடம் சென்றார்கள். தர்மராஜா விஷயத்தை நன்றாக கவனித்து விசாரித்து இரண்டு மாதங்கள் கழித்து மறுபடியும் வரும்படி சொல்லி அனுப்பினார். பிறகு இரண்டு மாதங்கள் கழித்து இந்த இரண்டு பேர்களும் மறுபடியும் தர்மராஜாவிடம் சென்றார்கள். அப்பொழுது நிலத்தை விற்றவன் புதையல் தனக்குத்தான் சொந்தம் என்று வாதாடினான். நிலத்தை வாங்கினவன் தனக்குத்தான் சொந்தம் என்று வாதாடினான். உடனே தர்மராஜா, 'இனிமேல் நமக்கு இங்கு வேலை இல்லை' என்று சொல்லி அவர்கள் வேறு உலகத்திற்குப் போய்விட்டார்கள். இப்படிப்பட்ட கதை ஒன்றைச் சொல்லுவார்கள் எங்கள் ஊரில். அந்தக் கதை இப்பொழுது என்னுடைய ஞாபகத்திற்கு வருகிறது. இந்த மாதிரிதான் இருக்கிறது விவசாயிகளுடைய நிலைமையும். அவர்கள் பரம்பரையாக நாணயமாக விவசாயம் செய்து கொண்டுதான் வருகிறார்கள். அவ்விதம்தான் இப்பொழுது பல இடங்களில் நம் மாகாணத்தில் நடந்து வருகிறது. அப்படி இருக்கும்போது இந்த மாறுதல் செய்யவேண்டிய அவசியம்பற்றி விளங்கவில்லை. ஆகஸ்ட்டு 1-ம் தேதி வரை நிலத்திலிருந்தால் நிலத்தை விவசாயிக்குத் தந்துவிடுவார்கள் என சில அதிகாரிகள் சொன்னதால் தான் திருச்சி ஜில்லாவில் சில இடங்களில் குழப்பம் ஏற்பட்டது. பல இடங்களில் பல காரணங்களைக் கொண்டு கலவரம் செய்கிறார்கள். அங்கங்கே நிலப் பசி ஏற்பட்டு கிஸான் சங்கங்களை அமைத்துக்கொண்டு கலவரம் செய்கிறார்கள். மற்றும் விவசாயிகளை தூண்டிவிடுகிறார்கள். என்றும் சொல்லுகிறார்கள். திருச்சி ஜில்லாவில் அப்படி ஒரு பகுதியில் நடந்திருக்கிறது. அதைப்பற்றி ஆகஸ்ட்டு மாதம் 3-ம் தேதி ஹிந்துப் பத்திரிகையில் ஒரு ரிப்போர்ட் வந்திருக்கிறது. அந்த ரிப்போர்ட்படி ஜூலை மாதம் 29-ம் தேதி அயனூர் கிராமத்தில் ஆயிரம் கிஸான்கள் துராக்ரதமாக நிலத்தில் இறங்கி சாகுபடி செய்ய முயன்றார்கள் என்றும், அதன் மேல் போலீஸ்காரர்கள் ராஜகோபால், மாணிக்கம் முதலிய 59 பேர்களின் பேரில் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்றும் இருக்கிறது. 31-ம் தேதி அறிக்கையில் கிஸான்கள் பிரவேசித்து சாகுபடி செய்கிறார்கள் என்றும் இருக்கிறது"

6th August 1955]

SRI V. BALAKRISHNAN :—" திருச்சினுப்பள்ளியில் நடந்த கலவ ரத்தைப்பற்றி இப்போது கோர்ட்டில் விசாரணை நடந்து கொண்டிருக்கிறதி ஞலே அதைப்பற்றி குறிப்பிடும் முறையில் பேசுவது பொருத்தமா ? 10–30 a.m

* SRI P. RANGASWAMY REDDIAR :—" கலவரத்தில் நடந்த விவ காரங்களைப்பற்றிமட்டுமே பேசுகிறேன். எந்த விதமான கோர்ட்டு முன்னு லும் எந்த விதமான நடவடிக்கையும் இருப்பதாக எனக்குத் தெரிய வில்லை. போலீஸ்காரர்கள் ' அரெஸ்ட் ' செய்து வைத்திருக்கிருர்கள் என்ற தகவலைத் தவிர வேறென்றும் எனக்குத் தெரியாது, வேறெதுவும் சொல்வதற்கும் நான் தயாராயில்லை.

" அதற்குமேல் மணல்மேடு முசிரிக்கு 4 மைலுக்கு அப்பால் இருக்கிறது. அங்கிருந்து இன்னெரு கிஸான் batch முசிரிக்கு புறப்பட்டு வரும் வழி யில் சந்தபாளையத்தில் ஏதோ துராக்கிருதமாக பிறர் நிலத்தில் பிரவேசம் செய்திருக்கிருர்கள் என்று தெரிகிறது. பல இடங்களில் இந்த மாதிரியான துராக்கிருதப் பிரவேசம் நடக்கின்றது. இதற்குக் காரணம் என்ன ? உழு வனுக்கே நிலம் சொந்தமாக்கப்படும் என்று சர்க்கார் சிப்பந்திகள், கனம் அமைச்சர்கள் பேசி வருவதால், எல்லாரும் நிலத்தில் பிரவேசித்து சுவா தீனத்தில் இருக்க ஆசைப்படுவது இயற்கைதானே ? உள்ளபடியே கிஸான் களின் நலனை அபிவிருத்தி செய்வதற்காக இந்த மாதிரியான பிரசாரங்கள் செய்யப்படுகின்றனவா ? அல்லது சில Political objective-ஐ ulterior motive ஆகக் கொண்டு இந்த மாதிரியான காரியங்கள் செய்யப்படு கின்றனவா ? அல்லது ஒரு சிலருக்குமட்டும் தொல்லை கொடுக்கவேண்டும் என்பதற்காக செய்யப்படுகின்றனவா ? அல்லது நிலம் உழுபவனுக்குச் சொந்தம் என்பதை உண்மையில் அமுலுக்குக் கொண்டு வந்தால் அப் போது சுவாதீனத்தை ருசு செய்ய இக்காரியங்கள் செய்யப்படுகின்றனவா என்பதை அரசாங்கம் கவனிக்கவேண்டும். நிலப்பிரச்னை என்ருல், யார் யார் நிலத்தை உழுகிருர்களோ அவரவர்களுக்குத்தான் நிலம் சொந்த மாக்கப்படும் என்று பெருவாரியான மக்கள் நினைத்துக்கொண்டிருக்கிருர் கள்.

" இப்போது கொண்டுவரப்பட்டிருக்கும் மசோதாவினுல் எந்த விதமான புது மாதிரியான நிலப் பிரச்னைகளையும் தீர்ப்பதற்கு வழி இருப்பதாகத் தெரியவில்லை. எந்தக் காலத்திலும், விவசாயி நிலத்திலிருந்து வெளி யேற்றப்படுகிருன் என்று சொன்னுல் அனேகமாக குத்தகை பாக்கி இருந் தால்தான் வெளியேற்றப்படுவானே தவிர, வேறு எந்தக் காரணத்திற்காக வும் வெளியேற்றப்படுவதில்லை. சென்ற ஐந்து, பத்து, ஆண்டுகளில் கோர்ட்டு நடவடிக்கைகளை கணக்கு எடுத்துப் பார்த்தால், நில வெளியேற்ற தாவாக்களில், குத்தகை பாக்கிக்காக போடப்பட்டிருக்கும் தாவாக்கள் ரொம்பக் குறைவாக இருக்கும். இது யாருடைய புத்திமதியாலோ, தலை யீட்டினுலோ நடந்த காரியங்கள் அல்ல. அதாவது மிராசுதாரர்களுக்கும் விவசாயிகளுக்கும் உள்ள உறவு சுமுகமாகவே நீண்ட காலமாக இருந்து வந்திருக்கிறது. ஓரளவு, பணம் கொடுக்காமல் நிலம் கிடைக்கும் என்ற பொய் வதந்திகளைப் பரப்பியதனுல் தான்,—அதற்கு யார் ஆதரவாக இருந்தாலும் சரி, யார் காரணஸ்தர்களாக இருந்தாலும் சரி— ஆங்காங்கு துராக்கிருதமாக நிலத்தில் பிரவேசம் செய்யும் காரியங்கள் நடந்திருக் கின்றன.

" ஒரு காலத்தில் நிலம் உழுபவனுக்கு சொந்தம் என்று சொல்லப்பட்ட போது துணி வெளுப்பவனுக்குத்தான் சொந்தம் என்று கிண்டல் செய்யப் பட்டது. ஆனுல் நாளது வரையில் நிலம் எப்படி உழுபவனுக்கு சொந்த மாக்கப்படும் என்பது விளக்கமாகத் தெரியவில்லை. நிலம் உழுபவனுக்குச் சொந்தம் என்று சொல்லும்படியான இறுதி மசோதாவின் ஒரு பகுதியான இந்த மசோதாவை இப்போது சட்ட சபையில் கொண்டுவரப்பட்டிருக்கும் காலத்தில் கூட அதைப்பற்றி நிச்சயமாக ஒன்றும் தெரியவில்லை.

" அடுத்தபடியாக, ஒரு நண்பர் ceiling-ஐப்பற்றிச் சொன்னுர்கள். அதாவது, உயர்ந்தபக்ஷமாக இவ்வளவு நிலம் தான் வைத்துக்கொள்ள லாம் என்பது. எவ்வளவு நிலம் சொந்தமாக வைத்துக் கொள்ளலாம்

என்பதா அல்லது சொந்த சாகுபடிக்கு வைத்துக் கொள்ளலாம் என்பதா என்று இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. இந்த விஷயம் பல பல ராஜ்யம் பூராவும் பேசப்படுகிறது. ஆனாலும் இன்னும் ஒன்றும் தெளிவாகத் தெரியவில்லை.

"ஆகையால் இதுமாதிரியான சூழ்நிலையை பார்ப்போமேயானால், இப்போது கொண்டுவரப்பட்டிருக்கும் மசோதாவினால் நாணயமாக பயிர்செய்து வந்த விவசாயிகளுக்கும் அவர்களை நியாயமாக நடத்திவந்த மிராசுதார்களுக்கும் எந்தவிதமான மாறுதலும் கிடையாது என்று தெரிகிறது. ஆனால் இதற்குமேல் உழுபவனுக்குத்தான் நிலம் சொந்தமாகும் என்ற மசோதா வந்தால் அதில் சர்ச்சைக்குரிய விஷயங்கள் இருக்கலாமே யொழிய இதில் சர்ச்சைக்கு இடமில்லை.

"1954 டிசம்பர் 31-ம் தேதியன்று யார் யார் நிலத்தில் இருந்தார்களோ, அவர்கள் வெளியேற்றப்பட்டிருந்தால், அவர்களை மீண்டும் நிலத்தில் அமர்த்துவது என்ற விஷயமானது சில இடங்களில் கொஞ்சம் கடினமாக இருக்கலாம். அதாவது சில விவசாயிகள் குத்தகை கொடுக்காத காரணத்தாலோ மசோதாவில் இருக்கிற வேறு காரணங்களுக்காகவோ மேற்குறிப்பிட்ட காலத்தில் வெளியேற்றப்பட்டு, வேறொரு விவசாயிக்கும் அந்த நிலத்தைக் கொடுக்காமல் மிராசுதாரரே சொந்த சாகுபடிக்கு வைத்துக்கொண்டிருந்து, அதன் மூலம் நிலத்தில் பயிர் இருக்குமேயானால், அந்தப் பயிரை 1954 டிசம்பர் 31-ம் தேதிக்கு முன்பு இருந்த குடியானவனுக்கு கொடுப்பதா, அல்லது பயிரை அறுவடை செய்துவிட்டு அவனை நிலத்தில் அமர்த்துவதா என்ற சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. சர்ச்சைக்குரிய அம்சங்கள் பல இருந்தால், இந்த ஓராண்டு காலம் அமுலிலிருக்கும் சட்டத்தினால், கோர்ட்டுகளுக்கும் வக்கீல்களுக்கும் வேலை இருக்குமே தவிர, மிராசுதார்களுக்கும், விவசாயிகளுக்கும் எதிர்பார்க்கின்ற பலன் இருக்காது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மற்றப்படி பேசப்பட்டு, பரப்பப்பட்டு வந்த நிலச்சீர்திருத்தத்துக்கும் இந்த மசோதாவில் சொல்லப்பட்டிருக்கும் நிலச்சீர்திருத்தத்துக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. இது சீர்திருத்தம் அல்ல. இது **safeguarding the interests of mirasdars and safeguarding the interests of the cultivating or even trespassed tenants**' என்று சொல்லலாமேயொழிய, நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்ட ஏராளமான குடியானவர்களை காப்பாற்ற வேண்டுமென்பதற்காக கொண்டுவரப்பட்ட மசோதா என்று சொல்ல முடியாது. என் ஜில்லாவாகிய திருச்சினாப்பள்ளி ஜில்லாவைப் காடாரம்ப பிரதேசங்களைப் பொருத்த வரையிலும்—மற்ற ஜில்லாக்களிலுள்ள நிலைமையைப்பற்றி எனக்குத் தெரியாது—இந்த மாதிரி மசோதா அவசியமில்லை என்று சொல்லிக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்."

10-35 a.m. **SRI S. T. ADITYAN** :—"கனம் சபாநாயகர் அவர்களே, விவசாயச் சீர்திருத்தம் சம்பந்தமாக, ஏற்கெனவே மலையாளத்துக்கு ஒரு சட்டம் இருக்கிறது, கன்னட பூமிக்கு ஒரு சட்டம் இருக்கிறது; தஞ்சாவூர் ஜில்லாவுக்கு ஒரு சட்டம் இருக்கிறது, அவற்றைத் தவிர, ஏனைய தமிழ் நாட்டுக்கு என்று சொல்லப்பட்டிருக்கிற இந்த மசோதாவில் மூன்று விசேஷ அம்சங்கள் காணப்படுகின்றன. இந்த மூன்று விசேஷ அம்சங்கள் சம்பந்தப்பட்ட மட்டிலும் மூன்று வார்த்தைகள் சொல்லிவிட்டு என்னுடைய பேச்சை நிறுத்திவிட விரும்புகிறேன்.

"முதலாவதாக ஏற்கெனவே உள்ள தஞ்சாவூர் பண்ணையாள் சட்டம் போன்றவைகளில் தாங்களாகவே நிலத்தை உழுகின்ற விவசாயிகளுக்குத்தான் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கின்றது. இந்த மசோதாவில் தானே உழுபவர்களுக்கும் கூலியாட்களை வைத்துக்கொண்டு அவர்களை மேற்பார்வை பார்த்து உழுபவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த மசோதாவில் இருவிதமான விவசாயிகளுக்கும் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் இதைத் துருவி ஆராயும்போது இது எப்படி இருக்கின்றது? ஒரு நிலச்சுவான்தார் கீழ் ஒரு கட்டுக் குத்தகைக்காரன் இருக்கிறான்; அவனிடத்தில் ஒரு உள் கட்டுக் குத்தகைக்காரன் இருக்கி

6th August 1955] [S. T. Adityan]

றன். உள் கட்டுக் குத்தகைக்காரனை வெளியேற்றுவதற்கு பாத்தியதை அசல் கட்டுக்குத்தகைக் காரனுக்குத்தான் இருக்கிறது. நிலச்சுவான்தார் அசல் கட்டுக் குத்தகைக்காரனைத்தான் வெளியேற்ற முடியும். அவன் உள் கட்டுக் குத்தகைக்காரனை வெளியேற்ற முடியாது. இந்த மாதிரியான மூன்று வித அம்சங்களைக் கொண்டதாக இந்த மசோதா இருக்கிறது. அது அவ்வளவு உசிதமாகத் தோன்றவில்லை. நிலத்துக்கு உரியவன் ஒருவன், கடைசியில் நிலத்தில் விடப்பட்டவன் ஒருவன் இந்த இரண்டு பேருக்கும் இடையில் ஒரு தரகனாக முதல் கட்டுக் குத்தகைக்காரன் இருக்கிறான். அவனுக்கும் மசோதாவின் பிரகாரம் பாதுகாப்பு அளிக்கப் பட்டிருக்கிறது. அது தேவையில்லை என்று நான் நினைக்கிறேன். ஆத லால் அது தேவை தானா என்று அலசிப்பார்க்க வேண்டியது இந்த ஸபையின் முக்கியகடமை. இந்த மசோதா சம்பந்தப்பட்டவரையில் இது தான் முதலாவது முக்கிய அம்சம்.

"இரண்டாவதாக கனம் மந்திரி அவர்கள், 'கோவில்களுக்குச் சொந்த மான நிலங்களைக்கூட விடமாட்டோம், அவைகளிலிருந்தும் குத்தகைக் காரர்கள் வெளியேற்றப்படுவதைத் தடுப்போம்' என்று சொல்கிறார்கள். ஆனால், நான் மசோதாவை நன்றாக வாசித்துப்பார்த்த மட்டிலும் கோவிலுக்குச் சொந்தமான நிலங்கள் சம்பந்தப்பட்ட இந்த மசோதாவில் உள்ள ஷரத்துகள் தெளிவாக இல்லை. கோவிலுக்குச் சொந்தமான நிலங்கள் இருக்கின்றன; மடங்களுக்குச் சொந்தமான நிலங்கள் இருக் கின்றன; பள்ளிவாசல்களுக்குச் சொந்தமான நிலங்கள் இருக்கின்றன; சர்ச்சுகளுக்குச் சொந்தமான நிலங்கள் இருக்கின்றன; கிருஸ்தவ ஸ்தாப னங்களுக்குச் சொந்தமான நிலங்கள் இருக்கின்றன. இவைகள் மசோ தாவில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கும் '**person**' என்ற வார்த்தை யில் அடங்காது என்று நான் நினைக்கிறேன். இவைகள் சம்பந்தப்பட்ட மட்டில் மசோதா தெளிவாக்கப்படவேண்டும். தனிப்பட்ட நபர்களுடைய நிலங்களிலிருந்து மட்டுமல்லாமல் கோவில் நிலங்களிலிருந்தும் ஸ்தாபன நிலங்களிலிருந்தும் விவசாயிகள் அப்புறப்படுத்தப்படக்கூடாதென்ற ஒரு வாசகம் இந்த மசோதாவில் சேர்க்கப்பட்டாலொழிய, அப்படிப்பட்ட ஸ்தாபனங்களின் கீழே உள்ள விவசாயிகளுக்குப் பாதுகாப்பு இல்லை.

"மூன்றாவது முக்கிய அம்சம் இதைப்போன்று மலையாளத்தில் ஒரு சட்டம் இருக்கிறது. கர்னாடகத்தில் ஒரு சட்டம் இருக்கிறது. தஞ்சாவூரில் ஒரு சட்டம் இருக்கிறது. இவைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்த மசோதாப்படி நிலச்சொந்தக்காரர்களுக்கு உழுவதற்கு பாத்தியதை இல்லை. நிலச் சொந்தக்காரன் ஒருவன் தானாக உழைக்க விரும்பினாலும் அற்ப சொற்ப விவசாயியாக இருந்தாலும் ஒரு ஏக்கர் இரண்டு ஏக்கருக்குச் சொந்தக்காரனாக இருந்தாலும் அவனும் அவன் பிள்ளைகளும் வந்து நாங்கள் எங்கள் நிலத்தை நாங்களே பயிரிடப் போகிறோம் என்ற உண் மையான நோக்கத்தோடு சொன்னாலும்கூட அவன் தன்னுடைய நிலத்தை கைப்பற்ற முடியாது. இது பிசகு. அரசாங்கத்தாருடைய உத்தேசம் அப் படி இல்லை என்றுகூட நினைக்கிறேன். இருந்தாலும் எழுத்து முறையில் தவறாகப் போய்விட்டது என்று நினைக்கிறேன். சொந்தத்தில் பயிரிட விரும்புகிறவனுக்கு ஒரு ஈவு கொடுத்துத்தான் ஆகவேண்டும். சொந் தத்தில் பயிரிட விரும்புகிறவனை நிலத்தின் பக்கத்தில் வரக்கூடாதென்று சொல்வது நாட்டுக்கும் விவசாயிக்கும் நல்லதல்ல. இந்தக் குறையையும் மசோதாவில் நிவர்த்திக்கவேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

"ஏற்கெனவே, சொன்ன (1) இடைத்தரகனுக்கு இடம் கொடுத் திருப்பது, (2) கோவில், மடங்கள், ஸ்தாபனங்கள்முதலியனவற்றின் கீழ் உள்ள விவசாயிகளை அப்புறப்படுத்துவதை தடைசெய்வதற்கு வழி இல்லா மல் இருப்பது, (3) தன் நிலத்தில் சொந்தக்காரன் சொற்ப விவசாயியாக இருந்தால்கூட தானே உழுவதற்கு இடம் கொடுக்காதது ஆகிய இந்த மூன்று குறைகளையும் நிவர்த்தி செய்யவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன்."

6th August 1955]

10-40 a.m. * **Sri C. H. KANARAN** :—" മിസ്റ്റർ ഡിപ്യൂട്ടി സ്പീക്കർ, സർ, ഒഴിപ്പിക്കലിൽനിന്നു കൃഷിക്കാർക്ക് രക്ഷനൽകാൻവേണ്ടി കൊണ്ടുവന്നിരിക്കുന്ന ഈ ബില്ല് കൃഷിക്കാർക്ക് യഥാർത്ഥത്തിൽ രക്ഷചെയ്യുമോ എന്നു പരിശോധിക്കേണ്ടതുണ്ട്. കൃഷിക്കാർ മര്യാദയ്ക്കു് വാരവും പാട്ടവും കൊടുത്താൽ ഒഴിപ്പിക്കുകയില്ല, ഒഴിപ്പിക്കാൻ പാടില്ല എന്നാണു നിബന്ധന. മര്യാദയ്ക്കു വാരവും പാട്ടവും കൊടുക്കുകയെന്നു പറഞ്ഞാൽ ഇന്നു് നിലവിലുള്ള അമിതമായ, അക്രമമായ, കൃഷിക്കാരനു് താങ്ങാനാവാത്ത വാരവും പാട്ടവും കൊടുത്തു കൊള്ളുകയെന്നാണ് അർത്ഥം. ഇന്നു് സകലരും (ബഹുമാനപ്പെട്ട മന്ത്രിമാരുൾപ്പെടെ) സമ്മതിക്കുന്ന ഒരു കാര്യമാണ് നിലവിലുള്ള വാരവും പാട്ടവും അമിതമാണ്, അതു കൃഷിക്കാരനെക്കൊണ്ടു് കൊടുക്കാൻ സാധിക്കുന്നതല്ല എന്ന്. അതുകൊണ്ടാണ് മലബാറിൽ മര്യാദപ്പാട്ടം നിശ്ചയിക്കാൻ കോടതികളേർപ്പെടുത്തിയിട്ടുള്ളതു്. നടപ്പിലുള്ള പാട്ടവും വാരവും വീഴ്ചകൂടാതെ കൊടുത്താൽ ഒഴിപ്പിക്കുകയില്ലെന്നു് പറയുന്നതിന്റെ അർത്ഥം നേരേ പറഞ്ഞാൽ വീഴ്ചകൂടാതെ ജന്മിമാർക്ക് പാട്ടം കിട്ടാൻ ഉറപ്പു നൽകുകയെന്നാണ്. പാട്ടം കൊടുക്കാൻ സാദ്ധ്യമല്ലെങ്കിൽ ഒഴിഞ്ഞുപൊയ്ക്കോ. ഭൂമിവേണമെങ്കിൽ പാട്ടം മുഴുവൻ യാതൊരു വീഴ്ചയും കൂടാതെ കൊടുത്തോളൂ. ഇന്നു് ജന്മിമാർക്ക് പാട്ടംകിട്ടാൻ ബുദ്ധിമുട്ടുണ്ടെങ്കിൽ അതെല്ലാം തീർത്തു് സുഗമമായിട്ട് പാട്ടം പിരിക്കാനുള്ള ഒരു ബില്ലാണിതു്. ഇന്നു് പാട്ടക്കുടിശ്ശികയുണ്ടായാലും, പാട്ടം അമിതമായതുകൊണ്ടാണ്, താങ്ങാനാവാത്തതുകൊണ്ടാണ് കുടിശ്ശികവന്നതു്, പാട്ടം കുറയ്ക്കണം എന്നു് വാദിച്ചു് എതിർത്തുനില്ക്കാൻ കൃഷിക്കാർ മുന്നോട്ടു വന്നിട്ടുണ്ട്. അതിനു എതിരായി നിലവിലുള്ള പാട്ടം യാതൊരു വീഴ്ചയും കൂടാതെ കൊടുത്തുകൊള്ളണം അല്ലെങ്കിൽ പുറത്തു കടന്നുകൊള്ളണം എന്നു് ഗവർമ്മേണ്ടുതന്നെ നിയമം കൊണ്ടുവന്നു് ജന്മിമാരുടെ കൈയെ ഒന്നുകൂടെ ബലപ്പെടുത്താനുള്ള ശ്രമമാണിതെന്നു പറഞ്ഞാൽ ഒട്ടും തെറ്റല്ല. പാട്ടക്കാർക്ക് സംരക്ഷണം നൽകുന്നതിനുള്ള ബില്ലെന്നുപറഞ്ഞു ഒരോമനപ്പേരും കൊടുത്തു് കൊണ്ടുവന്നിരിക്കുന്ന ഈ നിയമത്തിലടങ്ങിയിരിക്കുന്നതു് ഇത്തരത്തിലുള്ള വിഷമാണ്.

" സർ, ഈ ബില്ലിലെ മറ്റൊരു വ്യവസ്ഥ ഒഴിപ്പിക്കപ്പെട്ട ആളുകൾക്ക് ഭൂമി തിരിച്ചുകൊടുക്കുന്നതിനെ സംബന്ധിച്ചുള്ളതാണ്. ഒഴിപ്പിക്കപ്പെട്ട ഭൂമി തിരിച്ചു കിട്ടുമെന്നു പറഞ്ഞാൽ കൃഷിക്കാർക്കെല്ലാം പെട്ടെന്നു അളവററ സന്തോഷമാണുണ്ടാവുക. പക്ഷെ നിബന്ധനയുടെ പൊരുൾ മനസ്സിലാക്കുമ്പോഴാണ് അതിലടങ്ങിയിരിക്കുന്നതു് ഒരുതരം വഞ്ചനയാണ്, തട്ടിപ്പാണ് എന്നു് ബോദ്ധ്യപ്പെടുന്നതു്. കുടിശ്ശികയുള്ള വാരം പാട്ടം മുഴുവൻ കൊടുത്തു തീർത്താൽ ഭൂമി വീണ്ടുകിട്ടാൻ അവകാശമുണ്ടെന്നാണ് നിബന്ധന. പോരേ ? പാട്ടം അടയ്ക്കാൻ നിവൃത്തിയില്ലാതെ, പാപ്പരായി, തെരുവുതെണ്ടികളായി പട്ടിണികിടക്കുന്ന കൂട്ടരോടു പറയുകയാണ് പാട്ടക്കുടിശ്ശികയെല്ലാം കൊടുത്തു തീർത്തിട്ടു ഇതാ ഭൂമി പിടിച്ചോ എന്നു്. ഇതു് കൃഷിക്കാരനെ വിഡ്ഢിയാക്കലാണ്. ഭൂമി കൈവശമുണ്ടായിരുന്ന കാലത്തു് പാട്ടം അടയ്ക്കാൻ നിവൃത്തിയില്ലാഞ്ഞിട്ടാണ് ജന്മി കൃഷിക്കാരെ തെരുവിലാക്കിയതു്. ഇന്നു തെരുവിൽ കിടക്കുന്ന കൃഷിക്കാരനോടു് ഗവർമ്മേണ്ടു പറയുകയാണ് വേഗത്തിൽ ബാക്കി മുഴുവൻ കൊടുത്തു തീർത്തുകൊള്ളണമെന്നു്. ജന്മിക്ക് ഈടാകാതെപോയിട്ടുള്ള പാട്ടം പിരിച്ചുകൊടുക്കുന്നതിനു് ഗവർമ്മേണ്ടു് കണ്ടുപിടിച്ചിരിക്കുന്ന ഒരടവാണിതു്. ഒഴിപ്പിക്കപ്പെട്ട കുടിയാന്മാരുടെ മോക്ഷസിദ്ധിക്കെന്നു് കൊട്ടിഘോഷിച്ചുംകൊണ്ടു് കൊണ്ടുവന്നിരിക്കുന്ന ഈ നിബന്ധനയനുസരിച്ചു് ഒഴിപ്പിക്കപ്പെട്ടതിൽ ഒരു അഞ്ചു ശതമാനം പേർക്കെങ്കിലും ഭൂമി തിരിച്ചെടുക്കാൻ കഴിയുമോ എന്നു് സംശയമാണ്. തെരുവിൽ കിടക്കുന്നവനു് പാട്ടക്കുടിശ്ശിക കൊടുത്തു തീർക്കാനോ ഭൂമി വീണ്ടെടുക്കാനോ ഒരിക്കലും സാധിച്ചുവെന്നു വരുന്നതല്ല. ചുരുക്കത്തിൽ, കൃഷിക്കാർക്ക് രക്ഷ നൽകാനെന്നും പറഞ്ഞു കൊണ്ടുവന്നിരിക്കുന്ന ഈ ബില്ലിന്റെ ഉദ്ദേശം കുടിശ്ശികയുള്ള പാട്ടം ജന്മിമാർക്ക് എളുപ്പത്തിൽ പിരിച്ചുകൊടുക്കുകയും, പാട്ടക്കുടിശ്ശികയുടെ പേരിൽ യാതൊരു ബുദ്ധിമുട്ടും കൂടാതെ കുടിയാനെ ഒഴിപ്പിക്കാൻ ജന്മിക്കു സൌകര്യമുണ്ടാക്കിക്കൊടുക്കുകയുമാണ്. 1954 ഡിസമ്പറിനുശേഷം ഒഴിപ്പിക്കപ്പെട്ടവർക്കു മാത്രമേ തിരിച്ചുകിട്ടാനവകാശമുള്ളുവെന്നാണ് മറ്റൊരു വ്യവസ്ഥ. ഭൂപരിഷ്കരണനിയമം കൊണ്ടുവരാൻ പോകുന്നു, ഇതാ വരുന്നു, ഇന്നു വരുന്നു, നാളെ വരുന്നു എന്നെല്ലാം നമ്മുടെ മന്ത്രിമാർ 1951 മുതൽക്കേ പ്രസംഗിച്ചു നടക്കുകയാണ്. അക്കാലം മുതല്ക്കു് ഇന്നാട്ടിൽ ഒഴിപ്പിക്കലുകൾ തകൃതിയായി നടന്നിട്ടുണ്ട്. ഒഴിപ്പിക്കലുകൾ നടന്നിട്ടുള്ളതു് അധികവും 1954 ഡിസമ്പറിനുമുമ്പാണ്. അതിനുശേഷം ഒഴിപ്പിക്കപ്പെട്ടവർ വളരെ കുറച്ചു തുച്ഛമായ ഒരു സംഖ്യയേ ഉണ്ടായിരിക്കയുള്ളു. **Tanjore**

6th August 1955] [Sri C. H. Kanaran]

Pannaiyal Protection Bill കൊണ്ടുവന്ന കാലം മുതൽക്കേ ഈ രാജ്യത്തു് ഒഴിപ്പിക്കലുകൾ ഭയങ്കരമായ തോതിൽ ആരംഭിച്ചിട്ടുണ്ടു്. 1954 നു മുമ്പു ഒഴിപ്പിക്കപ്പെട്ട ബഹുസഹസ്രം കൃഷിക്കാർക്കു് യാതൊരു രക്ഷയും ഈ ബില്ലുകൊണ്ടു് സിദ്ധിക്കുന്നില്ല.

"സർ, ഒഴിപ്പിക്കപ്പെട്ട കുടിയാനു ഭൂമി തിരിച്ചുകിട്ടുന്നതിന്നു നിശ്ചയിച്ചിരിക്കുന്ന നടപടിക്രമം തന്നെ വളരെ ബുദ്ധിമുട്ടുള്ളതാണു്. റവന്യൂ ഡിവിഷനൽ ആഫീസരെയാണു് കോടതിയായി നിശ്ചയിച്ചിരിക്കുന്നതു. റവന്യൂ ഡിവിഷനൽ ആഫീസർ ആഫീസിലുണ്ടായിരിക്കുന്നതുതന്നെ ചുരുക്കമാണു്. ആഴ്ചയിലഞ്ചുദിവസവും സർക്യൂട്ടിലായിരിക്കും. ഫീസ്സും, സാക്ഷിപ്പടിയും, ബത്തയുമെല്ലാം അടച്ചു റവന്യൂ ഡിവിഷനൽ ആഫീസരുടെ കോടതിയിൽ പോയി ഒരു തീർപ്പു സമ്പാദിക്കുക എന്നു പറഞ്ഞാൽ സാധാരണ കൃഷിക്കാരനെക്കൊണ്ടു് സാദ്ധ്യമല്ല. അതുകൊണ്ടു ചെലവു കുറഞ്ഞതും കൂടുതൽ സുഗമവും ലഘുവുമായ ഒരുപാധി ഉണ്ടാക്കണമെന്നാണു് ഞാൻ ആവശ്യപ്പെടുന്നതു്. ഗ്രാമങ്ങളിൽ സഞ്ചരിച്ചു കൃഷിക്കാരുടെ ഹരജികൾ കേട്ടു തീരുമാനിക്കുന്നതിനുള്ള ഒരു മെഷീനറി ഉണ്ടാക്കിയാലെ കൃഷിക്കാർക്കു രക്ഷകിട്ടുകയുള്ളു. അല്ലാതെ ബില്ലിൽ നിശ്ചയിച്ചിരിക്കുന്ന തരത്തിലുള്ള ഒരു കോടതി മുഖാന്തിരം കൃഷിക്കാരനു വസ്തു തിരിച്ചെടുക്കാൻ സാദ്ധ്യമല്ല. അതിന്നുള്ള കഴിവു സാധാരണ കൃഷിക്കാർക്കില്ല. മലബാറിലെ അനുഭവം വച്ചുകൊണ്ടാണു് ഞാനിതു പറയുന്നതു്. മര്യാദപാട്ടം നിശ്ചയിക്കുന്നതിന്നു പാട്ടക്കോടതികൾ ഏർപ്പെടുത്തിയിട്ടുണ്ടെങ്കിലും കോടതിയിൽ പോയി ഹരജികൊടുത്തു ഒരു തീർപ്പു് സമ്പാദിക്കുന്നതിന്നു 10 ശതമാനം കുടിയാന്മാർക്കുപോലും സാധിച്ചിട്ടില്ല. അത്രയ്ക്കു് ബുദ്ധിമുട്ടും ചെലവുമുണ്ടു് പാട്ടക്കോടതിയിൽപോയി വിധി സമ്പാദിക്കാൻ. അതിനെക്കാൾ ബുദ്ധിമുട്ടുണ്ടാകുന്ന മട്ടിൽ ആർ. ഡി. ഒ. യുടെ ഗ്രേഡിലുള്ള ഒരു കോടതിയേയാണു് ഈ ബില്ലിൽ നിശ്ചയിച്ചിരിക്കുന്നതു്. രണ്ടു ദിവസം കോടതി കേറി കാത്തു നില്ക്കുമ്പോൾതന്നെ കുടിയാനു് ഭൂമി കിട്ടിയില്ലെങ്കിലും വേണ്ടില്ല, കോടതിയിൽ നിന്നു രക്ഷപ്പെട്ടാൽ മതിയെന്നാവും. അതുകൊണ്ടു കുടിയാനു രക്ഷ കിട്ടണമെന്നുണ്ടെങ്കിൽ ഗ്രാമങ്ങളിൽ സഞ്ചരിച്ചു കൃഷിക്കാരനു കുറഞ്ഞ ചെലവിലും ബുദ്ധിമുട്ടു കൂടാതേയും വിധി നൽകുന്ന ഒരു കോടതിയെ നിശ്ചയിക്കേണ്ടതു അത്യാവശ്യമാണു്. അതിന്നുള്ള ഭേദഗതി സെലക്റ്റ് കമ്മിററിയിൽവെച്ചു വരുത്തുമെന്നു ഞാൻ വിശ്വസിക്കുന്നു.

"സർ, എതിർപക്ഷത്തുള്ള ആളുകൾ സാധാരണയായി കൂടുതൽ പുരോഗമനവാദികളും ഉല്പതിഷ്ണുക്കളുമാണെന്നാണു് പൊതുവെയുള്ള ധാരണ. ഈ സഭയ്ക്കകത്തും വെളിയിലും അങ്ങിനെയൊരു ധാരണയുണ്ടു്. എന്നാൽ ഇന്നു എതിർപക്ഷത്തുള്ള ഒരു ബഹുമാനപ്പെട്ട മെമ്പർ ഇവിടെ സംസാരിച്ചതു കേട്ടപ്പോൾ എനിക്കു അത്ഭുതമാണുണ്ടായതു്. മിരാസ്ദാരന്മാർക്കുവേണ്ടി വാദിക്കാൻ ശ്രീ രങ്കസ്വാമി റെഡ്ഡ്യാരേക്കാൾ മിടുക്കും വാശിയുമുള്ള ഒരു അഡ്വക്കേററിനെ വേറേ കിട്ടുമോ എന്നു ഞാൻ സംശയിക്കുന്നു. എനിക്കു മുമ്പു സംസാരിച്ച സഖാവു് മണലി കന്തസ്വാമിയും മററും പല നല്ല നിർദ്ദേശങ്ങളും സഭ മുമ്പാകെ സമർപ്പിച്ചിട്ടുണ്ടു്. സെലക്റ്റ് കമ്മിററി ആ നിർദ്ദേശങ്ങൾ സ്വീകരിച്ചു ബില്ലിൽ വേണ്ട ഭേദഗതികൾ വരുത്തി ഇതിനെ യഥാർത്ഥത്തിൽ കൃഷിക്കാർക്കു് രക്ഷ നൽകുന്ന ഒരു ബില്ലാക്കിത്തീർക്കുമെന്നു ഞാൻ പ്രതീക്ഷിക്കുന്നു. ഒന്നാമതു ഈ 'പക്കെ' വ്യവസ്ഥകളെല്ലാം എടുത്തുകളയണം. ഒഴിപ്പിക്കാൻ പാടില്ലെന്നു പറഞ്ഞാൽ ആരെയും ഒഴിപ്പിക്കാൻ പാടില്ലെന്നു ഖണ്ഡിതമായി വ്യവസ്ഥ ചെയ്യണം. ഒഴിപ്പിക്കാൻ പാടില്ലെന്നു പറഞ്ഞിട്ടു്, ഒഴിപ്പിക്കാനുള്ള സകല പഴുതുകളും വച്ചുകൊടുക്കുന്ന ഒരു 'പക്കെ' വകുപ്പു കേററിവയ്ക്കുന്നതു് കൃഷിക്കാരെ പററിക്കാനുള്ള ഏർപ്പാടാണു്. മലബാർ കുടിയായ്മ നിയമത്തിന്റെ അനുഭവം വച്ചുകൊണ്ടാണു് ഞാൻ പറയുന്നതു്. ഈ കസർത്തുവിദ്യ അവസാനിപ്പിക്കണം. കൃഷിക്കാരനു നന്മ ചെയ്യുന്നവെന്നുവരുത്തി അവന്റെ പ്രീതി സമ്പാദിക്കണം, അതേ സമയം മിരാസ്ദാരെ വേദനിപ്പിക്കാതെ അവിടെ നല്ലപിള്ള ചമയുകയുംവേണം. ഇതൊരു ഒളിച്ചുകളിയാണു്. കൃഷിക്കാരനെ ഒഴിപ്പിക്കാതിരിക്കാൻ നിയമമുണ്ടാക്കുന്നുവെന്നു പ്രചരണം നടത്തുകയും അതേ സമയം മിരാസ്ദാർക്കു് പാട്ടക്കുടിശ്ശിക മുഴുവൻ എളുപ്പത്തിൽ ഈടാക്കിയെടുക്കാൻ നിയമമുണ്ടാക്കുകയുമാണു് ഇവിടെ നടക്കുന്നതു്.

"സർ, തഞ്ചാവൂർ, തിരുച്ചിറാപ്പള്ളി മുതലായ സ്ഥലങ്ങളിൽ കൃഷിക്കാരെ ഒരുകൂട്ടം ആളുകൾ ഇളക്കിവിട്ടു കുഴപ്പമുണ്ടാക്കുകയാണെന്നും കൃഷിക്കാർക്കു സ്വന്തമായി യാതൊരു ആവലാതിയുമില്ലെന്നും മററും ഒരു ബഹുമാനപ്പെട്ട മെമ്പർ ഇവിടെ പറയുകയുണ്ടായി.

ഇതു കേൾക്കുമ്പോൾ എനിക്കു അനുകമ്പ തോന്നുന്നു. ഈ രാജ്യത്തു അദ്ധ്വാനിക്കുന്ന വർഗ്ഗത്തിനു സമരം ചെയ്യാൻ അധികാരമില്ല, സമരം ചെയ്യാനുള്ള അധികാരം ഞങ്ങളുടെ മാത്രം കുത്തകയാണ്, വേറെയാരും അതിൽ കൈയിടരുത് എന്നാണ് അദ്ദേഹത്തിന്റെ അഭിപ്രായമെന്നു തോന്നുന്നു. ചൂഷണത്തിനും കൊള്ളയടിക്കും എതിരായി സമരം ചെയ്യാനുള്ള അവകാശം ഈ രാജ്യത്തെ അദ്ധ്വാനിക്കുന്ന ജനവിഭാഗത്തിനുണ്ടു്. അവരുടെ സമരം മുന്നേറുമ്പോൾ ആരു ചെറുത്താലും നിൽക്കാൻ പോകുന്നില്ല. അദ്ധ്വാനിക്കുന്ന വർഗ്ഗത്തിന്റെ സമരം മുന്നേറുമ്പോൾ അവരുടെ കൈകൾക്കു ശക്തികൂട്ടുകയെന്നുള്ളതു ഇന്നാട്ടിലെ പുരോഗമനകക്ഷികളുടെ കടമയാണ്. ഈ പ്രസംഗങ്ങളും പുരാണങ്ങളുമെല്ലാം കേട്ടു കൃഷിക്കാർ പിൻമാറുമെന്നു ആരും ധരിക്കേണ്ടതില്ല. അവരുടെ അവകാശങ്ങൾക്കുവേണ്ടി അവർ വാദിക്കാനും സമരം ചെയ്യാനുംതന്നെ ഉറച്ചു കഴിഞ്ഞിരിക്കുന്നു. മര്യാദക്കു നിയമമുണ്ടാക്കി അതു് വകവച്ചുകൊടുക്കുക. അതിനുവേണ്ടി ഈ ബില്ലുതന്നെ മാററിയെഴുതുക. അതിനു തയ്യാറില്ലെങ്കിൽ ഇതു മാററിയെഴുതിക്കുവാനുള്ള കരുത്തു ഇവിടത്തെ അദ്ധ്വാനിക്കുന്ന വർഗ്ഗത്തിനുണ്ടു്. അവർ അതു മര്യാദക്കു മാററിയെഴുതിക്കാതെ അടങ്ങുകയുമില്ല. ഗവമ്മേണ്ടു് അതു മനസ്സിലാക്കി പ്രവർത്തിച്ചില്ലെങ്കിൽ വലിയ കുഴപ്പമാണ് ഈ രാജ്യത്തു സംഭവിക്കാൻ പോകുന്നതു്.

"സർ, കൃഷിക്കാർക്കു രക്ഷ ചെയ്യുന്നതിന്നു ഈ ഗവമ്മേണ്ടിന്നും മന്ത്രിമാർക്കും എത്രമാത്രം താല്പര്യമാണുള്ളതെന്നു പ്രഖ്യാപനം ചെയ്യുന്ന മറെറാരു വ്യവസ്ഥയാണ് ഈ നിയമത്തിന്റെ കാലാവധി. ഒരു കൊല്ലത്തേക്കാണ് ഈ നിയമം ഉദ്ദേശിക്കപ്പെട്ടിരിക്കുന്നതു്. ഒരു രണ്ടുകൊല്ലമെന്നു വച്ചാൽ എന്താണ് തരക്കേടു്? ഒരു കൊല്ലത്തിനകം പുതിയ ഭൂപരിഷ്കരണനിയമം കൊണ്ടുവരാനുദ്ദേശിച്ചിരിക്കയാണു, അതുകൊണ്ടു് കൂടുതൽ കാലം ആവശ്യമില്ല എന്നു മന്ത്രിമാർ പറയും. അങ്ങനെ സമഗ്രമായ ഒരു നിയമം കൊണ്ടുവരണമെന്നു മന്ത്രിമാർക്കു ഉദ്ദേശമുണ്ടെങ്കിൽ രണ്ടു കൊല്ലമോ മൂന്നു കൊല്ലമോ കാലാവധി വയ്ക്കുന്നതിന്നു എന്താണ് തടസ്സം? പുതിയ നിയമം വരട്ടെ. വരുമ്പോൾ ഇതു ദുർബ്ബലപ്പെട്ടുകൊള്ളും. അത്രയല്ലേയുള്ളു. പുതിയ നിയമം കൊണ്ടുവരുന്നതിന്നു ഇതു് തടസ്സമായി നില്ക്കുമെന്നു ഭയപ്പെടാനൊന്നുമില്ലല്ലോ. ഒരു കൊല്ലമെന്നു പറയുന്നതു് കൃഷിക്കാരനെ പററിക്കാനുള്ള പണിയാണ്. ഒരു കൊല്ലം കഴിയുന്നതിന്നുമുമ്പ് പുതിയ നിയമം വരുമെന്നു എന്താണുറപ്പു്? ഈ മന്ത്രിമാർ പറയുന്നതിന്നു വല്ല വിലയുമുണ്ടോ? അവർ നൽകുന്ന ഉറപ്പുകളിൽ വല്ല ആത്മാർത്ഥതയുമുണ്ടോ? ഒരു കൊല്ലം കഴിയുമ്പോൾ ഈ മന്ത്രിമാർ പുതിയ നിയമം കൊണ്ടുവന്നില്ലെങ്കിൽ കൃഷിക്കാരന്റെ ഗതി എന്തായിരിക്കും? മന്ത്രിമാരുടെ വാഗ്ദാനങ്ങളെ മാത്രം വിശ്വസിച്ചു് അവനു മിരാസ്ദാരോടു എതിർത്തുനില്ക്കാൻ എങ്ങനെ സാധിക്കും? ഒരു കൊല്ലത്തിനകം നിയമം കൊണ്ടുവരാമെന്നു വാഗ്ദാനം ചെയ്തിട്ടു അതു ചെയ്യാതെ മന്ത്രിമാർ കൃഷിക്കാരെ പററിച്ചാൽ എന്തായിരിക്കും ഫലം? അങ്ങനെ ഒരു ഭയം കൃഷിക്കാർക്കുണ്ടെങ്കിൽ അവർക്കു എങ്ങനെ മിരാസ്ദാരോടു എതിർത്തുനില്ക്കാൻ സാധിക്കും? ഒരു കൊല്ലം കഴിഞ്ഞു വീണ്ടും മിരാസ്ദാരുടെ സൌജന്യത്തെ ആശ്രയിക്കേണ്ട ഒരു നിലയിൽ കൃഷിക്കാരനെ തള്ളിവിടുകയില്ലെന്നുള്ളതിന്നു് എന്താണ് ഒരുറപ്പു്? ഇതെല്ലാം അടുത്ത തിരഞ്ഞെടുപ്പിന്നു വോട്ടുപിടിക്കാനുള്ള അടവുകളാണെന്നു വിശ്വസിക്കാൻ ധാരാളം ന്യായമുണ്ടു്. പൊതു തിരഞ്ഞെടുപ്പു അടുത്തിരിക്കുന്നു. അതിനിടയ്ക്കു സമഗ്രമായ ഭൂപരിഷ്കാരം ഏർപ്പെടുത്താൻ സമയമില്ല. അതുകൊണ്ടു ഞങ്ങൾ ഒരു കൊല്ലത്തേക്കു ഇതാ ഒരു താല്ക്കാലിക നിയമമുണ്ടാക്കിയിരിക്കുന്നു. അടുത്ത തിരഞ്ഞെടുപ്പിൽ കോൺഗ്രസ്സിനുതന്നെ വോട്ടു നൽകിയാൽ ഞങ്ങൾ സമഗ്രമായ ഭൂപരിഷ്കാരം നടപ്പിൽ വരുത്തുന്നതാണ് എന്നെല്ലാം പറഞ്ഞു പൊതു തിരഞ്ഞെടുപ്പിൽ വോട്ടു സമ്പാദിക്കാനുള്ള അടവുകളല്ലേ ഇതെല്ലാമെന്നു ബലമായി ആരെങ്കിലും സംശയിക്കുന്നുണ്ടെങ്കിൽ അതിൽ തെററില്ല. നിമിഷം കഴിയുംമുമ്പ് മാറിമാറിപ്പറയുന്ന ഈ മന്ത്രിമാരെ എങ്ങനെ വിശ്വസിക്കും? മുഖ്യ മന്ത്രി കൃഷിക്കാരോടു ഒന്നു പറയുന്നു; അടുത്ത നിമിഷത്തിൽ മിരാസ്ദാരന്മാരോടു് അതിനുനേരെ വിപരീതം പറയുന്നു. കൃഷിക്കാരുടെ രക്ഷയ്ക്കുവേണ്ടിയാണു താനും തന്റെ ഗവമ്മേണ്ടും നിലകൊള്ളുന്നതു്; അടുത്തുതന്നെ കൊണ്ടുവരാൻപോകുന്ന ഭൂപരിഷ്കരണനിയമംമൂലം നിങ്ങൾക്കെല്ലാം രക്ഷ കിട്ടുമെന്നു മുഖ്യമന്ത്രി കൃഷിക്കാരോടു പ്രസംഗിക്കുന്നു. അടുത്ത നിമിഷത്തിൽ മിരാസ്ദാരന്മാരോടു പറയുന്നു: നിങ്ങൾക്കൊന്നും ഒരു ദോഷവും സംഭവിക്കുകയില്ല; നിങ്ങളെ നോവിക്കാതെ, നിങ്ങളുടെ താല്പര്യങ്ങൾക്കു യാതൊരു ഹാനിയും സംഭവിക്കാതെ വേണ്ട രക്ഷാവ്യവസ്ഥകളോടുകൂടിയേ നിയമമുണ്ടാക്കൂ, അതുകൊണ്ടു് നിങ്ങൾ പരിഭ്രമിക്കേണ്ടാ എന്നു്. ഇങ്ങനെ യാതൊരു സ്ഥിരതയുമില്ലാതെ മാറിമാറി പ്രസംഗി

6th August 1955] [Sri C. H. Kanaran]

കുന്ന മന്ത്രിമാരുടെ വാഗ്ദാനങ്ങളെ വിശ്വസിച്ചുകൊണ്ട് കൃഷിക്കാർക്ക് എന്തെങ്കിലും ചെയ്യാൻ സാധിക്കുമോ ? ഈ ഒരു കൊല്ലം കഴിഞ്ഞാലും തല്ക്കാലം നിന്നു പിഴയ്ക്കാൻവേണ്ടി വല്ലതും ഒന്നു കാട്ടിക്കൂട്ടിയെന്നുവരാമെന്നല്ലാതെ ശരിയായ ഒരു ഭൂനിയമം ഈ മന്ത്രിമാർ കൊണ്ടുവരുമെന്നു വിശ്വസിക്കാൻ പ്രയാസമായിരിക്കുന്നു. കോയമ്പത്തൂരിൽനിന്നു വരുന്ന ഒരു ബഹുമാനപ്പെട്ട മെമ്പർ, ശ്രീ ബി.കെ. നല്ലസ്വാമി, പറയുകയുണ്ടായി: കാശ്മീരിലും ഈജിപ്തിലുമെല്ലാം സീലിംഗ് ക്ലിപ്തപ്പെടുത്തിയിട്ടുണ്ടെങ്കിലും അതൊന്നും നമുക്കു സ്വീകാര്യമല്ല, നമുക്കു നമ്മുടെ സ്വന്തം സീലിംഗ് ഏർപ്പെടുത്തുകയാണ് വേണ്ടതു എന്ന്. ശരിയാണ് നമുക്കൊരു സ്വന്തം സീലിംഗ് നിശ്ചയിക്കണം. ഇന്നു മിരാസ്ദാരന്മാരുടെ കൈവശമുള്ളതു മുഴുവൻ കണക്കാക്കി അതുതന്നെ സീലിംഗായി നിശ്ചയിച്ചാൽ യാതൊരു കുഴപ്പവുമില്ല. സീലിംഗ് നിശ്ചയിച്ചിട്ടുണ്ടെന്നു പ്രചരണം നടത്താം. ഭൂമി മിരാസ്ദാരെ വിട്ടുപോവുകയുമില്ല. സീലിംഗ് നിശ്ചയിക്കും. പക്ഷെ, അതു് മിരാസ്ദാരന്മാരോടു ആലോചിച്ചു അവർ പറയുംപോലെ മാത്രമേ നിശ്ചയിക്കാൻ നിവൃത്തിയുള്ളു. ഇതു ഞാൻ ആദ്യമായി കേൾക്കുന്ന ഒരു വാദമല്ല. മലബാർ കുടിയായ്മ നിയമം ചർച്ചയ്ക്കു വന്നപ്പോൾ മര്യാദപ്പാട്ടം നിശ്ചയിക്കുന്ന പ്രശ്നം ചർച്ചയ്ക്കു വന്ന ഘട്ടത്തിൽ അന്നു മുഖ്യമന്ത്രിയായിരുന്ന ശ്രീ സി. രാജഗോപാലാചാരി പറയുകയുണ്ടായി: ഈ നിയമസഭയിൽ ഒരു ജന്മിപ്രതിനിധിയുണ്ട്, അദ്ദേഹത്തോടു ആലോചിക്കാതെയും അദ്ദേഹത്തിന്റെ സമ്മതം ലഭിക്കാതെയും എന്തെങ്കിലും വ്യവസ്ഥ ചെയ്യുന്നതു് നീതിയായിരിക്കയില്ല എന്ന്. കോൺഗ്രസ്സിനകത്തുതന്നെയുണ്ട് അധവധി ജന്മിമാരും മിരാസ്ദാരന്മാരും. അവരുടെ തടിക്കു തട്ടുമ്പോൾ സോഷ്യലിസവും അഹിംസാവാദവുമെല്ലാം കാററിൽ പറക്കും. കോൺഗ്രസ്സ് ജന്മിമാർ മററു ആരെക്കാളും ഭീകരന്മാരും ഭയങ്കരന്മാരുമാണെന്നു അപ്പോൾ വെളിവാകും. തഞ്ചാവൂരിലേയും തിരുച്ചിയിലേയും സംഭവങ്ങൾ അതു തെളിയിച്ചുകഴിഞ്ഞിട്ടുണ്ട്. ഒരു കൊല്ലം കഴിയുമ്പോൾ പുതിയ കാർഷികപരിഷ്കാരം വരുകയൊ വരാതിരിക്കുകയൊ ചെയ്യട്ടെ. ഏതായാലും തല്ക്കാലം ഇങ്ങനെ ഒരു ബില്ലുവന്ന സ്ഥിതിക്കു ഇതിനെ കൃഷിക്കാർക്കു ഗുണപ്രദമാകുംവണ്ണം കഴിയുന്നതും നല്ലവിധത്തിൽ ഭേദപ്പെടുത്തി പാസ്സാക്കിയെടുക്കാൻ നാം ശ്രമിക്കേണ്ടതാണ്. സെലക്ട് കമ്മിററിയുടെ ശ്രദ്ധ ആ വിഷയത്തിൽ കേന്ദ്രീകരിക്കപ്പെടട്ടെ എന്നു ഞാൻ ആശിക്കുന്നു.

"സർ ഈ അവസരത്തിൽ എന്റെ പ്രസംഗം അവസാനിപ്പിക്കുന്നതിനുമുമ്പ് ഗവമെണ്ടിന്നു ഒരു താക്കീതു നൽകുവാൻ ഞാൻ ആഗ്രഹിക്കുന്നു. സൂത്രത്തിലുള്ള ഇമ്മാതിരി ബില്ലുകൾ പാസ്സാക്കി കൃഷിക്കാരുടെ വായ്മൂടിക്കെട്ടാമെന്നു, പ്രക്ഷോഭണത്തെ തകർക്കാമെന്നും വ്യാമോഹിക്കാതെ വിപുലമായ കാർഷികപരിഷ്കാരത്തിന്നുള്ള നിയമനിർമ്മാണത്തിന്നു എത്രയും വേഗത്തിൽ നടപടികളെടുക്കണമെന്നു ഞാൻ ആവശ്യപ്പെടുന്നു. അല്ലാത്തപക്ഷം ഇന്നാട്ടിലെ കൃഷിക്കാർ അടങ്ങിയിരിക്കാൻ പോകുന്നില്ല. അവർ ഇപ്പോൾ തന്നെ സമരത്തിനിറങ്ങിക്കഴിഞ്ഞു. അനുനിമിഷം ശക്തിപ്രാപിച്ചുവരുന്ന അദ്ധ്വാനിക്കുന്ന വർഗ്ഗത്തിന്റെ സംഘടിതപ്രക്ഷോഭണത്തെ ചെറുത്തുനില്ക്കാൻ ആർക്കും സാദ്ധ്യമല്ല. ഈ മന്ത്രിമാർ സ്വയം ചെയ്യാൻ അമാന്തിക്കുകയാണെങ്കിൽ അവരെക്കൊണ്ടു ചെയ്യിക്കാനുള്ള കഴിവ് ഈ രാജ്യത്തെ കൃഷിക്കാർക്കുണ്ടെന്നും അതു് ചെയ്യിക്കാതെ അടങ്ങുകയില്ലെന്നു അവർ പ്രതിജ്ഞ ചെയ്തുകഴിഞ്ഞുവെന്നും മുന്നറിയിപ്പു നൽകിക്കൊണ്ടു് എന്റെ പ്രസംഗം അവസാനിപ്പിച്ചുകൊള്ളുന്നു."

* SRI M. CHINNATHAMBI THEVAR :—" Sir, first of all I would like to congratulate the Hon. Revenue Minister for bringing forward this Bill in this sitting itself. Once it was apprehended that this measure would be shelved for the time being owing to Constitutional difficulties. We all know that the land problem has been exercising the mind of the people and also of the authorities for some years past. Official and non-official committees were constituted and exhaustive enquires were made. The Government were requested again and again in this House as well as elsewhere to bring forward at an early date suitable, comprehensive legislation for solving the land problem. For some reason or other, the matter was delayed by the Government and as a result of the delay, we see 10-53 a.m.

[Sri M. Chinnathambi Thevar] [6th August 1955

unrest and trouble in some parts of the State. I am glad that at least now the Government have realized the gravity of the situation and have come forward with this legislation. This legislation, which is supposed to be the first instalment of land reform legislation, is only a piecemeal attempt to solve the problem. It concerns with only one aspect, namely protection of tenants from eviction. Though very limited in scope, this measure will go a long way to remove the bitter feeling existing between cultivating tenants and landlords. Government should not think that they can stop with this legislation. I want them to go into the root of the question and bring in a measure even before the end of this year to put an end to all these difficulties once and for all.

"It is time for the Government to make a final declaration about their ultimate stand with regard to the land problem. Are the Government going to maintain and protect the present status of the landlords or are they going to confer proprietary rights on the great body of the tillers of the soil who have been bound up with the land for generations together? The Government should make up their mind one way or the other. Otherwise there will be trouble and confusion in the land and people will be forced to go to the Court and the police very frequently. Mahatma Gandhi, the Father of our Nation, has given us a lead in this matter. He has said so many times that tillers of the soil should be made owners of the land. When our revered leader has given the lead, the Government need have no hesitation in following that lead. I think it is high time for the Government to come to a decision and solve the problem once and for all.

"Coming to the Bill proper, I am very glad to see that the Government have taken considerable pain to consider the various aspects. The actual difficulties of landlords as well as tenants have been taken into consideration. The definition of the term 'cultivating tenant' is very wide and as it is, it will include intermediaries. It is better that the definition is restricted so as to cover actual cultivating tenants only.

"1st December 1954 is taken as the relevant date for determining possession. We know that eviction has been going on for the past one or two years. I think it will be better if 1st June 1954 is taken as the relevant date.

"For restoration of possession, payment of the entire rent due is made a condition precedent. In my opinion, payment of one-half of the rent should entitle evicted tenants to restoration of possession of the land.

"It is provided that application for restoration of possession of land should be made to the Revenue Divisional Officer. A revenue division covers a wide area and it will not be easy for the tenants in remote villages to go to the headquarters of the division. There are a number of Judicial Sub-Magistrates, about three or four, in a revenue division. I think they may be vested with the power of entertaining such applications.

6th August 1955] [Sri M. Chinnathambi Thevar]

" I hope the Select Committee will give their earnest consideration to these questions. I support the Bill.

10-59 a.m

* **Sri K. R. SAMBANDAM** :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, பயிரிடும் சாகுபடியாளர் வெளியேற்றத் தடை மசோதாவைக் குறித்து ஒரு சில விஷயங்களை சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஏற்கெனவே தஞ்சை ஜில்லாவிலே பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதனாலே ஏற்பட்ட சில பலன்கள், விவசாயிகளுக்கு ஏற்பட்ட கெடுதல்கள் எல்லாவற்றையும் பார்த்து அம்மாதிரியான பிசகு திருச்சி ஜில்லாவிலே கஷ்டப்படுகிற விவசாயிகளுக்கு ஏற்படக்கூடாதென்ற முறையிலே சில விஷயங்கள் சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

" நிலத்திலிருந்து விவசாயிகள் அப்புறப்படுத்தக்கூடாது என்ற நிலைமைக்குத்தான் சட்டம் வருகிறது. அந்த சட்டத்திலே ஒரு வருஷத்திற்கு பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகள் என்றால் தஞ்சை ஜில்லாவிலே இருப்பதற்கும் திருச்சி ஜில்லாவில் இருப்பதற்கும் சில வித்தியாசங்கள் இருக்கின்றன. பெரிய நிலப் பிரபுக்கள் அதிகமாக இருக்கக்கூடிய ஜில்லா தஞ்சை ஜில்லா. திருச்சி ஜில்லாவில் ஒன்றிரண்டு ஏக்கர் வைத்திருக்கக்கூடியவரும் மிராசுதார் என்று சொல்லக்கூடிய அளவுக்கு இருக்கிறார்கள். அங்கு விவசாயிகளுக்கும் மிராசுதாரர்களுக்கும் இம்மாதிரி சச்சரவுகள் நடந்துகொண்டு வருகின்றன. விவசாயி என்று சொல்லக்கூடியவர் எப்படிப்பட்டவர், சொந்தமாக நிலம் இருக்கிறதா, எவ்வளவு இருக்கிறது என்ற பிரச்னைகளைக் கவனிக்கவேண்டும். தஞ்சை ஜில்லாவிலே ஒரு வேலிக்கு உட்பட்ட நிலத்தை மிராஸ்தார்களே சாகுபடி செய்யலாம், விவசாயச் சட்டம் கட்டுப்படுத்தாது என்று இருக்கிறது. இப்பொழுது, கொண்டுவரப்பட்ட சட்டத்திலே அவைகள் ஒன்றும் நிர்ணயம் செய்யப்படாமலேயே இருக்கிறது. ஒரு ஏக்கர் நிலம் வைத்திருக்கிறவர் இரண்டு ஏக்கர் வைத்திருக்கிறவர்களுடைய நிலத்தை ஆக்ரமிக்கிறார். இம்மாதிரி பிரச்னை வரும்போது என்ன செய்வது என்பதை நன்கு பரிசீலனை செய்து ஒரு சட்டம் கொண்டுவந்தால் மறுபடியும் தவறுதல் ஏற்படாத முறையில் இருக்குமென்று நான் சொல்கிறேன்.

" சாகுபடி செய்துவருகிறவர்களுக்கு நிலம் சொந்தமாக்கப்படும் என்ற பிரச்னையும் சர்க்கார் வாயிலாக, சர்க்காரிலே முக்கிய அங்கம் வகிக்கிற மந்திரி அவர்கள் பிரசங்கத்தின் மூலமாக மக்களுக்கு பிரசாரம் செய்யப்பட்டிருக்கிறது. நாம் சாகுபடி செய்தால் நமக்கு நிலம் வந்துவிடும் என்று ஒவ்வொருவரும் நினைத்து இப்பொழுது சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஒருவர் சாகுபடி செய்துவந்த நிலத்தை, மிராசுதார் தானே சொந்த சாகுபடி செய்தால் நிலம் நமக்கே இருக்குமென்ற நிலைமை ஒரு பக்கம் ஏற்படுகிறது. இன்னொரு பக்கம் பார்த்தால் விவசாயம் செய்யாமலேயே கூலி வேலை செய்து கொண்டிருந்த ஒருவன் நிலத்தில் பிரவேசித்து நான் சாகுபடி செய்துகொண்டு வந்தேன் என்று சொல்லி சாகுபடி செய்வதற்கு முற்படுகிறார். இதில் பலவிதமான சிக்கல்கள் ஏற்படுகின்றன. எவ்வளவு நிலங்களை ஒரு விவசாயி வைத்துக்கொண்டிருக்கலாம். ஒரு ஏர் என்றால் 10 அல்லது 15 மா நிலம் சாகுபடி செய்ய முடியும் ; அதாவது கிட்டத்தட்ட 4 அல்லது 5 ஏக்கர்கள் சாகுபடி செய்யலாம் என்ற நியதி பழக்கத்தில் இருக்கிறது. நிர்ணயம் செய்து அதன் பிரகாரம் முடிவுக்கு வரவேண்டும். யார் யார் இப்பொழுது விவசாயம் செய்கின்றார்களோ அவர்களையெல்லாம் நிலத்தைவிட்டு அப்புறப்படுத்தக்கூடாது என்று சொல்லும்போது 1-12-1954 என்று போடப்பட்டிருக்கிறது. தஞ்சை ஜில்லாவிலே 52-வது வருஷத்தில் சாகுபடி செய்து கொண்டுவந்தவர்களை நீக்க முடியாது என்று இருக்கிறது. அப்படி இருந்து கரணீகர்களிடம் ஏதாவது பணத்தைக் கொடுத்துவிட்டால் சாகுபடியே செய்யவில்லை என்று மிராசுதார் பக்கமே பேசிவிட்டு நில வெளியேற்றம் நடக்கிறது. தஞ்சை பண்ணையாள் பாதுகாப்பு சட்டம் வந்த பிறகும் நில வெளியேற்றம் நடந்துகொண்டு வருகின்றது. குறிப்பாக,

சமீபத்தில் 20 நாட்களுக்கு முன்பு பாண்டூர் என்ற கிராமத்தில் ஒரு தனிப்பட்ட மிராசுதார் ஸ்பெஷல் ஆர்ம்ட் போலிசை வைத்துக்கொண்டு விவசாயியை அப்புறப்படுத்திவிட்டார். அம்மாதிரி அதேவிதமான பிசகு திருச்சி ஜில்லாவிலும் இதர ஜில்லாக்களிலும் ஏற்படக்கூடாது என்பது தான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். இதையெல்லாம் நாம் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும்.

" ஒரு விவசாயி எவ்வளவு நிலம் வைத்துக்கொள்ளலாம், மிராசுதார் எவ்வளவு பண்ணை நிலங்கள் வைத்துக்கொள்ளலாம் என்று ஒன்றும் நிர்ணயிக்காமல் விவசாயிகளுக்கு ஒரு வருஷத்திற்கு பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறதென்றால் யார் யாருக்குப் பாதுகாப்பு ? சாகுபடிக்காக வைத்திருக்க எத்தனை ஏக்கர் நிலம் ? எவ்வளவு நிலத்திற்கு இப்படிப்பட்ட பாதுகாப்பு ? ஐந்து ஏக்கர் வைத்துக்கொண்டு சாகுபடி செய்கிறவரா ? தான் சொந்தமாக ஐந்து ஏக்கர் வைத்திருந்து இன்னொருவருடைய நிலத்தில் ஐந்து ஏக்கர் சாகுபடி செய்துவந்தாலும் அவருக்கும் பாதுகாப்பு உண்டா ? நிலம் இல்லாத ஒரு விவசாயி நிலம் நமக்கு சாகுபடி செய்தால் கிடைக்கும் என்று ஒரு குறிப்பிட்ட நிலத்தைச் சாகுபடி செய்தால் அந்த நிலம் வேறொரு விவசாயி சாகுபடி செய்ததா, மிராஸ்தார் பண்ணையில் வைத்திருந்ததா என்ற பிரச்னைகள் எல்லாம் செலக்ட் கமிட்டியின் முன் இம்மசோதா வரும்போது நன்றாக சீர்தூக்கிப் பார்த்து நல்ல முடிவு செய்யவேண்டும். ஏனென்றால், குட்டையைக் குழப்பிக்கொண்டு போவதில் பிரயோஜனம் இல்லை.

" நிலச் சீர்த்திருத்தம் வரப்போகிறது என்று சொல்லிக்கொண்டு போகப் போக இருக்கக்கூடிய விவசாயிகள் அவ்வளவு பேரும் இதுவரை கூலி வேலை செய்து வந்தவர் இப்பொழுது சாகுபடி செய்துவிட்டால் நிலம் நமக்கு வந்துவிடுகிறது என்று ஆக்கிரமிக்கப் போகிறார்கள். சாதாரணமாக நிலத்தைப்பற்றி ஒன்றும் தெரியாத, நெல்காய்ச்சி மரங்களிலிருந்து நெல் விளைகிறது என்று நினைத்துக்கொண்டு விவசாயத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாத திடீர் என்று தோன்றிய தலைவர்கள் உங்களுக்கு நிலத்தை வாங்கிக் கொடுக்கிறேன் என்று அவர்களுக்கு சொல்லிக் கொடுத்து கண்மூடித்தனமாக ஆக்ரமிக்க தூண்டுகிறார்கள். எழுதப்படிக்கத் தெரியாத விவசாயிகள் இன்றைக்கு மிகவும் அல்லல் படுகிறார்கள். ஒரு பக்கம் தலைவர்கள், இன்னொரு பக்கம் மிராசுதார்கள். இம்மாதிரி இருதலைக்கொள்ளி எறும்பு போல் இடுக்கண்ணில் மாட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

" இந்தச் சட்டம் வரும்போது தஞ்சை ஜில்லா அவசரச் சட்டத்தையும் வைத்துக்கொண்டுதான் பார்க்கவேண்டியிருக்கிறதே தவிர அது இல்லாமல் பார்க்க முடியவில்லை. அப்படியிருக்கும்போது இந்த விவசாயிகளுக்கு நிலத்தைச் சாகுபடி செய்வதற்காகத்தான் அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர குடியிருப்பதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. நிலத்தைச் சாகுபடி செய்வதற்கு மாத்திரம் பாதுகாப்பு கொடுத்தவுடனே மிராஸ்தார்கள் தங்கள் மனைக் கட்டிலிருந்து விவசாயிகளை வெளியேற்றி விடவேண்டும், என்று தங்கள் பட்டா நிலத்தில் இருக்கக்கூடாதென்று சொல்லி முனிசிப் கோர்ட்டில் 'எவிக்ஷன்' உத்தரவு வாங்கி விடுகிறார்கள். மனைக்கட்டிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட விவசாயிகள் குடி இல்லாமல் எப்படி சாகுபடி செய்யமுடியும் ? ஏற்கெனவே தஞ்சை ஜில்லாவில் கொண்டுவந்த அந்தச் சட்டத்தில் அம்மாதிரியான குறை ஏற்பட்டிருந்தது. திருச்சி ஜில்லாவிலும் மற்ற இடத்திலும் விவசாயிகளை அப்புறப்படுத்தக்கூடாதென்ற முறையையே கொண்டிருக்கிற சட்டத்திலே குடியிருப்பதையும் அப்புறப்படுத்தக்கூடாதென்று இருக்கவேண்டும். உண்மையாகவே சாகுபடி செய்யும் விவசாயி தங்குவதற்குக்கூட இடம் இல்லாமல் சாகுபடி செய்வதற்கு நிலம் எடுத்துக்கொடுத்தால் சத்திரத்தில் தங்கிக்கொண்டிருந்து சாகுபடி செய்ய முடியுமா ? அதற்கும் ஒரு பாதுகாப்பு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

6th August 1955] [Sri K. R. Sambandam]

"ஏற்கெனவே சுமுகமாக இருக்கும்போது மிராசுதார் விவசாயிகளுக்கு உரம் வாங்குவதற்கும், ஏர் வாங்குவதற்கும், மாடு வாங்குவதற்கும் இன்னும் இதைப் போன்றவைகளுக்கும் பணம் கொடுத்து வந்தார்கள். உழுகிறவனுக்கே நிலம் சொந்தம் என்ற பிரச்னை உலாவி இருந்துகொண்டு இருக்கும்போது மிராசுதார் முன்மாதிரி விவசாயிகளுக்கு கடன் கொடுப்பது இல்லை. உரம், மாடு போன்றவைகள் வாங்குவதற்கு கடன் கொடுப்பதில்லை. இம்மாதிரி ஏற்பட்டவுடனே என்ன ஆவது ? சாகுபடி செய்வதற்கே வசதி இல்லாமல் போய்விடுகிறது. சாப்பிடுவதற்கே லாட்டரி அடிக்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. முதல் வைத்துக்கொண்டு விவசாயம் செய்வதற்குப் போதுமான வசதி கிடையாது. மிராசுதார் கடன் கொடுத்து உதவி வந்தார்கள். இரண்டு பேருக்கும் ஏற்பட்ட விரோதத்தால் அந்த விவசாயிகளுக்கு கடன் இனி கிடைக்காது. அம்மாதிரி விவசாயிகளுக்குப் பண உதவி சர்க்காரிலிருந்து கிடைக்கும்படியான நிலைமையை ஏற்படுத்த வேண்டும். தக்காவிக் கடன், நிலம் உள்ளவர்களுக்கு கடன் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். நிலம் இல்லாத அப்பாவிகளுக்கு ஒருவிதமான வசதியும் கிடையாது. இரண்டு பேர்கள் நபர் ஜாமீன் கொடுத்து, அதாவது 'பர்சனல் செக்யூரிரிடி' கொடுத்தால் நிலமில்லாத விவசாயிகளுக்கும் ரூ. 100 அல்லது ரூ. 50 கொடுக்கலாம் என்று கடன் கொடுக்கும் விதிகளில் திருத்தம் செய்யலாம். அப்படிச் செய்து விவசாயிகளுக்குக் கடன் வசதி செய்து கொடுத்தால்தான் விவசாயம் செழிப்படையுமே தவிர இல்லாவிட்டால் யாதொரு பயனும் கிடையாது. குதிரையைக் கட்டிப் போட்டு அதற்கு எட்டாத இடத்தில் தண்ணீரை வைத்து குடி என்று சொல்வதைப்போல விவசாயச் சட்டத்தையும் கொண்டு வந்து விவசாயிகளுக்கு பயனளிக்க முடியாத நிலைமையில் இருந்தால் பிரயோஜனம் இல்லை. அம்மாதிரி நிலைமையில்தான் நிலமில்லா விவசாயி இன்றைய தினம் அல்லல்படுகிறான். நிலத்தைக் கொடுத்து, குடியிருப்பு வசதி இல்லாமல், சாகுபடி செய்வதற்கான பண வசதி இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறான். ஆகையால், இம்மாதிரியான முக்கியப் பிரச்னையைச் சீர் தூக்கிப் பார்த்து விவசாயிகளுக்குப் பாதுகாப்பு கொடுத்து, விவசாயிகளுக்கு பூரணமாக நன்மை கிடைக்க வேண்டுமென்ற நிலைமையில் கொடுக்க வேண்டுமே தவிர, வோட்டு வாங்குவதற்காக விவசாயிகளுக்கு நாங்கள் என்னென்னவோ செய்திருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு இருந்து அத்தோடு நின்றுவிட்டால் பிரயோஜனமில்லை. விவசாயிகள் இந்த நாட்டிற்கு முதுகெலும்பு போன்றவர்கள். அவர்கள் முன்னேற்றமடைந்தால்தான் நாடு முன்னேற முடியும் என்ற எண்ணத்தோடு விவசாயிகளுக்கு வேண்டிய வசதிகளைச் செய்துகொடுக்கக் கூடிய அளவுக்கு இச்சட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை இத்துடன் முடித்துக்கொள்ளுகின்றேன்."

* **Sri R. S. ARUMUGAM**:—"உதவி சபாநாயகர் அவர்களே, இப்போது சபை முன் கொண்டு வந்திருக்கும் விவசாயிகள் நில வெளியேற்றத்தை தடுக்கும் மசோதாவை ஆதரிக்கும் முறையில், எனது அபிப்பிராயங்கள் சிலவற்றை வெளியிடலாமென்று நினைக்கிறேன். இந்தமசோதா, இன்னும் முதலிலேயே வந்திருக்கவேண்டுமென்பது எனது எண்ணமாகும். இங்கு வந்திருக்கும் கனம் அங்கத்தினர்கள் எல்லாம், இந்த சட்ட சபை செசன்ஸுக்குள்ளாகவே, இந்த மசோதாவை சட்டமாக்க வேண்டுமென்று வற்புறுத்தி இருக்கிறார்கள். இந்த மசோதா உடனடியாக சட்டம் ஆவதற்கு அவசியமும், அவசரமும் இருக்கிறது. உணவு பிரச்சினை யை எடுத்துக் கொண்டாலும், உணவு உற்பத்தி பெருக, விவசாயிகளை நிலங்களிலிருந்து வெளியேற்றாமல் இருந்தால்தான் முடியும். இந்த வருஷம், ஒரு நிலத்தைப் பயிரிடும் விவசாயிக்கு, அடுத்த வருஷம் அந்த நிலம் கிடைக்காது என்று தெரிந்தால், அந்த விவசாயி நல்ல உரம் போட்டு பயிர் செய்யமாட்டான். ஆனால் தன்னை விட்டு அந்த நிலம் போகாது என்று தெரிந்தால், மேலும் மேலும் நல்ல உரத்தைப்போட்டு, பயிரிட்டு உற்பத்தி பெருக வழி செய்வான் அவனுக்கு, அந்த நிலத்தை அபிவிருத்தி செய்வதில் நல்ல உற்சாகமும் ஏற்படும். இதைப்பற்றி நான் பல சந்தர்ப்பங்களில் குறிப்பிட்டிருக்கிறேன். நில மாற்றம் ஒவ்வொரு வருஷமும் ஏற்பட்டால், அந்த விவசாயி 11-09 a.m.

[Sri R. S. Arumugam] [16th August 1955

உரம் போட்டு, விவசாயம் நல்ல முறையில் நடத்த நல்லெண்ணமே ஏற்படாது. அது மாத்திரமல்ல, இந்த நிலமாற்றம் ஏற்படுவதின் காரணமாக அந்த விவசாயிகளுக்கு மன நிம்மதியும் இருப்பதில்லை ஒரு பயிரிடும் சம்சாரிக்கு, அடுத்த வருஷம் தான் உழுத நிலம், சாகுபடிக்கு கிடைக்குமென்ற நிம்மதி இருக்க வேண்டும். கிராமங்களை எடுத்துக்கொண்டால், அங்கு அடிமை மனப்பான்மை இன்று கூட இருந்துக்கொண்டிருக்கிறது. இதன் முக்கிய காரணம் என்ன என்பதைச் சொன்னால் இங்கே இருக்கும் சில அங்கத்தினர்களுக்கு ஆச்சரியமாகக் கூட இருக்கும் தாழ்த்தப்பட்ட மக்கள், கிராமங்களில் அடங்கி ஒடுங்கித்தான் அடிமைகளைப் போல், மிராசுதாரர்களிடம் வேலை செய்யவேண்டும், நடந்துக் கொள்ளவும் வேண்டும். அப்படி அடங்கி ஒடுங்கி, அடிமைகளாக நடக்க இல்லை என்றால், அடுத்த வருஷம் அந்த தாழ்த்தப்பட்ட விவசாய மகனுக்கு சாகுபடி செய்ய நிலம் கிடைக்காமல் போய்விடும். நிலம் கொடுக்கமாட்டார்களே, நில வெளியேற்றம் செய்து விடுவார்களே என்ற பயமே, இந்த அடிமை மனப்பான்மைக்கு முக்கிய காரணமாக இருக்கிறது, கிராமங்களில் என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன். அது மாத்திரமல்ல, ஒருவருக்கு ஒரு வருஷத்தில் கொடுக்கப்பட்ட நிலத்தை அடுத்த வருஷம் இன்னொருவருக்கு சாகுபடிக்கு கொடுக்கப்படுவதால், சண்டை சச்சரவுகள் விவசாய மக்களுக்குள் ஏற்பட்டு, அதன் காரணமாக, பல விதமான கட்சிப் பூசல்கள் ஏற்பட்டு பல கேசுகள் கோர்ட்டின் முன் வந்து விவசாயிகள் மிகத் துன்பமுறும் சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. பல கிராமங்களில் தீராத கக்ஷியாகவே இருந்து வருகின்றன. இது எல்லாம் நடக்காமல் இருப்பதற்காகவும், விவசாயிகள் மத்தியில் கிராமங்களிலும் ஒரு நல்ல சுமூகமான நிலை ஏற்படுத்துவதற்கும், இந்த மசோதா நல்லதொரு மசோதாவாகும். ஆனால் என்னை பொருத்த அளவில், விவசாயிகளுடைய முக்கிய குறையான நில வெளியேற்றத்தை தடுக்கும் இந்த மசோதா இன்னும் சில நாட்களுக்கு முன்னதாகவே கொண்டுவந்து இருக்கப்படவேண்டும். இருந்தாலும், இந்த மசோதா கொண்டு வருவதின் காரணமாக, நில வெளியேற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கும் கடமை சர்க்காருக்கு இருக்கிறபடியால், இந்த மசோதாவில் குறிப்பிடப்பட்ட காலத்திற்கு முன்னால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும், பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்பதை சர்க்காருக்கு நான் ஞாபகப்படுத்துகிறேன்.

"இந்த சட்டத்திலே ஒரு விவசாயி நிலத்தை குத்தகைக்கு எடுத்து தானே அல்லது தனது குடும்பமே நேரிடையாக பயிர் செய்தாலும் அல்லது ஒருவர் நிலத்தை கட்டு குத்தகைக்கு எடுத்து. வேலையாட்களை வைத்து, தன்னுடைய மேற்பார்வையில் சாகுபடி செய்தாலும் அவரையும்.விவசாசாயியாகக் கருதி நிவாரணம் அளிப்பதாக மசோதாவில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது சரியாகாது. அப்படி மேல் பார்வை பார்ப்பவரை விவசாயியாகக் கருதக்கூடாது. மேலும், ஒருவர் ஏராளமான ஏக்கர் நிலங்களை குத்தகைக்கு எடுத்து, அந்த நிலங்களை உள் குத்தகைக்கு பலருக்குவிட்டு சாகுபடி செய்யச்செய்து, அதன் மூலம் நல்ல வருவாயை அடைகிறார்கள். அவர்களையும், இந்த ஏழை விவசாயிகள் வரிசையிலேயே கொண்டுவந்து, அவர்களுக்கும் இந்த மசோதாவில், பாதுகாப்பு கொடுத்திருக்கிறதாகத் தெரிகிறது. அவர்களை விவசாயிகள் என்று சொல்லுவது சரியாகாது, முறைமையாகாது என்பதுதான் என் தாழ்மையான அபிப்பிராயம் ; யார் விவசாயி என்றால், யார் ஒருவர் நிலத்தில் உழுது பாடு படுகிறாரோ, யாரால் அந்த நிலத்தில் பலன் ஏற்படுகிறதோ அவர்தான் விவசாயியே தவிர, நிலத்தைக் குத்தகைக்கு பிடித்து, ஏழை விவசாயி மக்களை கூலிக்கு அமர்த்தி, வேலை வாங்கி சாகுபடி செய்து லாபம் அடைகிறவர்கள் விவசாயிகள் ஆகமாட்டார்கள். அவர்களுக்கு இம்மசோதாவில் பாதுகாப்பு அளிப்பது எந்த முறையிலும் நல்லது அல்ல தர்மமும் ஆகாது. என்பதை முதலாவதாக கனம் மந்திரியார் அவர்களுக்கு ஞாபக மூட்டுகிறேன். ஆகவே கூலி ஆட்களை வைத்து தன்னுடைய மேற்பார்வையில் ஒரு குத்தகை நிலத்தை சாகுபடி செய்பவர்களுக்கு, விவசாயி என்ற தன்மையை கொடுத்திருப்பதை, இம் மசோதாவினின்று அகற்றவேண்டுமென்று கேட்டுக்கொளுகிறேன். இன்னொரு முக்கியமான வார்த்தை, நான் பல சந்தர்ப்

6th August 1955] [Sri R. S. Arumugam]

பங்களில் தெரிவித்திருக்கிறேன். இந்த மசோதா வரப்போகிறது என்ற காரணத்தால் பல வருஷங்களுக்கு முன்னாலிருந்தே விவசாயிகளை நிலங்களிலிருந்து வெளியேற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே விவசாயிகள் தற்போது நிலம் இல்லாது அவஸ்தைப் படுவதற்கு காரணம் ஒரு வகையில் சர்க்கார் என்றே சொல்லவேண்டும். அசல் சட்டம் வருகிறது, வந்து கொண்டிருக்கிறது என்று சொல்லிக் கொண்டிருந்தால், காங்கிரஸ்காரர்கள் விவசாயிகளுக்கு ஒரு பாதுகாப்பு சட்டம் கொண்டு வரப்போகிறார்கள், மகாத்மா காந்தி அவர்கள் ஏற்கனவே, உழுகிறவனுக்குத்தான் நிலம் சொந்தம் என்று சொல்லியிருக்கிறார்கள், அப்படிப் பட்ட காரியத்தை காங்கிரஸ் சர்க்கார் கொண்டு வந்து விடுமென்று, முன்கூட்டியே யோசித்து 1947-ம் வருஷத்திலே, அநேகர் அவ்வளவு நிலங்களையும் மொத்தமாக எடுத்து, விவசாயிகளை நில வெளியேற்றம் செய்து, அந்நிலங்களில் எல்லாம் சொந்த சாகுபடி செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலச்சுவான்தார்கள் எல்லாம், புத்திசாலிகள் என்று சொல்லக்கூடிய அளவில், விவசாயிகளை முன்னதாகவே நிலவெளியேற்றம் செய்து ஏமாற்றி இருக்கிறார்கள். அந் நிலச்சுவான்தார்களை அப்படி ஏமாற்றியவர்களை நாம் அறிவாளிகள் என்றுதான் சொல்லவேண்டுமா? அவ்விதமில்லாமல் யாரெல்லாம், நிலத்தை விட்டு நீக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களை எல்லாம் பாதுகாக்கவேண்டியது நம் சர்க்காரின் நீங்காக் கடமையாகும். வாயில்லாத அப்பாவி விவசாயிகளை உழுவதற்கென்றே கடவுள் படைத்திருக்கிறார், அமைத்திருக்கிறார், தமக்கு ஓரளவு கூலி கிடைத்தாலும் போதும் என்றிருந்த அவர்களை ஆதரிக்க வேண்டிய பொருப்பு நம்மைச் சார்ந்திருக்கிறது என்ற காரணத்தினாலும், மற்றும் இந்த நாட்டிலுள்ள ஏழைகளுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமென்று அக்கரை சர்க்காருக்கு அதிகமாக இருப்பதாலுமே, இவைகளை எல்லாம் நான் ஞாபகப் படுத்த வேண்டியதாக இருக்கிறது. திருநெல்வேலி தாலுக்காவிலே, காரையிருப்பு என்ற கிராமத்தில் சுமாராக நூறு ஏக்கரா நிலத்தை மிராஸுதார் எடுத்துக் கொண்டு, ஏற்கனவே சாகுபடி செய்து கொண்டிருந்த விவசாயிகளை அந்நிலத்திலிருந்து வெளியேற்றி இருக்கிறார்கள். அத்திமேடு என்கிற கிராமத்தில் மிராசுதாரர்கள் இம்மாதிரி செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த மசோதாவில் என்ன பாதுகாப்பிருக்கிறது? இந்த நாட்டிலே அவர்கள் பிறக்கவில்லையா? விவசாயம் செய்யவில்லையா? சர்க்கார் அவ் விவசாயிகளுக்கு அத்துர்ப்பாக்கியமான குடியானவர்களுக்கு பாதுகாப்பு ஏன் கொடுக்கக்கூடாது என்ற நல்லெண்ணத்துடன் கவனித்து அவர்களுக்கு அந்நிலத்தில் மறுபடியும் சாகுபடி செய்ய எல்லா வசதிகளும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

"அடுத்தபடியாக 1952-ம் வருஷத்தில் தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் வந்ததின் காரணமாகத் தான் மற்ற ஊர்களிலுள்ள நிலச்சுவான் தாரர்கள் பீதி அடைந்து, அங்காங்கு, ஏராளமான விவசாயிகளை நில வெளியேற்றம் செய்திருக்கிறார்கள். இந்த சட்டம் வருவதற்குமுன் விவசாயிகள் கிளர்ச்சி தஞ்சை ஜில்லாவில் பலமாக இருந்தது. மற்ற பல இடங்களில், சில இடங்கள் தவிர, கிளர்ச்சிகள் அதிகமாக நடைபெறவில்லை. அரசியல் தலைவர்கள், அங்கு எல்லாம், விவசாயிகள் கிளர்ச்சிகள் வேண்டாம், உங்களுக்கு பாதுகாப்புகள் வரத்தான் போகிறது என்று சொல்லிய காரணத்தால், அங்கிருக்கும் விவசாயிகள் சும்மா அமைதியாக இருந்திருக்கிறார்கள். ஆகவே தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்பு சட்டம் 1952-ல் வந்தவுடனே, மற்ற பகுதியிலுள்ள விவசாயிகள், ஏராளமாக நிலவெளியேற்றம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களை யெல்லாம் மறுபடியும் அந்நிலங்களில் புகுத்தி சாகுபடி செய்வதற்கு சகல வசதிகளும் இம் மசோதாவில் செய்யவேண்டுமென்று ஞாபகப்படுத்துகிறேன்.

"அதுமாத்திரமல்ல. 1954-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் நிலம் வைத்திருந்து நில வெளியேற்றம் செய்யப்பட்ட விவசாயிக்குத்தான் இம் மசோதாவில் பாதுகாப்பளிக்கப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக பல புகார்கள் வரும். பல இடங்களில், நிலச்சுவான்தாரர்கள், தங்களிடம் கட்டுக் குத்தகைக்கு பயிர் செய்பவர்களைக்கூட, பண்ணையாளாக, பயிர் செய்வதாக

எழுதி வாங்கி இருக்கிறார்கள். அநேக இடங்களில் இந்த காரியம் நடந்து வந்திருக்கிறது. இப்பேர்பட்ட நிலச் சீர்திருத்தங்களுக்கான, சட்டங்கள் வருவதாலே, அந்த சட்டம் தங்களை கட்டுப்படுத்தாமல் இருக்கவே, விவசாயிகளிடம் இவ்விதம் எழுதிவாங்கப்பட்டு வருகின்றன. நிலச்சுவான்தாரர்கள் இவ்விதம் எழுதிவாங்க வசதி இருக்கிறதேயொழிய, அந்த விவசாயிகளுக்கு, நிலச்சுவான்தாரர்களிடமிருந்து, தாங்கள் கட்டுக்குத்தகைக்கு நிலத்தை உழுகிறோம் என்பதைக்காட்ட எந்தவிதமான ரிகார்டு, எதிர் தாக்கீது வாங்கமுடியாது. அவர்களுக்கு, குத்தகைக்கு நிலம் வைத்திருந்ததற்கு என்ன ஆதாரம் இருக்கிறது ? இது விஷயமாக கோர்ட்டுக்கு போனால், அங்கு நீ குத்தகைக்கு பயிரிட்டதற்கு என்ன அத்தாட்சி இருக்கிறது என்றுதான் கேட்பார்கள். அப்போது, அந்த அப்பாவி விவசாயிக்கு எங்கே, ஆதரவு, பாதுகாப்பு ? இவ்விஷயங்களை எல்லாம், நன்கு கவனிக்கவேண்டியது மிக அவசியமும் அவசரமும் ஆகும் என்பதையும் ஞாபகப்படுத்துகிறேன்.

" பெருமையுடன் சொல்லுகிறேன், இந்த சர்க்காரானது, ஏழைகளுக்கு நன்மை செய்யவேண்டுமென்ற நல்ல நோக்கத்துடன்தான் இந்த மசோதாவை கொண்டுவந்திருக்கிறது, என்பதை என்போன்றவர்கள் மறுக்க மாட்டார்கள். ஆனால் சர்க்காருடைய பார்வைக்கு நான் சொன்ன விஷயங்கள் வராமல் இருக்கலாம் என்ற காரணத்தாலே, அவைகளை இப்போது ஞாபகப்படுத்துகிறேன். தான் பயிர் செய்ததற்காக, எந்தவிதமான ஆதாரச் சீட்டு விவசாயி இடத்திலே இல்லாததால், அவனுக்கு நிலத்தில் உழும் பாத்தியதை இல்லை என்று சொல்லுவது முறையாகாது. ஆகவே, அப்பேர்ப்பட்டவர்களுக்கும், இம்மசோதாவால், பாதுகாப்பு அளிக்கும் பொருப்பு சர்க்காருக்கிருக்கிறது என்பதை மறுபடியும் ஞாபகப்படுத்துகிறேன்.

" அதுமாத்திரமல்ல. கோவில் நிலங்களை, சிலர் மொத்த குத்தகைக்கு எடுத்து, அந்நிலங்களை, பலருக்கு கீழ் குத்தகைக்கு விட்டிருக்கிறார்கள். இந்த மசோதாவின் பலன், யார் உண்மையாகவே, நிலத்தில் சாகுபடி செய்கிறார்களோ அதாவது நேரடியாகவே பயிரிடுகிறார்களோ அவர்களுக்குத்தான் போய் சேரவேண்டும். மற்றபடி, மொத்த குத்தகைக்கு எடுத்திருப்பவர்களுக்கு இதன் பலன் போய்ச் சேருவது நியாயமுமல்ல, தர்மமுமாகாது. அவ்விதம் தவறாக போய்ச் சேர்ந்துவிடாதபடி கவனமாகப் பார்த்துக்கொள்ளவேண்டுமென்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

" இந்தமாதிரி மசோதாக்கள், சட்டங்கள், வருவதாலே, அவருடைய காலங்களில் தங்களுக்கு வேண்டிய குத்தகையை ஒருவேளை கொடுக்க மாட்டார்கள் என்று நினைப்பதின் காரணமாக, நிலச்சுவான்தாரர்கள், விவசாயிகளை, டிபாசிட் தொகை, கட்டவேண்டுமென்று, பயிரிடும் காலத்தில் கேட்கிறார்கள். பாடுபட்டும், பட்டினி இருக்கும், விவசாயிகளுக்கு டிபாசிட் தொகை, கட்டமுடியாது. பண வசதியுள்ளவர்களும், பணக்காரர்களும், மொத்தமாக பணம் டிபாசிட் கொடுத்து, பூரா நிலங்களையும் மொத்த குத்தகைக்கு எடுத்துக் கொள்ளுகிறார்கள். இப்பணக்கார குத்தைகைக்காரர்கள், இந்நிலங்களை உட் கட்டுகுத்தகைக்கு, அதிகப்படியான குத்தகைக்கு விவசாயிகளிடத்திலே எவ்வித ரிகார்டும் இல்லாது, விட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த மசோதாவின்படி, யார் டிபாசிட் தொகை கட்டி, ரிகார்டுபூர்வமாக குத்தகை பாத்தியதை இருக்கிறதோ, அவர்களுக்குத்தான் பலன் கிடைக்குமோ அல்லது அவ்வித ரிகார்டு இல்லாமல் உண்மையில் பயிரிடும் விவசாயிகளுக்குத்தான் பலன் கிடைக்குமா என்பது தெரியவேண்டும். உண்மையில் சாகுபடி செய்யும் விவசாயிக்கு ரிகார்டு இல்லாத காரணத்தால், இந்த மசோதாவின் பலன் கிட்டாமல் போனால், இந்த மசோதா எந்த நோக்கத்துடன் கொண்டுவரப்படுகிறதோ, அந்த நோக்கம் பூர்த்தியாகாமல் போய்விடும் என்பதையும் ஞாபகப்படுத்துகிறேன்.

" மேற்கொண்டு இன்னொன்று சொல்ல விரும்புகிறேன். ஆர்.டி.ஓ., அதாவது, ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர், இந்நில வெளியேற்ற விஷயமாக நியாயம் வழங்குவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இருந்தாலும், கிராம மக்கள் பொய் சொல்லமாட்டார்கள். கிராமங்களில், நிலச்

6th August 1955] [Sri R. S. Arumugam]

சுவான்தாரர்கள் விவசாயிகள் கமிட்டி ஒன்று ஏற்படுத்தினால் இந்நில வெளியேற்ற சம்பந்தமான எல்லா சமாசாரங்களும், யார் எந்த விஷயத்தில் பயிரிட்டார்கள், நிலச்சுவான்தாரர்கள் ஏன் அவர்களை வெளியேற்றி, தன் வசமே நிலங்களை வைத்துக்கொண்டார்கள், என்பதை அந்த கமிட்டியின் மூலம் தெரிந்துகொள்ளலாம். இந்த மசோதாபடி விவசாயிகளுக்கு நில வெளியேற்ற விஷயமாக நன்மை செய்யவேண்டுமென்றால், இவ்வித கமிட்டியின் விசாரணை முடிவுதான் உதவிகரமாக இருக்கும். சட்டபூர்வமாக இப்பேர்ப்பட்ட கிராம மக்கள் கமிட்டி அமைத்து இந்த நில வெளியேற்றத்தை தீர்த்துக் கொள்ளுங்கள் என்றால், அவர்களுக்கு நிலம் சாகுபடியான உண்மையான விஷயங்கள் தெரியும். அதனால் சுமூகமாக எதையும் முடித்துக்கொள்வார்கள். அநேக கிராம காரியங்கள், இவ்வித கிராம பஞ்சாயத்துக்களால் நல்ல முறையில் முடிவுபெறுகின்றன. அதற்குமேல், தேவை ஏற்பட்டால் தாசில்தார், ரெவெனியூ டிவிஷனல் ஆபீசர்கள், வந்து, விவகாரங்களை விசாரிக்கும் நிலைமையை உண்டாக்கலாம். கிராமக் கமிட்டிகளை போட்டால், இந்நில வெளியேற்ற விஷயமான விவகாரங்களை சுலபமாக பைசல் ஏற்பட்டு, அத்தனை விவசாயிகளுக்கும் இம்மசோதாவால் பலன் ஏற்படும். ஏதோ ஒன்றிரண்டு கிராமங்களில் கட்சி மனப்பான்மை, அபிப்பிராயபேதங்கள் இருப்பதை வைத்துக்கொண்டு, இந்த மாகாணம் முழுவதும் எல்லா கிராமங்களிலும் அப்படித்தானிருக்கும், ஆகவே கிராம மக்களை நம்பக்கூடாது, அவர்கள் நல்ல முடிவுக்கு வரமாட்டார்கள் என்று எண்ணுவது நல்லதல்ல, சரியுமல்ல. ஆகவே கிராம கமிட்டிகளை இதற்காக அமைக்கவேண்டும், அதன்முடிவுக்கு இக்காரியங்களை விடவேண்டும் என்பதை மீண்டும் தெரிவிக்கிறேன். இதுபற்றி எல்லாம் செலக்ட் கமிட்டி பரிசீலனை செய்ய வேண்டுமென்று ஞாபகப்படுத்துகிறேன். இந்த மசோதாவில், கட்டுகுத்தகை, நிலத்தின் வரையரை எப்படி இருக்கவேண்டுமென்ற தன்மை குறிக்கப்படவில்லை. இதற்கு பின்னால் வரும் அசல் சட்டத்தை புகுத்தும்போது அதைப்பற்றி பேசலாம் என்று சொல்லிக்கொண்டு, இந்த மசோதாவை ஆதரித்து, நான் சொன்ன ஆலோசனைகளை கவனஞ்செலுத்தி, ஏழை அப்பாவி விவசாயிகளை ஆதரிக்கும்படி தெரிவித்துக் கொள்ளுகிறேன். செலக்ட் கமிட்டியில் வருபவர்கள், நான் சொன்னதெல்லாம் கவனிக்கவேண்டியது அவசியம்தான், என்பதை பரிசீலனைசெய்து நல்லதொரு முடிவுக்கு வருவார்கள் என்று எண்ணிக்கொண்டு இந்த தீர்மானத்தை ஆதரிக்கிறேன்."

Sri M. PALANIYANDI :—" துணைத் தலைவர் அவர்களே, நில வெளியேற்ற தடுப்பு சட்டத்தை கனம் ரெவின்யூ மந்திரி அவர்கள் கொண்டு வந்திருப்பதைப்பற்றி பாராட்டுகிறேன். ஏனென்றால் அவர் முன்பு ஒரு சமயத்தில் தான் ரெவினியூ மந்திரியாக இருக்கும்போதே நிலசீர் திருத்த சட்டத்தை கொண்டுவர ஆசைப்படுவதாக தெரிவித்து இருந்தார். அவர்கள் சீக்கிரமாக முழு சட்டத்தையும் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த நிலவெளியேற்ற சட்டமானது முன்பே ஒரு அவசர சட்டமாக கொண்டு வந்திருக்கப்படவேண்டும். முன்னமேயே ஒரு அவசர சட்டத்தை போட்டு, இப்போது அசல் சட்டத்தை கொண்டு வந்திருந்தால் மிகவும் நன்றாக இருந்திருக்கும். ஏனென்றால், எப்போது நாடு சுதந்திரம் அடைந்ததோ அன்றைய தினத்திலிருந்து தோழர் ஆறுமுகம் சொன்னதுபோல் விவசாயிகள் நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்டு வந்திருக்கிறார்கள் என்பதை மறுக்க முடியாது என்று குமரப்பா கமிட்டி ரிப்போர்ட்டு வெளிவந்ததோ என்று சுப்பிரமணியம் கமிட்டி ரிப்போர்டு வெளிவந்ததோ அன்றிலிருந்து பெரு நிலச்சுவான்தார்கள் தங்களிடம் இருக்கும் விவசாயிகளை வெளியேற்றிவிடவேண்டுமென்ற எண்ணத்தில்தான் பல காரியங்களை செய்து வந்திருக்கிறார்கள். அதன் காரணமாக தஞ்சையில் பெரும் கிளர்ச்சி ஏற்பட்டு விவசாயிகள் அடிபட்டார்கள் உதைபட்டார்கள் என்பது உங்களுக்கு தெரிந்திருக்கவேண்டும். காங்கிரசு கட்சியில் ஸ்ரீ நாராயணசாமி நாயுடு அவர்கள் கனம் ராமசாமி ரெட்டியார் அவர்கள் காலத்தில் சிறையில் அடைக்கப்பட்டார்கள் என்றால் அதற்கு காரணம் நிலவெளியேற்ற கிளர்ச்சிதான். இந்தப் பக்கம் கம்யூனிஸ்டு கட்சி மெம்பர்கள் அன்று சிறையில் அடைக்கப்பட்டார்கள் என்றால் அதற்கு

11-22 a.m.

நிலவெளியேற்றம்தான் காரணம் என்று குமரப்பா கமிட்டி ரிப்போர்டு வெளிவந்ததோ, சுப்பிரமணியம் கமிட்டி ரிப்போர்டு வெளிவந்ததோ அன்றிலிருந்து அங்கிருக்கும் விவசாயிகளை வெளியேற்றவேண்டும் என்ற ஒரே கருத்துடன் நிலச்சுவான்தார்கள் காரியம் ஆற்றிவந்திருக்கிறார்கள் என்பது உங்களுக்கு தெரிந்திருக்கவேண்டும். போன ஆண்டு, சட்டசபை கூடிய காலத்தில் அங்கத்தினர்களெல்லாம் நிலவெளியேற்றத்தைத் தடுக்க நல்லதொரு சட்டம் வேண்டுமென்பதை வற்புறுத்தி வந்தார்கள். சட்டசபை கலைந்த பிறகு மந்திரிமார்கள் ஆகஸ்டு மாதத்தில் நில சீர்திருத்த சட்டங்கள் வரும் என்றார்கள். நானும் வரும் என்று நினைத்துக்கொண்டிருந்தேன். ஆனால் கவர்னர் அவர்கள் தனது உரையில் ஏதோ அரசியல் சட்டத்தின்படி சில இடையூறுகள் இருப்பதாக எடுத்துக் காட்டியிருக்கிறார். எனினும், இந்த சமயத்தில் நிச்சயமாக நல்லதொரு சட்டத்தை சட்டசபையில் அவர்களால் கொண்டுவந்திருக்க முடியும். கொண்டுவந்திருக்கலாம். அப்படிக்கில்லாமல் ஏதோ மூன்று பிரிவுகளாக கொண்டுவரப் போவதாக சொல்லுகிறார்கள். இப்போது கொண்டுவந்திருக்கிற நிலவெளியேற்ற சட்டமானது நிலச் சுவான்தார்களுக்கு நன்மை செய்யப்போகிறதா, அன்றி விவசாயிகளுக்கு நன்மை செய்யப்போகிறதா என்பது தெளிவாக தெரிகிறது. அதன் ஷரத்துக்களிலிருந்து பல விஷயங்களைப் போட்டு, அந்தக் காரணங்களைக் கொண்டு விவசாயிகளை வெளியேற்றலாம் என்று போட்டிருக்கிறார்கள். ஏதாவது பயிரை மாற்றியிருந்தாலும் வெளியேற்றிவிடலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. உண்மையாகவே நிலவேற்றம் வருவதற்கு காரணமென்ன என்றால், விவசாயிகள் தங்களுக்கு சேரவேண்டிய சரியான குத்தகை பாக்கியை கொடுக்கவில்லை என்ற சாக்கில்தான் நிலச்சுவான்தார்கள் வெளியேற்றுகிறார்கள். மேலும் விவசாயிகள் தங்களிடம் அதிக குத்தகை வாங்குவதை குறைக்கவேண்டும் என்று கேட்க எண்ணினால்கூட நூற்றுக்கணக்கானவர்கள் வெளியேற்றப்படுகிறார்கள். ஆகவே, இந்த சட்டம் வந்தால் நிச்சயமாக விவசாயிகளுக்கு கிடைக்கும் நன்மையைவிட நிலச்சுவான்தாரர்களுக்குத்தான் நன்மை அதிகமாக கிடைக்கும் என்றபயம் இருக்கிறது. ஆகையால் பொறுக்குக் கமிட்டியில் இதை மனதில் கொண்டு யோசித்து விவசாயிகளுக்கு வேண்டிய உதவி செய்யவேண்டுமென்ற கருத்துடன் காரியம் ஆற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

" மேலும், திருச்சி ஜில்லாவை எடுத்துக்கொண்டால் பல விவசாயிகள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். லால்குடி, முசிறி போன்ற பல இடங்களில் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். அங்குள்ள மிராசுதாரர்களின் பிடிவாத குணத்தின் காரணமாக ஜில்லா அதிகாரிகள்கூட விவசாயிகளுக்கு சாதாரண தொழிலாளிகளுக்கு பாதுகாப்பு கொடுக்கவேண்டிய நிலைமை வந்துவிட்டது. அவ்வளவு விடாப்பிடியாக நாங்கள் வெளியேற்றியே தீருவோம் என்று கட்டாயப்படுத்தினார்கள், பெரும் நிலச்சுவான்தார்கள். எங்கள் கடன் பாக்கி கொடுபடவேண்டும் என்று சாக்குச் சொல்லி வெளியேற்றுவோம் என்று சொன்னார்கள். எவ்வளவோ அவர்களுக்கு சமாதானம் சொல்லியும்கூட கேட்காத காரணத்தினால் தான் ஜில்லா அதிகாரிகள் விவசாயிகளுக்கு பாதுகாப்பு கொடுக்கவேண்டிய நிலைமை வந்ததே தவிர, ஏதோ அதிகாரிகளின் அன்பின் காரணத்தினாலோ, அல்லது மற்றெந்த காரணத்தினாலோ அல்ல. பெரும் கிளர்ச்சி வரக்கூடாது என்பதற்காக விவசாயிகளுக்கு பாதுகாப்பு கொடுத்து நிலவெளியேற்றத்தை தடுக்க காரியம் செய்தார் ஜில்லா அதிகாரி. தாலுகாவாரியாக தாசில்தார்கள் சென்று காரியம் செய்தார்கள். இந்த மாகாணத்தில் வெளியேற்றம் அதிகமாக இருந்துகொண்டிருப்பதால் இந்த சட்டத்தை சீக்கிரமாக நல்ல முறையில் கொண்டுவர பொறுக்குக் கமிட்டியில் காரியங்கள் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

" அடுத்தபடியாக விவசாயிகள் கொடுக்கவேண்டிய பாக்கி சம்பந்தமாக சில விஷயங்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்த மசோதாவில் விவசாயிகள் கொடுக்கவேண்டிய பாக்கி தொகையை நிர்ணயிக்கும் அதிகாரத்தை **R.D.O.**-க்கள் கையில் கொடுத்திருக்கிறார்கள். உங்களுக்கு தெரியும்

6th August 1955] [Sri M. Palaniyandi]

சில இடங்களில் இரண்டு தாலூகாகளை தங்கள் அதிகாரத்தின் கீழ்கொண்ட R.D.O.-க்கள் இருக்கிறார்கள் என்பது. இவர்கள் சாதாரணமாக விவசாயி களிடம் சென்று அவர்கள் குறைகளை தெரிந்து, விவகாரங்களை பைசல் செய்யமுடியாது. ஆகவே சமரச அதிகாரிகளை தாலூகா வாரியாக போட வேண்டும். அவர்கள் இந்த விவசாய தகராறுகளை பைசல் செய்வதெற் கென்றே வாரந்தோறும் கிராமம் கிராமமாகச் சென்று விவசாயிகளின் யதார்த்த நிலைமை கண்டறியவேண்டும். உங்களுக்கு தெரியும். பல இடங்களில் விவசாயிகளிடமிருந்து அதிக குத்தகைக்கு சீட்டு எழுதி வாங்கி இருக்கிறார்கள். இவைபோன்ற விஷயங்களை அங்கிருக்கும் கிராம மக்களை கேட்டுத் தெரிந்துகொண்டு சமரச அதிகாரிகள் சமரசம் செய்யவேண்டும். இப்போது கொண்டு வந்திருக்கும் மசோதாப்படி ஸ்டாம்பு ஒட்டி, மனுப் போட்டு, டிப்டி கலெக்டர் அதைப் பார்த்து, 10 மைல், 20 மைல் என்று கிராமங்களுக்குச் சென்று காரியத்தை சாதிக்கவேண்டுமென்றால் முடியவே முடியாது. இன்னும் பல கஷ்டங்கள் R.D.O.-க்களுக்கு இருக்கின்றன. ஆகவே, பொறுக்கு கமிட்டியில் ஒவ்வொரு தாலூகாவாரியாக சமரச அதிகாரிகளை போட்டு காரியம் ஆற்ற முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். திருச்சி போன்ற பல இடங்களில் காங்கிரஸ் இயக்கங்கள் விவசாய சங்கம் முதலிய சங்கங்கள் சமரச வேலைகளில் பெரிதும் பங்கு கொண்டிருக்கின்றன. நானும் பல இடங்களில் சமரச அதிகாரியுடன் உட்கார்ந்து காரியம் ஆற்றியிருக்கிறேன். இந்த இயக்கங்கள் சமரச அதிகாரியுடன் கிராமம் கிராமமாக சென்று விவசாயிகளை அழைத்து, குறை களை தெரிந்து கொண்டு, தகராறுகளை தீர்த்து வைத்திருக்கிறது. அதே போல் தாலூக்காவாரியாக சமரச அதிகாரிகளை வைத்துக்கொண்டு நில வெளியேற்றம் ஏன் செய்யப்பட்டிருக்கிறது என்று அறிந்து காரியம் ஆற்ற பொறுக்குக் கமிட்டியில் வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கிறேன்.

" அடுத்தபடியாக, குத்தகை பாக்கி தரவேண்டும் என்ற காரணத் திற்காக நில வெளியேற்றத்தை அனுமதிப்பது தவறு. ஆண்டாண்டு களாக 40 கலம், 35 கலம் என்று அதிக குத்தகை எழுதி வாங்கி யிருக்கிறார்கள். போட்டியின் காரணமாகவும், வேலையில்லா திண்டாட்டத்தின் காரணமாகவும் அதிக குத்தகைக்கு சீட்டு எழுதி கொடுத்திருக் கிறார்கள் விவசாயிகள். இன்னும் பல இடங்களில் அதிக குத்தகை பாக்கிக்காக 100 ரூபாய், 200 ரூபாய் கடன் தருகிறேன் என்று எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே இந்த அதிக குத்தகை பாக்கிக்காக, அல்லது மற்றெந்த காரணத்திற்காகவோ, விவசாயியை நிலத்தைவிட்டு வெளி யேற்றலாம் என்ற அதிகாரம் கொடுப்பது, நிலச்சுவாந்தார்களுக்கு பாது காப்பு அளிக்கிறதே தவிர, விவசாயிகளுக்கு அல்ல. வேலையில்லா திண் டாட்டத்தின் காரணமாக, போட்டியின் காரணமாக அதிக குத்தகைக்கு எழுதிக்கொடுத்து, விளைச்சல் அல்லாது, பாடுபட்டும் பலன் கிடைக்காத நிலையில், குத்தகை பாக்கி நின்றால், விவசாயிகளை வெளியேற்ற வேண்டும் என்ற தாக்கீது கொடுப்பதாக இருக்கிறது சட்டம். ஆகவே இந்த ஷரத்தை மாற்ற வேண்டும். நிலத்தைவிட்டு வெளியேற்றுவோம் என்று சொல்லும் போது, எவ்வளவு குத்தகைக்கு எழுதி வாங்கியிருக்கிறார்கள் என்று பார்க்கவேண்டும். தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்பு சட்டப்படி எழுதிக் கொடுத்திருந்தால் பரவாயில்லை. அதற்கு அதிகமாக எழுதிக் கொடுத் திருந்தால் அந்த அதிக குத்தகையை கொடுக்க முடியாத நிலையில், நிலத்திலிருந்து வெளியேற்றுவதை தடுக்க சட்டம் விவசாயிகளுக்கு கை கொடுக்க வேண்டுமென்று பொறுக்குக் கமிட்டி முடிவு செய்ய மென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

" அடுத்தபடியாக, 1954-ம் வருஷம் டிசம்பர் 1-ம் தேதியிலிருந்து வெளியேற்றப்பட்ட விவசாயிகள், மீண்டும் நில உரிமை பெற சட்டத்தில் வசதி செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த விவசாயிகள், திரும்பவும் அந்த உரிமையை பெற, மிராசுதாரர்கள் இந்த எட்டு மாத காலத்தில் செய்திருக்கும் சாகுபடி செலவை கொடுத்துவிடவேண்டும் என்று விதிக்கப் பட்டிருக்கிறது. இந்த எட்டு மாத காலமாக விவசாயிகள் வெளியேற்ற

[Sri M. Palaniyandi] [6th August 1955

படாமல் இருந்திருந்தால் அவன் எவ்வளவு பாடுபட்டு உழைத்திருப்பான் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் கவனிக்கவேண்டும். மேலும், அவனை வெளியேற்றியவர்கள் யார், மிராசுதாரர்கள் விவசாயிகள் இருக்கும் பொருளாதார சீர்கேடான நிலைமையில், அவனை இந்த சாகுபடி செலவை கொடுக்க வேண்டுமென்று சொன்னால் அவன் வயிறு எரியாதா ? ஆகவே, இந்த ஷரத்தினால் அவர்கள் நிலைமை பாதிக்கப்படுமே ஒழிய, அவர்களுக்கு பாதுகாப்பு ஏற்படாது. ஆகவே இந்த நிலைமையை நன்றாக கவனித்து பொறுக்கு கமிட்டியில் காரியம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"இந்த மாதிரியான சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென்ற நான் மட்டும் சொல்லவில்லை. எதிர்கட்சிகாரர்கள் மட்டும் சொல்லவில்லை. காங்கிரஸ் தரப்பில் நல்லெண்ணம் படைத்தவர்கள் ஆறுமுகம், நாராயணசாமி போன்றவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அவர்கள் கோரிக்கைகளை பல விவசாயி மக்களிடம் சென்று நன்றாக அவர்கள் நிலைமைகளை ஆராய்ந்து பார்த்து செய்துகொண்ட கோரிக்கைகளையும் மனதில்கொண்டு **Select Committee**-ல் காரியம் ஆற்ற வேண்டும். மேலும் இன்று காங்கிரஸ் போர்வையில் இருந்துகொண்டு, பெருநிலச் சுவாந்தார்கள் விவசாயிகளை நசுக்க, அவர்களை இன்னும் மோசமான நிலைமைக்கு கொண்டுவர காரியம் ஆற்றி வருகிறார்கள். விவசாயிகளிடம் அதிக குத்தகைக்கு சீட்டு எழுதி வாங்கி அவர்களை நசுக்கவேண்டுமென்று எண்ணுகிறார்கள். எதிர்கட்சிக்காரர்கள் காங்கிரசில் முற்போக்கு எண்ணம் படைத்தவர்கள் விடுக்கும் கோரிக்கைகளை தட்டிக்கழிக்கப் பார்க்கிறார்கள். இவற்றை மனதில்கொண்டு, நில வெளியேற்றத்தை நல்ல முறையில் தடுக்க, விவசாயிகளுக்கு நல்ல முறையில் பாதுகாப்பு அளிக்கக்கூடிய முறையில் சட்டத்தை கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"அடுத்தபடியாக, மற்ற நிலச் சீர்திருத்த சட்டங்களை இரண்டு மூன்று தடவைகளில் கொண்டுவரப்போவதாக சொல்லுகிறார்கள். அவைகளும் சீக்கிரம் கொண்டுவரப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த நிலவெளியேற்ற தடுப்பு சட்டமானது முன்னமேயே கொண்டு வரப்பட்டிருக்க வேண்டும். என்று தஞ்சை பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டதோ, அதாவது, 1952-லிருந்து விவசாயிகள் வெளியேற்றபட்டிருக்கிறார்கள். இதை நான் மட்டும் சொல்லவில்லை. காங்கிரஸ் அங்கத்தினர்களும் சொல்லியிருக்கிறார்
11-32 a.m. கள். ஆகவே நான் சொல்லுவது என்னவென்றால் தஞ்சாவூர் பண்ணையாள் சட்டம் அமுலுக்கு வந்ததிலிருந்து இந்த சட்டமும் அமுலுக்கு வர வேண்டும் என்று சட்டம் கொண்டு வரவேண்டும். அந்தத் தேதியிலிருந்து இந்தச் சட்டத்தைப் போடுங்கள் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. தஞ்சை ஜில்லா பண்ணையாள் சட்டம் வந்த பிறகு பிற்பட்டு நிலச் சீர்திருத்த சட்டம் வரப்போகிறது என்று நினைத்து பல இடங்களில் வெளியேற்றம் நடந்து வருகிறது. அதனால்தான் இந்த சட்டத்தை அந்தத் தேதியிலிருந்து அமுலுக்குக் கொண்டுவரவேண்டும் என்று சொல்லுகிறேன். அரசியல் சட்டத்தில் தகராறுகள் இருக்கலாம். அதற்காக இதைக் கொண்டு வரக் கூடாது என்று அர்த்தம் இல்லை. இந்தத் தகராறுகள் பல நாட்களாகத் தான் இருந்துகொண்டு வருகின்றன. இரண்டு வருஷங்களுக்கு என்று கொண்டுவந்து இந்த சட்டத்தை நீடித்துக் கொண்டுபோனால் விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளித்ததாகாது. ஆகவே இவைகளை பொறுக்குக் கமிட்டியில் ஆலோசனை செய்து முடிவுக்கு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்தக் காரியங்களை பொறுக்குக் கமிட்டியில் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்ளுகிறேன்."

11-34 a.m. RAJA MUTHIAH CHETTIAR OF CHETTINAD :—" Mr. Deputy Speaker, I wholeheartedly support this measure brought forward by the Government. I have already supported such measures. While I say that I give my wholehearted support to this measure,

6th August 1955] [Raja Muthiah Chettiar of Chettinad]

I can assure the hon. Members in the Opposition, who seem to be surprised and which I am able to see by the way in which they receive my remarks, that this is not the first time that I support an agrarian legislation of this type. I have lent my support to such measures in Burma as early as 20 years ago and long before Indian politicians started the bringing of legislation on this subject in this country. Sir, we are interested in the cultivation of the land. We are not bothered about other factors and we are not against the tenants as such. We want that the tenant must live in peace with the landholder. My friend opposite, I think his name is Mr. Vadivelu, coming from Tanjore seems to be rather excited over my support. But, I can assure him that even he will be having the feeling that in Tanjore there is a more cordial relationship between landholder and tenant than in other parts of the State. There is not much of a dispute in the Tanjore district. It is a good thing to aim at peaceful relationship between landlord and tenant by way of legislation. After the legislation is passed, there is a bigger step to be taken and that is with regard to providing necessary financial assistance to the cultivating tenants. Otherwise, the tenants will be in serious difficulty. So, the Government must think of other suitable measures to provide the necessary financial assistance to the tenants. After all, if the land-owners do not spend much money on the land, the tenants will be in difficulty. There is this big danger which the Hon. Revenue Minister must take note of.

" There is another important matter to which I wish to draw the attention of the Hon. the Revenue Minister and that is with reference to the definition of the word 'landlord'. In the Bill supplied to us, the definition of this word has been given in page 2 as 'landlord' in relation to a holding or part thereof means the person entitled to evict the cultivating tenant from such holding or part.' Those days have gone and now there is no 'lord' of any 'land'. There is no lordship over anything to-day. Let there be no mistaking about it. Let us be more serious. I would request the Hon. Revenue Minister to change this definition . . . I am glad that he agrees to my suggestion. It may be changed as 'landholder' or 'landowner'. I think such a definition only is found in the case of some other measures and I do not know why there should be deviation in respect of this measure only. I just wish to point out that this uncouth definition will not suit the year 1955 in which we are living.

" There is one other matter to which also I wish to refer in this connection. It is defined in this Bill that a landlord is a person who is entitled to evict the cultivating tenant from a holding or part. It does not speak of any ownership or any such thing. It is something like defining a 'Master' as a person who is entitled to dismiss the servant and a house-owner as a person who is entitled to evict his tenant and so on. It is really obnoxious to retain such a definition. I should say that this kind of negative explanation is very uncouth. It does not look well. I hope the

Hon. the Revenue Minister will change his mind and give a better definition to the term ' landlord '. Let the Government call him as a person who pays tax to the Government or a pattadar. There are many such agreeable definitions and the Government may very easily adopt one of them. Even now the landholder has got certain rights. Whatever it is, let us take him as he is now and let us not say that he is a person who has got a right to evict his tenant. By so saying, an odium will be attached to them and it will be made to appear that they will always be evicting their tenants. If they always evict their tenants, who will cultivate the land? There must be somebody to cultivate the land. If the landholder were to evict the tenant A, he must have a tenant B to cultivate the land. So, I would request the Hon. the Revenue Minister to change the definition of the word ' landlord ' and give a reasonable definition. Let the definition not look obnoxious as it does now. I hope he will look into this suggestion and see that the word is properly defined.

" Sir, we are interested in seeing that there is good and cordial relationship between the landholder and tenant and I hope that as a result of the passing of this measure, there will be peace among the two groups of people. I would like to entreat the Government to bring forward a suitable measure to give some substantial assistance to the agriculturist so that there may be good progress in cultivation."

11-40 a.m. ***Sri K. R. NALLASIVAM** :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவைக் குறித்து இரண்டொரு வார்த்தைகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன். கோவை ஜில்லாவைப் பொறுத்த வரையில் அங்கு நிலைமை சௌஜன்யமாக இருக்கிறது. எந்தவிதமான தகராறுகளும் கிடையாது என்று பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். அந்த ஜில்லாவைப் பொறுத்தவரையில் எந்தவிதமான சட்டமும் தேவையில்லை என்றும் நண்பர்கள் சொன்னார்கள். கோவை ஜில்லாமாதிரி எந்த ஜில்லாக்களில் புஞ்சை ஜாஸ்தியாக இருக்கிறதோ அந்த புஞ்சை நிலங்கள் பொருத்த வரையில் குத்தகை வாரம் தகராறுகள் அதிகமாக இருக்க முடியாது. தோட்டக்கால் மற்ற நஞ்சை பிரதேசங்களில்தான் இப்படிப்பட்ட தகராறுகள் கிளம்பி இருக்கின்றன. இதை நல்ல முறையில் பார்த்துச் செய்யவேண்டும். இது நம்முடைய பொறுப்பு.

" தேசம் சுதந்தரம் அடைந்த பிறகு நாட்டில் நடந்து வரும் நில வெளியேற்றத்தைப்பற்றி எதிர்த்து பெரிய கிளர்ச்சிகள் ஆரம்பமாயிற்று. அப்பொழுது நான் காங்கிரஸில் இருந்தேன். ஓமந்தூர் ரெட்டியார் காலத்தில் இப்படி கிளர்ச்சி கிளம்பி தமிழ் நாட்டில் இந்த நில வெளியேற்றத்தை எதிர்த்து இயக்கம் நடத்தினார்கள். அப்பொழுது நானும் சேர்ந்து கொண்டேன். கோவை ஜில்லாவின் உடுமலை, கோவை, ஈரோடு ஆகிய தாலுக்காகளிலும் தஞ்சை, திருநெல்வேலி ஜில்லாக்களில் அப்படிப்பட்ட இயக்கங்கள் நடந்தன. அப்பொழுது என்னையும் திரு ஜி. நாராயணசாமி நாயுடு, எம்.எல்.ஏ., போன்றவர்களையும் சர்க்கார் சிறையில் போட்டார்கள். ஒரு வருஷம் ஒன்றரை வருஷ காலம் நாங்கள் சிறையிலிருந்தோம். அதே காங்கிரஸ் இன்றைக்கு விவசாயிகளை வெளியேற்றுவதைத் தடுக்க சட்டம் கொண்டுவரக் கூடிய காலம் வந்திருக்கிறது. இப்பொழுது சில விஷயங்களை சர்க்கார் கவனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். ஒவ்வொரு பிராந்தியத்திலும் சுற்றுச்சூழல் இருந்து கொண்டிருக்கிறது. இதை சர்க்கார் கருத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். இதை பொறுக்குக் கமிட்டி உணர்ந்து கூடுமான வரையில் குறிப்பாக தமிழ் நாட்டை நாலைந்து பிராந்தி

யங்களாக பிரித்து அந்த இடங்களில் பொறுக்குக் கமிட்டி சுற்றுப் பிரயாணம் செய்து விவசாயிகளுடைய கருத்தையும் அபிப்பிராயத்தையும் நேரில் கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டும். அதன்படி சட்டத்தை திருத்தி அமைத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படிச் செய்தால்தான் விவசாயிகளுக்கு நல்லது செய்ததாக ஆகும்.

" அடுத்தபடியாக மசோதாவில் என்ன சொல்லப்படுகிறது என்றால் நிலச்சுவாந்தாரிடம் என்ன சாகுபடி செய்கிறேன் என்று சொல்லிவிட்டு அதற்குப் புறம்பாக சாகுபடி செய்தாலும் அல்லது நிலத்தை தரிசாகப் போட்டாலும், அல்லது நிலத்தை பாழ்படுத்தினாலும் அல்லது பயிரை பாழ்படுத்தினாலும் அல்லது குத்தகைதார் பாக்கி வைத்தாலும் அவர்களை நிலத்தைவிட்டு வெளியேற்றலாம் என்று சொல்லப்படுகிறது. உண்மையில் எந்த விவசாயியும் நிலத்தை தரிசாகப்போடமாட்டான். பயிரை பாழ் செய்யமாட்டான். நிலத்தை பாழ் செய்யமாட்டான். எதாகிலும் சாகு படி செய்து லாபம் சம்பாதிக்கவேண்டும் என்றுதான் இருப்பான். ஆனால் நீண்ட நாளாக குத்தகை பாக்கியைக் கொடுக்காமல்தான் இருக்கலாம். அந்த பாக்கி எப்படி ஏற்பட்டிருக்கும் என்பதைப் பார்க்கவேண்டும். நிலத்தை பாழ் படுத்துவான் என்ற காரணத்தை வைத்துக்கொண்டு வெளி யேற்றினால் அது விவசாயிக்கு பாதுகாப்பு அளித்ததாக ஆகாது. இதைத் தெளிவுபடுத்தவேண்டும்.

" அடுத்தபடியாக இந்த சட்டம் அமுலுக்கு வந்த ஒரு மாதத்திற்குள் பாக்கியை கொடுத்துவிடவேண்டும் என்றும் இல்லாவிட்டால் வெளி யேற்றிவிடுவார்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மற்றும் வெளி யேற்றப்பட்ட நிலத்தை திருப்பி வாங்குவதற்கு ரிவினியு டிவிஷனல் ஆபீ சரிடம் இந்த சட்டம் அமுலுக்கு வந்த ஒரு மாதத்திற்குள் விண்ணப்பம் செய்து கொள்ளவேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. விவசாயி களைப் பொருத்தவரைக்கும் கிராமங்களில் சட்டம் அமுலுக்கு வருவது தெரி வதில்லை. அதனால் இந்த விஷயத்தை கிராமங்களில் தண்டோரா மூலம் பிரகடனப்படுத்தவேண்டும். விவசாயிகள் தாங்களாகவே இவைகளை தெரிந்து கொள்வது கஷ்டமாக இருக்கிறது. மற்றும் இந்தக் கால வரையை ஒரு மாதம் என்பதற்கு பதிலாக மூன்று மாதங்கள் என்றுவைத் துக்கொண்டாலும் விவசாயிகளுக்கு சௌகர்யமாக இருக்கும். ரிவினியூ ஆபீசர்களுக்கு தெரிவிப்பதற்கு மூன்று மாத அவகாசம் இருக்கும்படி யாக சட்டத்தை திருத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப் படி விஸ்தரித்துக் கொடுத்தால்தான் விவசாயிகள் விவரங்களைத் தெரிந்து கொண்டு காரியங்களைச் செய்யமுடியும்.

" அடுத்தபடியாக போன வருஷம் சாகுபடி செய்தவனுக்கு நிலத்தைக் கொடுக்கவேண்டும் என்று முடிவு செய்யவேண்டும் என்ற அதிகாரம் ரிவினியூ அதிகாரிக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனால் நிச்சயமாக பல சங்கடங்கள் அதிலிருந்து ஏற்படும். போன வருஷம் யார் நிலத்தை சாகுபடி செய்தார் என்று நிர்ணயிக்கும் விஷயம் அவர்களுக்குத் தெரி யாது. அதற்கு பதிலாக அந்தப் பிராந்தியத்திலுள்ள பஞ்சாயத்து கோர்ட் டுகளுக்கு அதை நிர்ணயிக்கும்படியான அதிகாரத்தைக் கொடுத்தால் நல்லதாக இருக்கும். உண்மையாகவே போன வருஷம் யாரிடம் நிலம் இருந்தது என்ற விவரம் அவர்களுக்குத்தான் தெரியும். அந்தந்த கிரா மங்களிலுள்ள பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் சர்க்காருடைய அதிகாரத்தின் கீழ் இருக்கிறது. அந்தந்த பிராந்திய ஸ்தல ஸ்தாபனங்கள் சர்க்காரு டைய கண்காணிப்பில் இருக்கிறது. அதனால் அவர்கள் நன்றாக பரிசீலனை செய்து முடிவு செய்வதற்கு சௌகர்யமாக இருக்கும். 1947-ம் வரு ஷத்திற்குப் பின்னால் நிலசீர்திருத்தம் வரப்போகிறது என்ற காரணத் தால் நிலச்சுவாந்தார்கள் சாகுபடி குத்தகை முறையில் கையாளுவது ஒருவிதமாக இருக்கிறது. நிலத்தை குத்தகைக்கு விடும்போது ரிக்கார்டு கள் வைத்துக்கொள்வது இல்லை. வாய் மொழியிலேயே குத்தகைக்கும் விவசாயத்திற்கும் விட்டு வருகிறார்கள். ரிக்கார்டுகள் வைத்துக்கொண்டால் தான் அதைப் பார்த்து ரிவினியூ ஆபீசர்கள் போன வருஷம் யார் நிலத்தை விவசாயம் செய்தார்கள் என்று கண்டுபிடிக்கமுடியும். இப்

[Sri K. R. Nallasivam] [6th August 1955

பொழுது ரிக்கார்டுகள் வைத்துக்கொள்ளாமல் இருப்பதால் அந்தந்த ஊர் பஞ்சாயத்துகளுக்குத்தான் போன வருஷம் நிலம் யாரிடம் இருந்தது என்பது தெரியும். அதனுல்தான் பஞ்சாயத்துக்குக்கு அந்த அதிகாரத் தைக்கொடுக்கவேண்டும் என்று சொல்லுகிறேன். அப்படி பஞ்சாயத்தினி டம் அதிகாரத்தைக் கொடுத்தால்தான் சுலபமாக யாரிடம் போன வருஷம் நிலம் இருந்தது என்று கண்டு பிடிக்க முடியும். அதை செலக்ட் கமிட்டி கவனித்து அதற்கு வேண்டிய திருத்தம் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

" அதோடு ரிவினியு டிவிஷனல் கோர்ட் ஒரு இடத்தில் இயங்குவதை விட்டு அவைகள் 'மூவிங் கோர்ட்' அதாவது சுற்றி வரக்கூடிய கோர்ட் டாக அமைத்தால் விவசாயிகளுக்கு சௌகர்யமாக இருக்கும். ஒரே இடத் தில் இருந்தால் விவசாயிகளுக்குக் கஷ்டமாக இருக்கும் என்பதை எடுத் துச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஒரே இடத்தில் இருந்தால் விவசாயி களுக்கு அநேகம் நாட்களில் கோர்ட்டுக்குப் போக முடியாமல் இருக்கலாம். இந்த விஷயங்களையும் பொறுக்குக் கமிட்டி ஆராய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். விவசாயிகள் இப்பொழுது கோர்ட்டுகளுக்குப் போ வதில் கஷ்டப்படுகிருர்கள். மூவிங் கோர்ட்டாக இருந்தால்தான் அவர் களால் நேரடி சென்று தங்களுடைய தாவாவை வாதாட முடியும். அதன்பேரில் அவர்களுக்கு ஒரளவு நியாயம் கிடைக்க வழி ஏற்படும். ஆகவே இவைகளையெல்லாம் கவனித்து குறிப்பாக நிலப் பிரச்னையைப் பார்த்துச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். தமிழ் நாட்டை ஐந்து பிராந்தியங்களாக பிரித்து பொறுக்குக் கமிட்டி அங்கு சுற்றுப் பிரயாணம் செய்து விவசாயிகள் என்ன சொல்லுகிருர்கள் என்பதை அறிந்துகொண்டு அதன்படி நடக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு காரியங்களைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் பேச்சை இத் துடன் முடித்துக்கொள்ளுகிறேன்."

11-45 a.m. SRI P. S. NALLA GOUNDER :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை ஆதரிக்கும் முறையில் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். இந்த மசோதாவில் சில குறைபாடுகள் இருக்கின்றன. அவைகளை செலக்ட் கமிட்டியார் பரிசீலனை செய்து நல்ல முறையில் மாறுதல்கள் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

" நமது இந்தியர் குடும்பங்கள் எல்லாம் கூட்டுக் குடும்பங்கள். கூட்டுக் குடும்பங்களாயிருந்து பிறகு பிரிந்து போகக்கூடிய குடும்பங்கள். அவை களில் மகன், அல்லது தம்பிமார்கள் பிரிந்து போகும் போது சொந்த சாகுபடி செய்வதற்கு விரும்புவார்கள். ஆதலால் சொந்த சாகுபடி செய்வதற்கு சந்தர்ப்பம் அளிக்கவேண்டும்.

" குடியானவர்களில் கடனாளிகளாக இல்லாதவர்களே இல்லை. அவர் களின் பூமியின் நிலமையை அனுசரித்துதான் கடன் கொடுப்பவர்களும் கடன் கொடுத்திருக்கிருர்கள். கடனைக் கட்ட நிலத்தை விற்றுத்தான் தீர வேண்டும் என்ற நிலைமை ஏற்படலாம். நிலத்தை விலைக்கு வாங்குபவர் சொந்த சாகுபடி செய்ய வழியிருந்தால்தான் நிலத்தை விலைக்கு வாங்குவார்கள். இல்லாவிட்டால் நிலத்தை விலைக்கு வாங்கமாட்டார்கள். ஆதலால் நிலத்தை விற்று கடனைக் கட்ட மாட்டாமல், நில சொந்தக் காரர்கள் அழிந்து போவார்கள். நிலத்தை விலைக்கு வாங்குபவர் சொந்தமாக சாகுபடி செய்ய விரும்பினுல் அதற்கு சந்தர்ப்பம் அளிக்க வேண்டும்.

" குத்தகைதாரர் குத்தகைப்குப்பிடித்த நிலத்தை நீண்டகாலம் உழுவதுடன் குத்தகைதாரர் இரந்துபோனுலும் அவருடைய வார்சுதாரரே அந்த நிலத்தைத் தொடர்ந்து குத்தகைக்கு உழுகும் பாத்தியதையை இந்த சட்டம் கொடுப்பதால் அந்தக் குடும்பத்தாரேதான் அந்த நிலத்தை உழுதுவரவேண்டும். நிலத்தை வேருெரு விவசாயி உழுக சந்தர்ப்பம் கொடுப்பதில்லை. அப்படியானுல் தற்போது கூலி வேலை செய்யும் ஒரு ஏழை குடியானவன் விரும்பினுல் சொந்த விவசாயம் செய்ய நிலம்

கிடைக்காது. குத்தகைதாரர் பரம்பரை குத்தகைதாரராகவும், கூலி வேலை செய்பவர் கூலியாளாகவும் இருந்துவர நேரிடும் இந்த மசோதா ஒரு வருஷத்திற்கு என்று இருப்பதால் மேலே கூறிய கஷ்டம் ஏற்படாது என்று சொல்லலாம். ஆனால் நில சீர்திருத்த சட்டம் வரும்வரை நீடித்துக் கொண்டே சர்க்கார் போனால் ஆச்சரியப்படவேண்டியதில்லை. ஒரு நிலத்தின் குத்தகைதாரர் ஐந்து வருஷத்திற்கு ஒரு முறை மாற்றலாம் என்று நிர்ணயிக்கவேண்டும். அப்படியிருந்தால்தான் குத்தகைதாரர் பூமியை அபிவிருத்தி செய்வார். பூமியின் சொந்தக்காரர் எப்படி பரம்பரையாக சொந்தக்காரராக இருந்து வருகிறார்களோ அதேபோல குத்தகைதாரரும் பரம்பரை குத்தகைதாரராகவே இருந்துவருவார். அது நல்லது அல்ல.

" சொந்த பூமி அதிகம் உடையவர்கள்கூட குத்தகைக்கு அதிக பூமியை உழுதுவருகிறார்கள். சுபார் 50 அல்லது 60 ஏக்கருக்குமேல் சாகுபடி செய்யும் குத்தகைதாரர்களும் உண்டு. அவர் சாகுபடி செய்யும் நிலத்தின் அளவையும் (லிமிட்) கட்டுப்படுத்தவேண்டும். இந்த சில குறிப்புகளுடன் என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்."

* Sri K. V. RAMASWAMI :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவின்மீது என்னுடைய அபிப்பிராயத்தைக் கூறுவதற்கு முன்பு சர்க்கார் தரப்பிலிருந்து பேசிய கனம் அங்கத்தினர் ஸ்ரீ. ஆறுமுகம் அவர்களின் அபிப்பிராயத்தை நான் முழு மனதோடு வரவேற்கிறேன் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்த அபிப்பிராயங்கள், கருத்துக்கள் அத்தனையையும் சர்க்கார் கவனிக்க வேண்டும். அவற்றையெல்லாம் நிறைவேற்றவேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்தில் கூற ஆசைப்படுகிறேன். 11–48 a.m.

" அடுத்தபடியாக இந்த மசோதா மிகவும் தாமதமாகக் கொண்டுவரப் பட்டிருக்கிறது. இந்த சபை ஆரம்பமானதிலிருந்து அதாவது பொதுத் தேர்தலுக்குப் பிறகு நிலச்சீர்திருத்ததைப்பற்றி இந்தச் சபையிலும் இந்தச் சபைக்கு வெளியேயும் விடாமல் விவாதிக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக இன்றைக்கு இருக்கக்கூடிய நமது முதலமைச்சர் பதவி ஏற்ற பிறகு சட்டசபையில் பேசாவிட்டாலும் சட்டசபைக்கு வெளியே பொதுக்கூட்டங்களில் நிலச்சீர்திருத்தத்தைப்பற்றி பேசாத கூட்டமே கிடையாது. தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்புச்சட்டம் வந்த பிறகு, நாட்டில் நிலச் சீர்திருத்தத்திற்குச் சாதகமான சூழ்நிலை ஏற்பட்ட பிறகு, நாட்டில் இருக்கக் கூடிய மிராசுதாரர்களும், ஜமீந்தார்களும், மிட்டாதாரர்களும் விவசாயிகளை, குத்தகைதாரர்களை வேகமாக நிலத்திலிருந்து வெளியேற்றியிருக்கிறார்கள். இன்று கொண்டுவரப்பட்டிருக்கும் மசோதா இரண்டு வருஷங்களுக்கு முன்பாகவே வந்திருக்கவேண்டும். பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தை ராஜ்யம் பூராவும் விஸ்தரிக்கவேண்டுமென்று செய்த கிளர்ச்சியின் விளைவாக சிதம்பரத்திற்கு அச்சட்டம் விஸ்தரிக்கப்பட்டதிலிருந்து மேலும் அச் சட்டம் மற்ற இடங்களுக்கும் விஸ்தரிக்கப்படவேண்டுமென்று கிளர்ச்சி செய்யப்பட்டு வருவதைப் பார்த்து, நாட்டில் இருக்கக்கூடிய மிராசுதார்களும் நிலப் பிரபுக்களும் நிலங்களிலிருந்து எல்லா விவசாயிகளையும் வெளியேற்ற முற்பட்டிருக்கிறார்கள். இப்பொழுது வந்திருக்கும் மசோதா எட்டு மாதங்களுக்கு முன்பாக 1954-ம் ஆண்டு டிசம்பரில் நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்ட விவசாயிகளுக்கும் குத்தகைதாரர்களுக்கும்தான் லாபத்தைத் தருகிறது. இந்தக் காலவரையறை போதாது. '1954-ம் ஆண்டு டிசம்பர்' என்பதை '1953-ம் ஆண்டு ஜனவரி' என்று மாற்றவேண்டும். இந்த யோசனையை நிச்சயமாகக் கவனிக்கவேண்டுமென்றுதான் கனம் ரெவினியு மந்திரி அவர்களை இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

" அடுத்தபடியாக இந்த மசோதாவிலுள்ள ஷரத்துக்களை கவனிக்கும் போது ஒரு விஷயத்தை அழுத்தந்திருத்தமாகச் சொல்ல ஆசைப்படுகிறேன். பழைய பாக்கியை ஒரு மாதத்திற்குள் கொடுத்தால்தான் வெளியேற்றப்பட்ட விவசாயி இந்த மசோதாவினால் பலன் அடைவான் என்று ஒரு ஷரத்து இருக்கிறது. இது சர்க்கார் ஆர அமர யோசித்தாகவேண்டிய விஷயம். விவசாயிகளுடைய கடன் பளுவைப்பற்றி நாம் இந்த சபையில் எத்தனையோ

தடவை விவாதித்திருக்கிறோம். அதற்காகவே கடன் ஒத்திவைப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அச்சட்டமும் இப்போது கடன் வாய்தா சட்டமாக மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. வெளியில் இருக்கக்கூடிய நிலைமை என்ன? ஏற்கனவே வாங்கியிருக்கக்கூடிய கடனைக்கூட திருப்பிக்கொடுக்கமுடியாத நிலையிலுள்ள விவசாயிகளும், குத்தகைக்காரர்களும் எப்படி குத்தகை பாக்கியை ஒரு மாதத்திற்குள்ளாக கொடுக்கமுடியும் என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். வாங்கப்பட்ட தக்காவிக் கடனைத் திருப்பிக்கொடுக்க முடியவில்லை. அதற்காக விவசாயிகளுடைய சொத்தை ஜப்தி செய்து அதிகாரிகள் அவர்களைத் துன்புறுத்துகிறார்கள். கோவாப்ரேடிப் சொஸைட்டியில் வாங்கியிருக்கக்கூடிய கடனைத் திருப்பிக்கொடுக்கமுடியாமல் அவர்களுடைய சொத்துக்கள் ஜப்தி செய்யப்பட்டு ஏலத்திற்கு விடப்படுகின்றன. இவ்வாறு அவர்கள் பலவிதத் துன்பங்களுக்கு ஆளாகிறார்கள். மேலும் விலைவாசி நிலைமையைப் பார்த்தால் இன்றைக்குப் பாதியாகக் குறைந்திருக்கிறது. அதன் விளைவாக விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இவ்வளவு கஷ்டங்களுக்கு மத்தியில் பழைய பாக்கியை 30 நாட்களுக்குள் கொடுக்கவேண்டுமென்று சொன்னால் இந்த மசோதாவினால் விவசாயி என்ன லாபம் அடையமுடியும்? ஆகையால், இது சம்பந்தமான ஷரத்து பகுத்தறிவிற்கு ஏற்றதா என்பதை யோசிக்கவேண்டும்.

"மேலும், தற்போது இருக்கக்கூடிய கோர்ட்டு முறை நிச்சயமாக உதவி செய்யாது. பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கோர்ட்டு முறை எவ்வளவு தூரம் உபயோகமாயிருக்கிறது என்பதை அதில் அனுபவம் பெற்ற தஞ்சாவூர் அங்கத்தினர்கள் எடுத்துச் சொன்னார்கள். உண்மையிலேயே, அந்தச் சட்டம் இந்த சபையில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதனால் லாபம் உண்டு என்று விவசாயிகளுக்குத் தெரியாமல் இருக்கும். அதன் ஷரத்துகளைப்பற்றி வெளியே இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு சிறந்த முறையில் பிரசாரம் செய்யப்படவேண்டும். கோர்ட்டு அமைப்பு இன்றைக்கு இருக்கிறமாதிரி இருந்தால் யாதொரு பயனும் ஏற்படாது. இது சம்பந்தமாக ஸ்பெஷல் ஆபீசர்கள் நியமிக்கப்படவேண்டும். அந்த ஸ்பெஷல் ஆபீசர்கள் கிராமம் கிராமமாகச் சென்று அங்கங்கே விண்ணப்பங்களை வாங்கி அவற்றைப் பைசல் செய்யவேண்டும். அவர்கள் கிராமங்களுக்குச் செல்வதற்கு முன்பாக, அவர்கள் அங்கே போகப்போகும் தேதியை கிராமத்தில் உள்ளவர்களுக்குத் தண்டோரா மூலம் தெரியப்படுத்த வேண்டும். இவ்வாறு அவர்கள் ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள வழக்குகளைப் பைசல் செய்யவேண்டும். அதற்கான ஷரத்துக்களை இந்த மசோதாவில் கொண்டுவரவேண்டும். இப்பொழுது இம்மசோதாவில் அதற்கான ஷரத்துகள் இல்லாவிட்டாலும் பொறுக்குக் கமிட்டியிலாவது இவ்விஷயத்தைக் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

"அடுத்தப்படியாக, இந்த மசோதா ஒரு வருஷம்தான் அமுலிலிருக்குமென்று சொல்லப்படுகிறது. இந்த ஒரு வருஷம் போதாது. குறைந்த பக்ஷம் மூன்று வருஷமாவது இந்த மசோதா அமுலிலிருக்குமென்று சம்பந்தப்பட்ட ஷரத்தை மாற்றவேண்டும்.

"இந்த மசோதாவிலுள்ள ஷரத்துக்கள் இப்பொழுது இருக்கிற மாதிரி இருந்தால் யாதொரு பிரயோஜனமும் ஏற்படாது. இப்படியேயிருந்தால் அது ஒரு கையால் கொடுத்துவிட்டு மற்றொரு கையால் தட்டிப்பறிப்பது போலாகும். அதனால் நன்மை ஏற்படுவதற்குப் பதில் விவசாயிகளுக்குப் புதிய கஷ்டங்கள் நேரிடும். இவற்றையெல்லாம் நன்றாக கவனித்து பொறுக்குக் கமிட்டியில் மாறுதல் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்."

11-54 a.m. **Sri G. NARAYANASWAMI NAIDU** :—"கனம் சபா நாயகர் அவர்களே, தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் வந்த பிறபாடு பாக்கி இடங்களுக்கும் அதை விஸ்தரிக்கவேண்டுமென்ற முறையிலே இந்தப் புதிய மசோதாவைப் பரிசீலனை செய்யவேண்டிய நிலைமையில் நாம் இருக்கிறோம். 'தவறுதலினின்றும் படிப்பினை என்று சொல்வார்கள். தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் தஞ்சாவூர் ஜில்லா

வில் எப்படி அமுல் நடத்தப்படுகிறது என்பதைப் பார்க்கும்போது நாம் சந்தோஷப்படுவதற்கோ மகிழ்ச்சியடைவதற்கோ அதில் ஒன்றுமில்லை. அதனால் முன்னிருந்ததைவிட கஷ்டங்கள் மிகவும் கடுமையாகியிருக்கின்றன என்பதை நான் என் சொந்த அனுபவத்தில் தெரிந்துகொண்டிருக்கிறேன். ஆனால் சிலரின் மனோபாவத்தில் சிறிது மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. நமது நண்பர் ராஜா (ஸர்) முத்தையா செட்டியார் அவர்கள்கூட தனக்கு '**Landlord**' என்ற பட்டம் வேண்டாமென்று சொல்லக்கூடிய அளவுக்கு மனமாற்றம் ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது அதில் கௌரவம் இல்லையென்று நினைக்கக்கூடிய அளவுக்கு நமது சமுதாயத்தில் நல்ல சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. தாங்கள் உயர்ந்தவர்கள் என்ற மனோபாவம் சென்ற ஏழு வருஷ காலமாகக் கொஞ்சங்கொஞ்சமாக குறைந்து நாம் எல்லோரும் சமம் என்பது உறிதி ஆச்சு என்ற எண்ணம் எல்லோருக்கும் ஏற்பட்டிருப்பது இந்த நாட்டிற்கே ஒரு நல்ல காலம் என்று நான் நினைக்கிறேன். தஞ்சையில் இந்தப் பண்ணையாள் சட்டம் வந்த பிறகு ஒரு சிறு மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. பண்ணையாள்களாக இருப்பவர்கள் இதுவரையிலும் பட்டணம் படியால் இரண்டு படி கூலி வாங்கிவருகிறார்கள். சட்டப்படி தான் ஒரு பண்ணையாள் என்று நிரூபிப்பதற்கு ஸ்டாம்புகள் வாங்க வேண்டும், வக்கீல்கள் வைக்கவேண்டும். ஈரங்கி ஒரு ஊரில் இல்லை; வெளியூரில் தான் நடக்கிறது. **Conciliation** ஆபீஸருக்கும் மிராசுதார்களுக்கும் உள்ள தொடர்புக்குத் தக்கவாறு ஈரங்கி பல ஊர்களில் போடப்படுகிறது. இவ்வாறு விவசாயி பல ஊர்களுக்கு இழுத்தடிக்கப்பட்டு கடைசியில் 'நிலம் வேண்டாம், பண்ணைவேலை வேண்டாம், கூலி வேலை இருந்தால் போதும்' என்று தானாகவே சந்நியாசம் வாங்கிக்கொள்ளக்கூடிய நிர்ப்பந்தத்தில் கொண்டுவிடப்படுகிறான்.

"இன்னும் சில ஊர்களில் முதலிலே சாகுபடி பண்ணிவந்த வார, குத்தகை சாகுபடியாளர் நிலத்தைக் கோரி மனு கொடுத்தவுடனே முதலிலே அந்த ஊரிலே கிளம்புவது என்ன? பட்டிக்கு ஓட்டிய மாடுகளை குடிகள் தடுத்தார்கள் என்று வழக்கு தொடரப்படும். மறுபடி வீடுகளுக்கு ஆபத்து. மூன்று நான்கு கட்சிகள் ஏற்படும்.

"சென்ற 1947–48லே இராமநாதபுரத்திலிருந்து மிராசுதார் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளவும் சாதாரணமாய் விவசாயிகளிடத்திலே தாங்கள் நேரிலே வேறு ஆட்களைக் கொண்டுவந்து, வம்பு வளர்த்து, கிரிமினல் கேசில் சிக்கவைத்து, தண்டனை வாங்கிக்கொடுத்து விவசாயிகளே தங்களிடம் சரணாகதி அடையும் நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டார்கள். போலீசையும், சமரச அதிகாரிகளையும் தங்கள் கைக்குள் போட்டுக்கொள்ளக்கூடிய சக்தி தஞ்சை ஜில்லாவிலுள்ள மிராசுதாருக்கு இருக்கிறது.

"தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஒரு சமயத்தில் எங்கள் பகுதிக்கு விஜயம் செய்தார். அன்றையதினம் இரவே நடந்தது என்ன? இரண்டு ஆட்களைக் கொண்டுவந்து, நிர்வாணமாக அவர்களை ஊர்வலமாக அழைத்துச் சென்று, 'இது நாராயணசாமி மாலை' என்று ஒருவருக்கும், 'இது கக்கன் மாலை' என்று இன்னொருவருக்கும் எருக்க மாலை போட்டு அவர்களை கிராமம் பூராவும் சுற்றிவரச் செய்து ஊர்வலத்தை முடித்தார்கள். இம்மாதிரி நடந்தது ஒரு நாள் இரண்டு நாள் அல்ல. குற்றவாளி என்று கருதப்படுபவரை 24 மணி நேரம் கூட போலீஸ் கஸ்டடியில் வைக்கலாம். அம்மாதிரி விவசாயிகளைச் செய்ய மிராசுதார்களிடம் போலீஸ் பலம் இருக்கிறது. 'நாராயணசாமி நாயுடுவின் தூண்டுதலின் பேரில் தான் நாங்கள் இம்மாதிரி நடந்துகொண்டோம், நாங்களாகவே நடந்து கொள்ளவில்லை' என்று கோர்ட்டிலே ஸ்டேட்மெண்டு கொடுக்கிறவரையிலும் கூட விவசாயிகளை நிர்ப்பந்தப்படுத்தி எழுதி வாங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

"சமீபத்தில் இந்த வருஷத்தில் 60 விவசாயிகள் கதிராமங்கலத்தை அடுத்த சில கிராமங்களில் உள்ள விவசாயிகள் 'எல்லா குற்றமும் நாங்களே செய்தோம்; எங்களுக்கு நிலம் வேண்டாம், நிலத்தை வேறு யாருக்கு வேண்டுமானாலும் நீங்கள் கொடுத்துவிடுங்கள்' என்று கட்டாய

சந்நியாசம் வாங்கிக்கொள்ளக்கூடிய அளவுக்கு மிராசுதார்கள் நிர்பந்தப் படுத்தியிருக்கிறார்கள். மூன்று வருஷங்களாக வழக்கு தொடர்ந்து நடந்து கொண்டே வந்தது. மிராசுதார் கூட வழக்கு தொடரவில்லை, போலீசாரே வழக்குத் தொடர்ந்தார்கள். ஆறு வழ்க்குகள் தொடரப்பட்டன, அந்த 6 வழக்குகளும் தோல்வியடைந்தன. ஏழாவது வழக்கு வருகிறபோது 'எங்களுக்கு நிலமே வேண்டாம், பூமியில் இருக்கும் ஆசையையே நாங்கள் விட்டுவிட்டோம்' என்று 26 பேர்களும் எழுதிக்கொடுத்து விட்டார்கள்.

"எங்கள் பகுதியைப் பொறுத்தவரை குடியானவர்களின் உரிமைகள் போலிசாராலும் சமரச அதிகாரிகளாலும் நாசம் செய்யப்பட்டுவிட்டது. சில கன்சிலியேஷன் ஆபீசர்கள் லட்சக்கணக்கான ரூபாய்களை, இரண்டு மூன்று சந்ததிகளுக்குப் போதுமான அளவு சம்பாதித்திருக்கிறார்கள். வேண்டுமானால் நபரையும், அவருக்கு என்ன செல்வாக்கு இருக்கிறது என்பதையும், குற்றம் செய்ததற்கு அத்தாட்சியும் இருக்கிறதென்பதை ரெவினியூ மந்திரி அவர்களுக்குத் தெரிவிக்க ஆசைப்படுகிறேன். மந்திரி அவர்கள் விரும்பினால் ஸி.ஐ.டி. அதிகாரிகளைப் போட்டு விசாரித்து எவ்வளவு பணம் கன்சிலியேஷன் அதிகாரிக்கு வந்தது என்பதையெல்லாம் தெரிந்துகொள்ளவேண்டும். சர்க்காருடைய சட்டம், மந்திரிகளுடைய நல்லெண்ணம், கட்சியினுடைய கோட்பாடு இவ்வளவையும் அங்கேயிருப்பவர்கள் எப்படி சீர்குலைக்கிறார்கள் என்பதை நம்முடைய சர்க்கார் தெரிந்துகொள்வது ரொம்ப நல்லது.

"புஞ்சைக்கு பாதி வாரம் என்று சமீபத்தில் சட்டம் திருத்தப்பட்டது. அது கன்சிலியேஷன் ஆபீசரின் வரப்பிரசாதம். கத்திரிக்காய்க்கு பாதி வாரம் கொடுக்கவேண்டும். மிளகாய்க்குப் பாதி வாரம் கொடுக்கவேண்டும் என்று சொன்னார். நஞ்சையிலே அதிகப்படி வாரம் கொடுத்தால் புஞ்சையிலே அடித்துக்கொண்டு போய்விடுகிறது. முப்பது வாரம் நஞ்சைக்கு கொடுத்தால் போதுமானது என்று ஒப்புக்கொள்ளுகிறோம் என்று விவசாயிகள் சொல்கிற நிலையிலே தஞ்சை ஜில்லாவில் சில கிராமங்களில் நடைபெறுகின்றன.

"மூன்று சீட்டுகள் எழுதிக் கொடுக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். மூன்றாவது சீட்டு நீக்கப்படுகிறது. தான் எழுதிக்கொடுக்கவில்லை என்று வழக்குகள் மலிந்து வேறு இடங்களிலே யாரையும் கையாலேயே எழுதி, 'இதற்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை' என்று சொல்லச் செய்து, இருக்கக்கூடிய சாகுபடியாளர்களை வைத்துக்கொண்டு இருக்கிற நிலத்தை ஒரு வேலிக்கு சட்டத்திற்குக் கட்டுப்படாது என்று இருக்கிறது. சட்டத்தைச் செல்லுபடியாக்காமல் ஹைகோர்ட்டில் 100 வழக்குகள் இருக்கின்றன. மூன்று சதவிகிதம் 4 சதவிகிதம் வழக்குகள் இருந்தாலும் கூட நாம் எந்தச் சட்டம் செய்தோமோ மக்களுக்காக ஏற்படவேண்டிய சந்தோஷம் பூராவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அத்தகைய தவறுகள் இப்பொழுது, விஸ்தரிக்கப்பட்ட சட்டத்திலே இருக்கிறது. இனி வருகிற சட்டத்திலாவது அம்மாதிரி குறைபாடுகள் இல்லாமல் நல்ல ஆபீசர்களைப் போடவேண்டும். அவர்களுக்கு எங்கள் ஜில்லாவிலுள்ள பழக்க வழக்கங்கள் தெரியாது. கன்சிலியேஷன் ஆபீசர் ரொம்ப அபூர்வமான அதிகாரிகள்! எப்படி எப்படி மிராசுதார்கள் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போகிறது, டவுன் ஹாலில் போலீசாரை எப்படி சந்திக்க வைப்பது என்பதற்கு சூழ்நிலையை சிருஷ்டிசெய்து கொடுத்து சட்டத்திற்கு ஒரு பைசா கூட மதிப்பு இல்லாமல் கன்சிலியேஷன் கோர்ட்டுக்குப் போனால் நீதி கிடைக்கும் என்பதற்குப் பதிலாக, கன்சிலியேஷன் கோர்ட்டுக்குப் போனால் இன்னும் கடுமையான கஷ்டங்கள் ஏற்படும், நாம் பாதிக்கப்படுவோம், பொய் வழக்குகளைச் சமாளிக்க முடியாது என்ற நிலைமையில் கொண்டுவந்துவிடுகிறார்கள்.

"சென்ற இரண்டு மாதங்களுக்கு முன்னால் கொண்டல் என்ற கிராமத்தில் வாரமா, குத்தகையா என்பதை முடிவு செய்ய இரண்டு வருஷமாக வழக்கு நடந்து குடிகள் செலவுகளைச் சமாளிக்க முடியாமல் மிராசுதார்களிடம் சரண் அடையக்கூடிய நிலைக்கு கொண்டுவந்துவிடுகிறது. அம்மாதிரியான குறைபாடுகளெல்லாம் வருகின்ற சட்டத்தில் இல்லாமல் அதிகாரிகளை

நம்பி இருக்காமல் விவசாயிகளுடைய பிரதிநிதிகள், மிராசுதார்களுடைய பிரதிநிதிகள், கன்சிலியேஷன் அதிகாரிக்கு யோசனை சொல்லக்கூடிய அளவுக்கு இருக்கவேண்டும். யோசனை சொல்ல வக்கீல்கள் வராமலிருந்தால் நல்லதாக இருக்கும். கன்சிலியேஷன் ஆபீசர் நியாயமாக நடக்க வேண்டும் என்று இருந்தவர்கள் தாசில்தாராக இருப்பவர்கள் அவர்களுக்கு வக்கீல் சட்ட புத்தகங்கள் சகிதம் வருவதைப் பார்த்தாலே ஒன்றும் புரியாமல், சட்ட நுணுக்கங்களை ஒன்றும் புரியாமல் வக்கீலை விட்டே தீர்ப்பு எழுதிக்கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளக்கூடிய அளவுக்கு நிலைமை வந்து விடுகிறது. விவசாயிகளுடைய பிரதிநிதிகள், மிராசுதார்களுடைய பிரதிநிதிகள் வந்தால் போதுமானது என்று இருந்தபோது ஓரளவுக்கு நியாயம் கிடைத்தது. சட்ட நுணுக்கங்கள் வரும்போது தாசில்தார் புத்தகங்களைப் பார்த்து பீதி அடைகிறார். அதிகாரிகளும் பல வழக்குகளில் நியாயமாக நடந்துகொள்ள முடியாமல் சட்ட புத்தகத்தை திருப்தி செய்யவேண்டி ஏற்படுகிறது. உரிமை இருந்தும், நியாயம் இருந்தும், சட்டப் பாதுகாப்பு இருந்துங்கூட மக்கள் நியாயத்தைப் பெறும்படியான வழியில் இல்லை.

"புஞ்சை வாரம். அதைவிட அபத்தம் வேறு ஒன்றும் கிடையாது. ரிஜிஸ்ட்ரார் ஆபீசில் பத்திரம் இருக்கிறது. அந்த பகுதியின் நகலை எப்பொழுதும் வாங்குவதில் யாருக்கும் ஆட்சேபம் கிடையாது. வாரம் போட்டுக் கொடுக்கச்சொல்வதன் காரணமாக, ஜனங்களே தங்களுக்கு நிலம் வேண்டாமென்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. என்டௌமென்ட் மந்திரி எங்கள் ஜில்லாவிற்கு வந்திருந்தபோது அவரை குடிகள் கேட்டார்கள். குத்தகைக்காரர்களைத் தேடிபிடிக்கிறார்கள். இந்தக் கஷ்டங்களெல்லாம் தஞ்சை ஜில்லாவில் இருக்கின்றனவேயொழிய, பாக்கி ஜில்லாவில் இருப்பதாகத் தெரியவில்லை. தாம்பிரபரணி தீரத்திலும், தஞ்சை ஜில்லாவிலும், பெரியாறு பாசனப் பிரதேசத்திலும், திருச்சி ஜில்லாவில் சில பகுதிகளிலும் தான் நிலத்திற்கு தாகம் இருக்கிறதேயொழிய, மற்ற இடங்களில் சண்டை சச்சரவு கிடையாது. நிலத்தின் பேரிலே பற்றுதல் காரணமாக, அரசாங்கத்தாரின் பலத்தின் காரணமாக, அவர்கள் கையில் பத்திரிகைகள் சிக்கிக்கொண்டிருப்பதன் காரணமாக தடபுடல்கள் தஞ்சை ஜில்லாவில் இருக்கிறது. அதிகாரிகளைச் சரிக்கட்டி, பத்திரிகையாளர்களைச் சரிகட்டிக் கொள்ளவேண்டியிருக்கிறது.

"சமீபத்தில் ஒரு வழக்கு நடந்தது. அதைப்பற்றிய செய்தி பத்திரிகையில் வந்தது. "கிசான் தகராறு" என்று பத்திரிகையில் செய்தி வந்தது. ஆனால், அங்கு நடந்தது கிசான் தகராறே கிடையாது. மிராசுதாருக்கு மிராசுதார் ஒருவருக்கொருவர் தகராறு ஏற்பட்டு அவர்களுக்குள் வழக்கு நடந்தது. பத்திரிகையில் வருவது எப்படி என்றால் 'கிசான் தகராறு' என்று. இம்மாதிரி பத்திரிகைகளில் தவறான முறையில் செய்திகள் வருவதால் தஞ்சை ஜில்லா விவசாயிகளைப்பற்றி நல்ல எண்ணம் உடையவர்களும், சட்டசபை அங்கத்தினர்களும் அவர்களைப்பற்றி தப்பான நோக்கம் கொள்ளும்படி செய்கிறது. 'கிசான் தகராறு' என்றும், 'கிசான்கள் அத்துமீறி மிராசுதார்களைத் தாக்கிவிட்டார்கள்' என்றும் தப்பு அபிப்பிராயம் ஏற்படும்படி மிராசுதார்களுக்குச் சாதகமாக பத்திரிகைச் செய்திகள் வந்து விடுகின்றன. கிசான்கள் என்றால் கம்பளிப் பூச்சிகளைப்போல் அருவருக்கத் தக்கவர்கள் என்ற தப்பான எண்ணம் முன்பெல்லாம் இருந்துவந்தது. கிசான்கள் என்றால் அவர்கள் சரியான வழியில் போகமாட்டார்கள், தப்புத் தண்டா வழியில்தான் போவார்கள் என்றிருந்த அபிப்பிராயம் இப்பொழுது மாறிவருகிறது. கிசான்களைப்பற்றி தப்பான அபிப்பிராயம் கொள்ள மிராசுதார்கள் நம்முடைய தலைவர்களைச் செய்ததன் காரணமாகத்தான் அந்த நிலைமை இருந்துவந்தது. ஆனால், இப்பொழுது அந்த நிலைமை மாறி மிராசுதார்கள் தான் தப்பாக நடந்துவருகிறார்கள் என்ற எண்ணம் ஏற்பட்டு வரத்தொடங்கியிருக்கிறது. அதன் காரணமாகத்தான் மிராசுதார்கள் சங்கம் என்ற பெயர் போய்விட்டது. எல்லோரும் விவசாயிகள் என்று சொல்லிக்கொண்டு 'விவசாயிகள் சங்கம்' **(Agriculturists' Association)** என்ற பெயரை எங்கள் ஜில்லாவிலே மிராசுதார்கள் பெயர் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ராஜா, சர் முத்தையா செட்டியார் அவர்கள்கூட **(Landlord)** என்ற பதம் வேண்டாம் என்று சொல்லக்கூடிய அள

வுக்கு எண்ணம் ஏற்பட்டு வருகிறது. விவசாயி என்ற பதத்திற்கு மதிப்பு உயரவும் 'லாண்டு லார்டு' என்ற பதத்திற்கு கொஞ்சங்கொஞ்சமாக மதிப்பு தாழவும் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதற்கு அறிகுறி. இதை சரியான முறையில் செய்துவிட்டால் பல வருஷங்களுக்கு நிச்சயமாக தொந்தரவு இருக்காது. அவர்கள் சன்யாசம் வாங்கிக்கொண்டிருக்கக்கூடிய நிலைமைக்கு வந்திருக்கிறார்கள். தப்பான முறையில் விவசாயிகளை எண்ணாமல், நன்கு ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் விவசாயிகள் இந்த நாட்டில் அக்கறை யுள்ளவர்கள், நன்றாக உழைக்கக்கூடியவர்கள், அவர்கள் உழைத்துத்தான் சாப்பிடவேண்டும் என்ற நியதி இருக்கக்கூடியவர்கள், அதை அவர்கள் நன்கு உணர்ந்தவர்கள். அப்படிப்பட்டவர்களிடம் நிலத்தைச் சாகுபடி செய்வதற்கு சௌகரியமான முறையில் விட்டால் எந்தவிதமான கெடுதலும் யாருக்கும் ஏற்பட்டுவிடாது. நாட்டு மக்களுக்கு வேண்டிய உணவு உற்பத்தியை அவர்களால் பெருக்கமுடியும். ஏராளமான நிலங்களை மிராசுதார்கள் வைத்துக்கொண்டிருப்பவர்களுக்குத்தான் நிலத்தின் மீது அக்கறை உண்டு என்று நினைப்பதைவிட விவசாயிகளுக்கும் நிலத்தில் பொறுப்பு அளித்தால் உழுது பயிரிட்டு நல்ல மகசூலைக் காட்டமுடியும். உற்பத்தி செய்தால்தான் சாப்பிடலாம் என்ற எண்ணம் அவர்களுக்கு இருப்பதால் அவர்கள் கையில் நிலம் இருந்தால் நிச்சயமாக அதிக உற்பத்தி ஏற்படும். அதைப்பற்றி யாருக்கும் கவலை வேண்டாம்.

12-06 p.m. "ஆகையால் இப்படியே யிருப்பதைவிட, விவசாயிகள் கையில் நிலம் வந்தால்தான் நிச்சயமாக உற்பத்தி பெருகும். நிலம் அவர்கள் கையிலிருந்து அவர்களுக்குள்ளேயே அதிக உற்பத்தியின் பலன் செல்லும், என்ற உணர்ச்சி ஏற்படுத்தப்படுமேயானால், அவர்களே ஜாஸ்தி உற்பத்தி செய்யவேண்டும், என்ற உற்சாகம் கொண்டு உற்பத்தியை பெருக்குவார்கள். நிலத்திலிருந்து வரும் அதிகப்படியான வரும்படி என்னைச்சேரும் என்ற உணர்ச்சி விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்டால் ஒழிய உணவு உற்பத்தியை பெருக்கவேண்டும் என்று சொல்வதெல்லாம் வெறும் பேச்சளவில்தான் நிற்கும். எவ்வளவு விளைந்தாலும், யாரோ எடுத்துக்கொண்டு போகிறான், எனக்கு ஒரு மரக்கால் கூலிதானே என்று அவன் எண்ணும்படி செய்தால், அவன் விளைவைபற்றி சிறிதும் கவலைப்படுவதில்லை. உழைக்கின்ற உழைப்பினால் ஏற்படும் பலன் எனக்கு கிடைக்கும் என்ற உணர்ச்சி அவனுக்கு ஏற்கப்பட்டால் நிச்சயமாக உற்பத்தி இருமடங்காகும். உழவர்கள் பக்கத்தில் இருப்பவர்களும் அதற்கு வேண்டிய பொருப்பை எடுத்துக்கொண்டு, நல்ல நிலைமையை ஏற்படுத்துவதற்கு தயாராக இருக்கிறார்கள் என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

"அடுத்தபடியாக எங்கள் ஊர் போலீஸ் சர்க்காருக்கு கரும்புள்ளி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையை மாற்றியாக வேண்டும். எங்கள் ஊரில், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் போட்ட மாலை என்று சொல்லி, எருக்க மாலையை போட்டு, இரண்டு ஆட்களை நிர்வாணமாக ஊர்வலம் விட்டிருக்கிறார்கள் மிராசுதார்கள். இதைப்பற்றி போலீஸ் ஒன்றும் நடவடிக்கை எடுக்கவில்லை. நடவடிக்கை எடுக்காவிட்டாலும் பரவாயில்லை, இந்த மாதிரி நடந்தது என்று அங்கத்தினர் சொன்னாரே, அவர் சொன்னது உண்மையா இல்லையா என்பதையாவது பரிசீலனை செய்து பார்ப்பது அவசியம். இந்த மாதிரி தப்பு தண்டா செய்துகொண்டு, பல தீர்ப்புகளை அமுல் நடத்தாமல் இருக்கிறார்கள் மிராசுதார்கள். சட்டங்களை சர்க்கார் கொண்டுவரலாம், ஆனால் அதை அமுல் நடத்துவதற்கு என்ன வழி செய்யவேண்டுமோ அதையும் தீவிரமாகச் செய்யவேண்டும், எதிர் தரப்பில் சொன்னதுபோல், இந்த குத்தகைதார்கள் வெளியேற்ற தடை சட்டத்தை கொஞ்ச காலத்திற்குமுன் கொண்டுவந்திருந்தால், அப்பொழுது அது நிறைவேற போதிய சூழ்நிலை இருந்த இருக்காது. இப்போது சூழ்நிலை சௌகரியமாக இருப்பதால் சர்க்கார் உடனடியாக சட்டங்களை செய்வதோடு, விவசாயிகளுக்கு சட்டத்தின் பலன் போய் சேரும் வகையில் நடவடிக்கை எடுக்கவேண்டும். கையில் பொருள் இல்லாத விவசாயிகள், சட்டத்தை விலை கொடுத்து வாங்க முடியாது. நல்ல வக்கீல் அவர்களால் வைக்க

6th August 1955] [Sri G. Narayanaswami Naidu]

முடியாது, நல்ல வக்கீலாக வைக்கவேண்டுமென்றால் குறைந்தது 25 ரூபாய் ஆவது செலவாகும். தவிரவும், பெரிய வக்கீல்களாக இருந்தால் பீசையும் வாங்கிக்கொண்டு, கச்சேரியிலும் ஆஜராவதில்லை. எதிர் கட்சிகாரர்களிட மிருந்தும் பணத்தை வாங்கிக்கொண்டு பேசும் பல வக்கீல்களை எனக்கு தெரியும். இந்த மாதிரி வக்கீல்கள் வராமல் விவசாயிகளிடையே வேலை செய்து அவர்கள் முன்னேற்றத்திற்காக நல்ல எண்ணத்தோடு வேலை செய்கிற நபர்களை ஆஜர் செய்ய வசதி செய்தால், விவசாயிகளை நல்ல கட்டு திட்டத்திற்கு கொண்டுவரமுடியும். வக்கீல்கள் ஆஜராக ஆரம்பித்ததிலிருந்து ஒரு வழக்குக்கூட ஜெயிப்பதில்லை. மேலும், முதலில் நான் சொன்னபடி விவசாயிகளுக்கு வக்கீல் வைக்க சக்தி கிடையாது. மிராசுதார்கள் தரப்பில் அவர்கள் வக்கீல் வைக்க சக்தியிருக்கிறது. ஆகவே, செலக்ட் கமிட்டியில் இந்த விஷயங்களையெல்லாம் சீர்தூக்கி சிந்தித்து நல்ல முடிவுக்கு வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்."

Sri P. G. KARUTHIRUMAN :—" கனம் உதவி சபாநாயகர் அவர் களே, இப்போது கொண்டு வந்திருக்கும் குத்தகைதாரர்கள் பாதுகாப்பு சட்டத்தை நான் வரவேற்கிறேன். ஆனால் இது. " 12-10 p.m.

Sri P. RAMAMURTHI:—"ஆனால் போடாமல் பேசுங்கள் பார்க்கலாம்."

Sri P. G. KARUTHIRUMAN :—" நீங்கள் எதிர்க்காமல் ஆதரித்து பேசுங்கள் பார்க்கலாம். இந்த சட்டத்தைக்கொண்டு வருவதற்கு முன்னால் சில சந்தர்ப்பங்களையும், சூழ் நிலைகளையும் நான் சர்க்காரின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். பல இடங்களில் அதாவது ஜில்லாவுக்கு ஜில்லா, குடிகிராக்கி இருக்கிறது. இதையும், அந்த இடங்களில் இருக்கும் படியான மிராசுதார்கள், பூமி சொந்தக்காரர்கள், மனப்பான்மையையும் பொருத்துத்தான், குத்தகைதாரர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்படவேண்டி யது அவசியமேதவிர, எல்லா இடங்களுக்கும் இந்த மசோதா கொண்டுவரப் பட்டால், பல இடங்களில் சௌகரியமாக இருப்பவர்கள்கூட பாதிக்கப்படு வார்களோ என்று ஒரு முறையில் சந்தேகப்படவேண்டியிருக்கிறது. உதா ரணமாக நான் கோவை ஜில்லாவிலிருந்து வருகிறேன். கோவை அல்லது சேலம் ஜில்லாக்களில் இருக்கும்படியான நிலைமையை பார்ப்போ மேயானால் மசோதாவில் குறிப்பிடப்பட்டிருப்பது மாதிரி குத்தகை தாரர்கள் நிலத்திலிருந்து வெளியேற்றப்படவில்லை என்பதை ஆதாரத்துடன் எடுத்துச் சொல்லமுடியும். ஏனென்றால், அங்கிருக்கும் படியான பூமிச் சொந்தக்காரர்கள், பூமியில் மிகவும் பாடுபட்டு, அதனுடைய தொழிலை நன்றாக தெரிந்து, நேரிடையாக அனுபவத்தில் பலகஷ்டங்களை காணும் தன்மையில் குடியானவர்கள் பூமியை குத்தகைக்கு எடுத்து சாகுபடி செய்யும் கஷ்டத்தை நன்கு உணர முடிகிறது. அதன் காரணமாக குடியானவர்கள் பூமிச் சொந்தக்காரர் களால் நல்ல முறையில் நடத்தப்படுகிறார்கள். ஆகவே அந்த இடங்களில் பாதுகாப்பு என்பது ஏதோ சட்ட அளவுக்கு சொல்லப்படுமே தவிர, உண்மையில் நடைமுறையில் தேவைப்படாது. மேலும் அந்த இடங்களில் வசிக்கும்படியான பூமிச் சொந்தக்காரர்கள் நல்ல விதமாக தாங்கள் வாழ வேண்டுமென்றால் பூமியில் விவசாயம் செய்யும்படியான குத்தகைதாரர் களை நல்ல நிலையில் வைத்திருக்கவேண்டும் என்பதை உணர்ந்திருக்கிறார் கள். உதாரணமாக பல பெரிய குடும்பங்களை எடுத்துப் பார்த்தோமே யானால், 50,60 வருஷ காலமாக அதே குடும்பத்தில் பரம்பரையாக குத்தகை தாரர்கள் சாகுபடி செய்து, பூமி சொந்தக்காரர்களைவிட நல்ல நிலைமையில் வாழ்கிறார்கள். இந்த மாதிரி நிலையில் குத்தகைதாரர்கள் பல இடங்களில் இருக்கும்போது, இந்த பாதுகாப்பு சட்டம் என் வருகிற தென்றால், ஏதோ சில இடங்களில் சந்தர்ப்ப கோளாறினால், விவசாயம் செய்ய தெரியாதவர் களிடத்தில் நிலம் போய் சிக்குண்டு, சரியான முறையில் குத்தகைதாரர் கள் கவனிக்காத நிலையில், பூமி சொந்தக்காரர்கள் பயந்து நிலத்தை எடுத்துக்கொள்வதால்தானே தவிர வேறு யாதொரு காரணத்தினாலும் அல்ல, மேலும் சில இடங்களில் குடி கிராக்கியிருக்கிறது. பூமி சொந்தக் காரர்கள், உண்மையாகவே தங்கள் பூமியை குத்தகைக்கு கொடுக்கவேண்டும்

என்று சொன்னால்கூட, குத்தகைதாரர்கள் கிடைப்பது கிடையாது. எதிர் கட்சிகாரர்கள் சொல்லலாம், எங்கள் ஊரில் இருக்கிறார்கள் நிறைய அனுப்புகிறோம் என்று. அவர்கள் அனுப்பினால் தகராறு உண்டுபண்ண அனுப்புவார்களே தவிர, உண்மையான காரணத்திற்காக, இருக்காது. சமீப காலத்தில் குடிகள் மனப்பான்மை என்னவென்பதை நாம் கவனிக்க வேண்டும். தேசத்தில் பொதுவாக இப்போது **national character** தேசீய ஒழுக்கம், சாதாரண மக்களிடத்தில் இருக்கிறதா என்றால் இல்லை என்றுதான் சொல்லவேண்டிய நிலையில் இருக்கிறது. குத்தகைதாரர்கள் மனப்பான்மையோ இருக்கும்படியான சொத்தை கொள்ளையடிக்கும் முறையில் இருக்கிறது. இந்த நிலையில், பூமிக்கு எந்த விதமான இடையூறு விளைவித்தாலோ, அல்லது எந்த விதமான காரணத்தைகொண்டும், என்ன பயிர் செய்யவேண்டுமோ அதைவிட்டு வேறு பயிர் செய்தாலோ நிலத்தைவிட்டு குத்தகைதார்கள் வெளியேற்றப்படலாம் என்றிருப்பதை மிகவும் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். இந்த சந்தர்ப்பத்தில் நான் குத்தகைதார்கள் மனப்பான்மை குறித்து சில புள்ளிவிவரங்களை என்னுடைய சொந்த அனுபவத்திலிருந்து கொடுக்கமுடியும். என்குடும்பத்திற்கு சுமார் 80 ஏகரா நஞ்செய் இருக்கிறது. அதில் 40 ஏகராவை சொந்த பண்ணை விவசாயம் செய்கிறேன். பாக்கி 40 ஏக்கரா நிலத்தை குடியானவர்களிடம் விட்டிருக்கிறேன். 80 ஏக்கராவிற்கும் பூரண உர வசதி நானே வாங்கி கொடுக்கிறேன். 80 ஏக்கராவையும் நேரிடையாக நானே மேற்பார்வை செய்கிறேன். சொந்த பண்ணை விவசாயத்திலிருக்கும் 40 ஏக்கராவிற்கு எவ்வளவு உரம் போடுகிறேனோ, அதேயளவு உரம் பாக்கி 40 ஏக்கராவிற்கும் கொடுக்கிறேன். இந்த பூமிக்கு குத்தகை அளக்கும் முறை யென்னவென்றால், ஏக்கருக்கு இவ்வளவு மூட்டை என்றல்ல, விளைந்த பிறகு வாரம் போட்டு கொடுக்கப்படுகிறது. சொந்த விவசாயத்தில் 40 ஏக்கருக்கு 1,500 மூட்டைகள் கிடைக்கும். அதே சமயத்தில், உழும்படியான குடியானவர்கள் அவர்களிடம் இருக்கும் 40 ஏக்கருக்கு 800 மூட்டைகள்தான் கொடுக்கிறார்கள். ஒரே தரமான பூமி, ஒரே உரம், ஒரே சூழ்நிலை, ஒரேவிதமான விதை நெல்—விதை நெல்லும் நானே கொடுக்கிறேன்—அப்படியிருக்கும்போது விளைச்சலில் குறைவு ஏற்படுகிறது என்றால் அதற்கு அடிப்படியான காரணம் ஒன்றே ஒன்றுதான். குடியானவர் களை எடுப்பது கிடையாது. எப்படி யிருந்தாலும் விளைச்சலில் பங்கு கொடுத்துவிடுகிறார்கள் என்பதினால், களை யெடுப்பது கிடையாது. 30 ரூபாய் செலவாகும் என்றால், 10 ரூபாய் செலவு செய்தால் போதும் என்று களை யெடுக்காமல் விட்டு விடுகிறார்கள். அடுத்தபடியாக உரம். உப்பு உரம் வாங்கி கொடுத்தால் கூட, பூமியில் சரியானபடி சேர்க்காமல், விற்று விடுகிறார்கள். பிண்ணாக்கு வாங்கி கொடுத்தால், மாட்டுக்கு வைத்து விடுகிறார்கள். இதை நேரிடையாக நிரூபிக்க முடியும். இதற்காக பூமிக்கு கொடுக்கும் உரத்தோடு மண்ணை கலந்து மாடு சாப்பிடாத நிலையில் கொடுக்க வேண்டியிருக்கிறது.”

Sri P. RAMAMURTHI :—“ இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம் ஏழை விவசாயிகளின் கஷ்ட நிலைமையை.”

Sri P. G. KARUTHIRUMAN :—“ அவர்கள் ஒன்றும் கஷ்டப்படவில்லை. நன்றாகத்தான் இருக்கிறார்கள். எங்கள் ஜில்லாவில் ஒரு குடம் பாலில் ஒரு துளி விஷம் இருந்தால் எப்படி பால் பூராவும் கெட்டு விடுகிறதோ அதே போல அங்கு இருக்கும்படியான குடியானவர்களை கெடுப்பதற்கு தோழர்கள் முயற்சி செய்வார்கள் என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அவ்வளவு ஏன், எங்கள் ஊரிலேயே பிரசாரம் செய்தார்கள் தோழர்கள், குத்தகையை கொடுக்கவேண்டாமென்று. ஆனால் அவர்கள் பாச்சா பலிக்கவில்லை என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

12-16 p.m. “ குடியானவர்கள் முன்பு போல் உருமையுடன் வேலை செய்வது இல்லை. உற்பத்தி செய்யவேண்டும் என்ற எண்ணம் இல்லை. கீழ் பவானி அணைக்கட்டு திட்டம் வந்த பிறகு இரண்டு லட்சம் ஏக்கர் நிலங்களுக்கு தண்ணீர் பாய்கிறது. வரண்ட பிரதேசங்களை எடுத்துக்கொண்டு சாகுபடி செய்கிறார்கள். அங்கு தண்ணீர் பாய்கிறது என்ற காரணத்தால் அந்த

6th August 1955] [Sri G. Karuthiruman]

இடங்களில் விவசாயக் கூலிகள் கிடைக்கவில்லை. அதற்கு கிராக்கி இருக்கிறது. ஒரு பெண் எட்டணு கூலி வாங்கி வந்திருந்தால் இப்பொழுது பனிரெண்டணு கூலி வேண்டும் என்று கேட்கிருள். அந்தக் கூலிக்கும் கூட ஆட்கள் கிடைக்கவில்லை. அதனுல் நாற்று நடவு நடக்க கால தாமதம் ஆகிறது என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

" குடியானவர்களாக இருந்தாலும் குத்தகைகாரர்களாக இருந்தாலும் நல்ல உறவுடனும் நல்ல எண்ணத்துடனும் பாடுபட வேண்டும். அந்த அடிப்படையில்தான் சட்டத்தை திருத்தியமைக்க வேண்டும். அப்படி இல்லாமல் மசோதா வருவதில் பிரயோசனம் இல்லை. இது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். சதாரண மனப்பான்மையில் நடந்து கொண்டு வந்தால் பாதுகாப்பு சட்டம் போட வேண்டிய அவசியம் இல்லை. சரியான முறையில் வராததால்தான் இந்த மாதிரியான சட்டம் வரவேண்டியதாக இருக்கிறது. வெளியேற்றத்தை எடுத்துக்கொண்டால் எல்லா இடங்களிலும் அப்படி நடக்கிறது என்று சொல்ல முடியாது. மாகாணம் பூராவும் புள்ளி விவரத்தை எடுத்தால் அதன் உண்மை தெரியவரும். மாகாணம் பூராவும் புள்ளிவிபரம் எடுத்தால் குத்தகைக்காரர்களில் நூறுக்கு பத்துப் பேர்களைத்தான் வெளியேற்றியிருப்பார்கள். இதைப்பார்த்தால், தெரியும், குடியானவர்கள் வேறு வழியில் திரும்பியிருக்கிருர்கள் என்பது. அவர்கள் உணவு உற்பத்தியில் கவலேப்படுவது இல்லை என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன். இப்பொழுது சட்டம் செய்திருப்பதால் பலவித பாதகங்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதனுல் எந்த விதமான இடையூறுகளும் இல்லாமல் சட்டத்தை திருத்தி அமைக்கவேண்டும். இப்பொழுது சட்டத்தில் 1954-ம் வருஷம் டிசம்பர் மாதம் 1-ம் தேதிக்கு பின் வெளியேற்றிருந்தால் அவர்களை திரும்பவும் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று சொல்லப்படுகிறது. நியாயமான முறையில் வெளியேற்றப்பட்டிருந்தாலும் அவர்களை எடுத்துக்கொள்ளவேண்டும் என்றிருக்கிறது. இது ரொம்பவும் கவனிக்கப்படவேண்டிய விஷயம். 1954-ம் வருஷம் டிசம்பர் மாதம் 1-ம் தேதி என்று இல்லாமல் 1955-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 1-ம் தேதி இந்தச் சட்டம் அமுலுக்கு வரும் என்று இருந்தால் நலமாக இருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம். அப்பொழுதுதான் நமக்கு வருஷம் ஆரம்பமாகிறது என்பதை தெரிவித்துக்கொண்டு எனக்குப் பேசுவதற்கு சந்தர்ப்பம் கொடுத்ததற்காக என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்."

*Sri P. VENKATESHA SHOLAGAR :—" கனம் உதவி சபா நாயகர் அவர்களே, இப்பொழுது சபை முன் விவாதத்தில் இருக்கும் சட்டத்தைப்பற்றி பேசும் போது சில விஷயங்களை இங்கு கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சென்ற காலத்தில் விவாசாயிகளை நிலத்திலிருந்து வெளியேற்றக்கூடாது என்ற கிளர்ச்சி ஆரம்பித்தது. பலர் பலவித தியாகம் செய்த பிறகு தஞ்சை பண்ணையாள் பாதுகாப்பு சட்டம் வந்தது. இப்பொழுது மாகாணம் பூராவும் நிலவெளி யேற்றத்தைத் தடை செய்ய வேண்டும் என்கிற சட்டம் வருகிறது. மிராசுதார்கள் நிலத்தைக் குத்தகைக்கு விடும்போது குத்தகை ஐந்து கலம் என்று எழுதி வாங்கிக்கொண்டு வருஷத்திற்கு கொஞ்சங் கொஞ்சமாக உயர்த்தி 6 கலம் அல்லது 7 கலம் கொடுக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்துகிருர்கள். அப்படிக் கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டால் அடுத்த வருஷம் அவனுக்கு நிலம் கிடைக்காது. எனக்குத் தெரிந்து மா ஒன்றுக்கு 4 கலம் குத்தகையாக இருந்தது. இன்றைக்குப் பார்த்தால் எட்டு கலம் வரையில் இருக்கிறது. எட்டுக் கலம் கொடுக்க முடியுமா முடியாதா என்பது இல்லை. அவன் கடன்காரனுகத் தன்னிடம் இருக்கவேண்டுமென்பதே. கொடுக்காவிட்டால் நிர்ப்பந்தம் அதிகமாகிறது. அதற்கு பயந்து வருஷா வருஷம் பாக்கி பாக்கி என்று எழுதிக் கொடுத்துக்கொண்டே போகிருர்கள். அப்படி எழுதி வாங்கிக் கொண்டால்தான் நினைத்த சமயத்தில் அவனை நிலத்தை விட்டு வெளியேற்றலாம் என்று எழுதி வாங்கிக்கொள்ளுவது. அப்படி எழுதி வாங்கிக் கொண்டு பிறகு அவனுடைய ஆடு, மாடு, வீடு முதலியவைகளை ஜப்தி செய்கிருர்கள் என்று தெரிந்து பயத்தின் காரணமாக குத்தகை பாக்கி 12-19 p.m.

இருக்கிறது என்று எழுதிக்கொடுக்கவேண்டியதாக இருக்கிறது. அப்பொழுதுதான் நிலத்தை எடுத்துக்கொண்டு அவர்கள் விவசாயம் செய்யலாம்.

"அஞ்ஞானிகள் கூறுகிறார்கள் உலகம் மாயை என்று. நாம் இங்கு நேரில் பார்க்கிறோம் மந்திரிகள் இருக்கிறார்கள், ஸ்பீகர் உட்கார்ந்திருக்கிறார், லைட் எரிகிறது. மைக் இருக்கிறது பேசுகிறோம். இதெல்லாம் பொய் என ஆஸ்திகர் கூறுவது போன்று சட்டமே வேண்டியது இல்லை என்று ஒரு சிலர் கூறுவது வியப்பாய் உள்ளது. யதார்த்தத்துக்கு புறம்பாய் உள்ளது அவர்கள் சொல்லுவது எனக்கு ஒன்றுமே புரியவில்லை. விவசாயிகளுக்கு இப்பொழுது என்ன உரிமை இருக்கிறது. மிராசுதார்கள் என்ன செய்தாலும் அதற்கு அவர்கள் 'ஆமா' போட வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். ஒரு வருஷம் பஞ்சாயத்து போர்ட் தேர்தலுக்கு மிராசுதார் தான் நினைத்தபடி விவசாயி வோட்டுப் போடவில்லை என்றால் அவனுக்கு அடுத்த வருஷம் நிலம் கிடைக்காது. நண்பர்கள் பஞ்சாயத்து போர்டு மூலம் சமரசம் செய்துவிடலாம் என்று கூறுகிறார்கள். அது தவறு. பல இடங்களில் பஞ்சாயத்து போர்டுகளில் மிராசுதார்களே பிரசிடெண்டாக உள்ளனர். சமரச அதிகாரிக்கு யோசனை சொல்வதற்கும், கவனிப்பதற்கும் வேண்டுமானால், சமரச அதிகாரிகளுடன் இவர்கள் உட்காரலாம். பஞ்சாயத்து போர்டாரை வைத்துக்கொள்ளலாம்.

"சென்ற வருஷ பாக்கியை ஒரு மாதத்திற்குள் கொடுத்துவிட வேண்டும் என்றிருக்கிறது. அப்படி இருப்பதால் விவசாயிகளுக்கு ஒரு நிபந்தனை போடுவதாக இருக்கிறது. 1952-ம் வருஷம் தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்பு சட்டம் வந்தவுடன் விவசாயிகள் எவ்வளவோ கஷ்டப்பட்டிருக்கிறார்கள். குத்தகை பாக்கி கொடுக்கவேண்டும் என்று பலரை வெளியேற்றியிருக்கிறார்கள். அதை எதிர்த்து கோர்ட்டுக்குப் போகவேண்டுமானால் பணம் செலவாகும். அப்படி செலவழிப்பதற்கு அவர்களிடம் வழி இல்லை. வேண்டுமானால் இன்று கணக்கை எடுத்துப் பார்த்தால் நன்றாகத் தெரியும், எவ்வளவோ பேர் சட்டத்தின் நன்மையை பெற முடியவில்லை என்பது உண்மையாக விவசாயிகளுக்கு நன்மை ஏற்பட்டிருக்கிறதா என்பதும். விவசாயிகளுக்கு நன்மையைச் செய்யவேண்டும் என்பதற்காக சட்டத்தைக்கொண்டு வந்ததாகச் சொன்னார்கள். உண்மையில் பார்க்கப் போனால் அவர்களுக்கு அவர்கள் எதிர்பார்த்த நன்மை ஏற்படவில்லை. இப்பொழுது வரும் நிலவெளியேற்ற தடுப்பு சட்டத்திலும் ஒரு மாதத்தில் பாக்கியைக் கொடுக்கவேண்டும் என்று சொல்லுவது அவர்களுக்கு ஒரு நிபந்தனையை ஏற்படுத்துவதாக இருக்கிறது. நிபந்தனை போட்டு சட்டம் கொண்டுவந்தால் அதனுடைய உள்நோக்கம் நல்லவிதமாக இருக்கிறது என்று சொல்ல முடியாது. உண்மையிலேயே பாக்கி இருக்கிறதா என்பதை விசாரிக்கவேண்டும். அப்பொழுதுதான் அதன் உண்மை தெரியும்.

"அங்குள்ள நிலைமையைப்பற்றி கனம் நாராயணசாமி அவர்கள் நன்றாக எடுத்துச் சொன்னார். சட்டம் எப்படி அமுல் நடத்தப்படுகிறது என்பதை எடுத்துச் சொன்னார். அதிகாரிகளால் எப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுகிறது என்பதையும் எடுத்துச் சொன்னார். மிராசுதார்கள் பக்கம்தான் போலீஸ் இருக்கிறார்கள். சட்டப்படி உரிமையைக் கேட்டால் எருக்க மாலையைப் கழுத்தில் போட்டு ஊர்வலமாக அழைத்துச் செல்வதாக இருக்கிறது. இதைப்பற்றி எதிர்கட்சிகாரர்கள் மாத்திரமல்ல சர்க்கார் அங்கத்தினரே எடுத்துக் கூறியிருக்கிறார். அத்துடன் இன்னும் சில விஷயங்களை சர்க்காருடைய கவனத்திற்குக்கொண்டு வர விரும்புகிறேன். தஞ்சை ஜில்லா பண்ணையாள் பாதுகாப்புப் சட்டப்படி குத்தகையை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று சமரச அதிகாரிக்கு மனுப் போட்டு தீர்ப்பும் கிடைத்தது. தேவங் குடியில் மிராசுதார் அந்தத் தீர்ப்பை ஏற்றுக் கொள்ளாமல் 300 கல நெல்லை அடியோடு களத்திலிருந்து எடுத்துக் கொண்டு போய்விட்டார். அதைப் பற்றி போலீசுக்கு தகவல் கொடுக்கப் பட்டது. அந்தக் கேசை போலீஸ் தள்ளுபடி செய்து விட்டார்கள். வைக்கல் போரை அடித்துக்கொண்டிருந்த சமயம் மிராசுதாரின் அடியாட்கள் போரடிக்கக்கூடாது என்று விவசாயிகளுடைய மண்டையை உடைத்து 18

6th August 1955] [Sri P. Venkatesha Sholagar]

நாட்கள் விவசாயிகள் ஆஸ்பத்திரியில் இருந்தார்கள். அப்படி அவர்கள் ஆஸ்பத்திரியில் இருந்தும் அந்தக் கேஸையும் போலீஸார் தள்ளுபடி செய்து விட்டார்கள். நெல்லை எடுத்துக்கொண்டு போன கேசும் தள்ளுபடி, வைக்கோல் போரை எடுத்துக்கொண்டு போன சமயம் அடித்த கேசும் தள்ளுபடியாயிற்று. போலீசார் செய்துள்ள அக்கிரமம் கண்டு ஆத்திரம் அடைந்து 2,000 ஜனங்கள் ஊர்வலமாக வந்து தாசில்தாரிடமும் கலெக்டரிடமும் தெரிவிக்கவேண்டும் என்று மன்னார்குடி வந்தார்கள். மகஜர் கொடுக்கப்பட்டது, ஆனால் மிராசுதார்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளவில்லை. தவறு செய்த போலீசார் மீதும் நடவடிக்கை எடுக்கவில்லை மகஜர் கொடுத்தார்கள். மே மாதம் 20 தேதி என்பதற்காக மறுநாளே திட்டமிட்டு ஊர்வலம் வந்த அந்த சுற்றுப்புர விவசாயிகள் மீது எஸ்.எ.பி. போலீஸை கொண்டுபோய் விவசாயிகளை தாக்க ஆரம்பித்தார்கள். 21-ம் தேதி ராத்திரி 7 மணியிலிருந்து மறுநாள் காலை 7 மணி வரைக்கும் என்ன நடந்தது ? அந்த ஜனங்களின் மண்டையை உடைத்து, கழுத்தை நெறித்து கால்களை முறித்து கடைசியில் 40, 50 பேர்கள் போலீஸ் ஸ்டேஷனுக்கு அனுப்பப்பட்டனர். அதன் மீது ஜில்லாக் கலெக்டரிடம் சொன்னதின் பேரில் ஜில்லா ஹரிஜன வெல்பேர் ஆபீசர் வந்து விசாரித்தார். அதன் பிறகு கலெக்டரிடமிருந்து பதில் வந்திருக்கிறது. அதில் போலீஸார் மீது இதற்கு நீங்கள் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுங்கள் என்று தெரியப் படுத்தப்பட்டிருக்கிறது. விவசாயிகள் குற்றம் செய்தாலும் செய்யாதிருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றாலோ போலீஸார் லாரி லாரியாக வந்து இறங்குவார்கள். எத்தனை லாரிவேண்டுமானாலும் எடுத்துகொண்டுபோக அனுமதி உண்டு, ஆனால் போலீஸார் மிராசுதார்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொன்னால் யார் பணம் கொடுப்பது ? ஏழை ஹரிஜனங்கள் தங்கள் கையால் பணம் போட்டு நடவடிக்கைக் எடுக்கவேண்டுமென்றால், அது சாத்தியமா என்பதை கனம் அமைச்சரவர்கள் சற்று யோசித்துப் பார்க்கவேண்டும். 12-26 p.m.

"மேலும் அங்கு ரிஷியூரில் சிதம்பர முதலியார் என்று ஒரு ரிடயர்டு சர்க்கிள் இன்ஸ்பெக்டர் இருக்கிறார். அந்த ஊரில் எந்த விதமான பிரச்னையும் எழவில்லை. அந்தச் சிதம்பர முதலியாரின் தம்பி ரகசிய போலீஸ் தலைவராக இருக்கிறார் என்பதை பயன்படுத்திக்கொண்டு இவருடன் சப்-இன்ஸ்பெக்டர் இருவரும் சேர்ந்து டி ஊரில் தடியடிப் பிரயோகம் செய்யச் செய்தனர். இதை யெல்லாம் D.S.P. அனுமதித்துக் கொண்டிருக்கிறார். இதை மந்திரி அவர்கள் விசாரணை செய்து தகுதியான நடவடிக்கை எடுக்கவேண்டும். என்னதான் சட்டம் செய்தாலும், அதை அமுல் நடத்தும்போது உண்மையிலேயே ஜனங்களுக்கு ஏதாவது நன்மை செய்ய வேண்டுமென்ற எண்ணம் இருந்தாலொழிய எந்தச் சட்டத்தாலும் ஜனங்களுக்கு நன்மை செய்ய முடியாது. ஆகையால் கனம் அமைச்சரவர்கள் சரியாகக் கவனித்து இந்த மசோதாவை இந்த மாதிரி புகார்களுக்கு இடம் கொடுக்காமல் மாற்றி யமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்."

* **Sri T. V. SANNASI** :—"கனம் உதவி சபாநாயகர் அவர்களே இந்த மசோதாவானது ஒரு தாலூக்காவிற்கோ, ஒரு ஜில்லாவிற்கோ என்றில்லாமல், இத்தேசமே அழிவதா ? வாழ்வதா ? என்று முடிவு கட்டக்கூடிய பிரச்னை அடங்கியதாயிருக்கிறது. நாட்டின் நலத்திற்கு இன்றியமையாத இம்மசோதாவானது நீண்ட காலத்திற்கு முன்பே வந்திருந்தால் மிகவும் நலமாயிருந்திருக்கும். ஆனால், இப்பொழுதாவது வந்ததே என்பது பற்றி மிகவும் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்.

"நாட்டிலே செய்யப்படும் சட்டங்கள் யாவும் சட்ட நுணுக்கமறிந்த வழக்கறிஞர்கள் அபிப்பிராயங்களைக் கலந்துதான் செய்யப்படுகின்றன. அவ்வாறு செய்யப்படும் சட்டங்களானது, சாதாரண மக்களும் புரிந்துகொள்ளும் முறையில் வெட்டொன்று, துண்டு இரண்டு என்ற ரீதியில் வழவழப் பின்றிக் கச்சிதமாகச் செய்யப்படுமானால் கோர்ட்டுகளிலும் வழக்குகள் குவியாது. வக்கீல்களுக்கு வருவாய்ப் பெருகும் முறையில் இரு சார்பினருக்கும் தொந்திரவு வளராது. நாட்டில் குழப்பமற்ற வாழ்க்கைத் தேவையானால் இதனைக் குறிப்பாகக் கவனித்துச் செய்தல் வேண்டும்.

[Sri T. V. Sannasi] [6th August 1955

" மிகவும் நல்ல நோக்கத்தோடு இம்மசோதா கொண்டு வந்திருப்பினுங் கூட விவசாயிகட்கு அனுகூலமான வகையில் இது அமையவில்லை. ஆனால், மிராசுதார்களுக்கு விரோதமாக இதனைக் கூற வில்லை. பரந்த நிலப்பரப்பில் விவசாயிகளின் நிறைந்த உழைப்பினால் விளைந்த தானியங்கள் குவிந்து கிடக்கின்றன. அதில் உழைத்துக் குவித்த விவசாயிகள் வயிற்றுக்குப் போதவில்லை என்று, ஒரு மரக்கால், அரை மரக்கால் கொடுங்களென்று பிச்சையாகக் கேட்கின்றார்கள். அவ்வாறு கேட்பதும் ஈவு, இரக்கம் முதலிய உயர்ப் பண்பு இருக்கக்கூடிய பெரிய மனிதர்களையே கேட்கின்றாரென்று நம்புகிறார்கள். அவ்வாறு நம்புவது தவறு என்ற முறையில் சில மிராசுதார்கள் மாறான நடவடிக்கையிலிறங்குகிறார்கள். இது, அவர்களுக்கும் நாட்டிற்கும் நலமளிக்கக் கூடியதல்ல.

" நாடு முன்னேற வேண்டுமானால், உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்று நேருஜீ அவர்கள் கூறிவருகின்றார். இந்த உண்மையை இதர கட்சித்தலைவர்களும், எல்லா மக்களும் ஒப்புக்கொள்கிறார்கள். இவ்விதம், யாவரும் ஒருங்கே ஒப்புக்கொள்ளக்கூடிய அரசாங்கத்தின் ஜீவாதாரமான கொள்கையை நிறைவேற்றி வைக்கும் பொறுப்பு சம்பந்தப்பட்ட ஒவ்வொரு ஜில்லா அதிகாரியையும் சேர்ந்ததாகும். ஆனால், பொறுப்புணர்ந்துச் செயலாற்றும் இவ்வித அதிகாரிகளைச் சில பாகங்களில் சில மிராசுதார்கள் படுத்தும்பாடு சொல்லும் தரத்திலில்லை.

" உதாரணமாக, நான் வசிக்கும் திருச்சி ஜில்லாவில் கலெக்டராயிருக்கும் திரு. மலையப்பன் என்பவர் எந்த அரசியல் வாதியுமல்ல. உலகப் பற்று அற்ற மெய்ஞ்ஞானியுமல்ல. அரசாங்க நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்பட்ட ஒரு பொறுப்பு வாய்ந்த அரசாங்க ஊழியர். திருச்சி ஜில்லாவைச் சேர்ந்த குளித்தலைத் தாலூக்காவாகிய எனது தொகுதியில் மிராசுதார்களுக்கும் விவசாயிகளுக்கும் ஏற்பட்டிருந்த மிகவும் நெருக்கடியானத் தகராறைத் தீர்ப்பதற்காக இருசாராரும் ஒப்புக்கொண்டு சென்ற மாதம் 15-ந் தேதி குளித்தலைத் தாலூக்கா ஆபிஸில் கலெக்டர் தலைமையில் கூடிய கூட்டத்தில் பகல் $2\frac{3}{4}$ மணியிலிருந்து இரவு $9\frac{1}{2}$ மணி வரையில் ஒவ்வொரு பிரச்னையையும் அஸெம்பிளியைப்போல் இருசாராரும் விவாதித்துக் கண்ட முடிவைப் பதிவு செய்யப்பட்டது. ஆனால் கடைசி நேரத்தில் மிராசுதார்கள் பிறகு பேசிக்கொள்ளலாமென்று கூறி எழுந்துவிட்டார்கள். கலெக்டர் அவர்கள் மிராசுதார்களைப் பார்த்து, 6, 7 மணி நேரம் வரையில் விவாதித்து முடிவுக்கு வந்த பின்னர் இவ்வாறு கூறுவது யாருக்கும் நல்லதல்ல. பருவ காலத்தைத் தவறவிட்டால் விவசாயம் பாழாகிவிடும். வறுமையும் குழப்பமும் வளர்ந்துவிடும். ஆகவே, எந்தெந்த விவசாயிகள் எந்தெந்த நிலத்தை எந்தெந்தத் திட்டப்படிச் சாகுபடிச் செய்து வந்தார்களோ, அதே முறையில் அந்தந்த விவசாயிகள் அந்தந்த நிலத்தில் நாளையிலிருந்து வேலை செய்யட்டும். வருமானம்பற்றியத் தகராறு ஏற்படுமானால், மீண்டும் கூடிச் சுமுகமாகத் தீர்த்துக் கொள்ளலாம் என்று கூறினார்.

" இதைக் கேட்டவுடன் மிராசுதார்கள் வெகு கோபத்துடன் காரில் கிளம்பி விட்டார்கள். மறுநாள் தேசீயப் பத்திரிகைகளில், திருச்சிக் கலெக்டர் விவசாயிகளைத் தூண்டிவிட்டு, மிராசுதார்களுக்குக் கஷ்டநஷ்டங்களைச் செய்து வருகிறார் என்னும் பொருள்பட செய்திகள் வந்தன. இதனைக் கண்டவுடன், பாரபட்சமற்றப் பத்திரிகா தர்மமானது பணம் படைத்தோர்க்கு அடிமையாகிவிட்டது என்ற முடிவுக்குத்தான் வர முடிந்தது.

" சுதந்திர உரிமைப் பெற்ற நாட்டில் ஏழை மக்களின் இதத்திற்காகவே வாழ்கின்ற உத்தமத் தலைவர்கள் அமர்ந்து ஆளும் இவ்வாட்சியின்கீழ், பொறுப்பேற்று பணியாற்றும் ஒரு அதிகாரி இதைவிட நியாயமாக எப்படி நடந்து கொண்டிருக்க முடியும்? அன்றையத் தினம் இம்மாதிரியான முடிவைக் கலெக்டர் செய்யாதிருந்தால் வருங்காலத்தைச் சிந்தித்து வயிறெரிந்த விவசாயிகளுக்கும், அவர்களுக்கு எதிராக மிராசுதார்களால் தயாரித்து வைக்கப்பட்டிருந்த கூலியாட்களுக்கும் மறுநாளே கலகம் ஏற்

6th August 1955] [Sri T. V. Sannasi]

பட்டிருக்கும். இக்கலகத்தால் கழனி யெல்லாம் செந்நீரும், சேறும் நிறைந்திருக்கும். இவ்விதக் கொடூர நிலைமை ஏற்படுவதைப்பற்றி மிராசு தார்களுக்குக் கவலையில்லாமலிருக்கலாம். மிராசுதார்களுக்குள் ஏற்படும் தண்ணீர்த் தகராறு—வரப்புத் தகராறு மற்றும் தகராறுகள் ஏற்பட்டால் கூட விவசாயிகளுக்குள் ஒருவரை யொருவர் அடித்துக்கொண்டு சாகும்படிச் செய்துவிட்டுச் சவுக்கியமாகத் தங்கள் வீட்டில் அமர்ந்து கொண்டுயிருக்க லாம். ஆனால், பொறுப்பு வாய்ந்த ஒரு ஜில்லா கலெக்டர் அவ்வாறு இருக்க முடியுமா ?

" உயிர்ச் சேதம்—உற்பத்திச் சேதம் முதலியவைகளைத் தடுத்து நீதி, அமைதியை நிலைநாட்டிய கலெக்டரைப் பாராட்டும் பெரும்பாலோரான பொதுமக்களின் அபிப்பிராயத்துக்கு மாறாக ஒரு சில மிராசுதார்கள் அவர் மேல் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். இது மிகவும் நீதியற்றதாகும். இச்செயலானது தன்னலத்திற்காகவே பல நல்ல கட்சியைச் சார்ந்திருக்கும் மிராசுதார்கள் யார் யார் என்பதைப் பொதுமக்கள் புரிந்துகொள்ள வழி செய்தது. இனி, எந்தக் கலெக்டர் வந்தாலும் பொது நீதிக்கு முரணாகப் பணம் படைத்தோருக்கு ஆதரவாக இருந்துகொண்டு ஏழை விவசாயிகளைப் பாதிக்கும் முறையில் நடந்து கொள்வாரானால், விவசாயிகளின் சார்பாக வும், கலெக்டர் மீது, பல ஸூட் நோட்டீஸ் கொடுக்க நேரிடுமென்பதற்கு இடமில்லாமற் போகவில்லை. ஆனால் அவர்களிடம் பணமில்லையே என்று எண்ணிவிடக் கூடாது. இலட்சியத்திற்குப் பிச்சை எடுப்பார்களானால் பத்து மிராசுதார்களுக்கு வரும் வருவாயைவிட அதிகம் சேர்த்துவிட முடியும். அந்த அளவுக்கும் பெரும்பாலான ஆதரவு அவர்களுக்கு இருந்துவரு கிறது. ஆனால், இந்நிலைமை வளருமானால் அரசாங்க நிர்வாகம் எவ்வாறு நடக்க முடியும் என்பதைப்பற்றி மிராசுதார்கள் சற்றேனும் சிந்தித்ததாகத் தெரியவில்லை. ஏழைகளின் நல்வாழ்வுக்காகச் சோஷலிஸ முறையில் அமைதிக்குப் பங்கமின்றிச் சமுதாயத்தை மாற்றி அமைக்கவேண்டுமென்ற அரசாங்கக் கொள்கையைப் புறக்கணிக்கும் முறையில் யுத்தத்திற்குப் பின் உயர்ந்துவிட்ட சில மிராசுதார்கள் முடிந்த வரையில் குழப்பத்தை மூட்டி வருகிறார்கள்.

" ஏழை விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் உயருவதற்காக, அஸெம் பிளியில் இயன்றவரை பாடுபடுகிறேன் என்று கூறிப் பெருமிதமான விவ சாயிகளின் வோட்டைப் பெற்று **M.L.A.** ஆனவர்கள், விவசாயிகளுக்குத் தீங்கு செய்ய முடியாத கலெக்டரை உடனடியாக ஊரைவிட்டு மாற்ற வேண்டுமென்று மந்திரிகளிடம் அந்தரங்கமாகத் தூது செல்வார்களானால், இதைவிட வெட்ககரமான செயல் வேறு என்ன வேண்டும். இதுதான் ஏழைகளுக்குச் செய்யும் சேவையா ?

" விவசாயிகளின் பிரச்னையானது, ஒரு நாட்டின் உயிர்ப்பிரச்னையாகும். ஆகவே, இப்பிரச்னையைத் தீர்ப்பதற்காகவே வந்துள்ள இம்மசோதா வானது, ' பாம்பிற்குத் தலையையும், மீனுக்கு வாலையும் ' காட்டுவது போல் இல்லாது, ஆட்சேபகரமான பிரச்னையைத் தீர்த்துக் காந்திய இலட்சி யத்திற் இணங்கச் ' செலக்ட் கமிட்டியார் ' எண்ணிறந்த ஏழை மக்கள் வரவேற்கும் முறையில் உருவாக்கித் தருவார்கள் என்று நம்புகிறேன். வருங்காலத்தில் பெருங்குடி மக்களோடு மிராசுதார்களும் சேர்ந்து அமைதி யாக வாழவேண்டும் என்பதற்காக மிராசுதார்களின் சார்பில் இம் மசோதாவை வரவேற்கிறேன்."

Sri P. RAMAMURTHI :—" கனம் உதவி சபாநாயகர் அவர் களே, இந்த மசோதா மீது நடந்த விவாதத்தில் சபையின் பல பாகங்களி லிருந்து பிரசங்கங்கள் நிகழ்த்தப்பட்டன. அதில் ஒரு விஷயத்தைத் தெள்ளத் தெளிவாகக் காணலாம். சர்க்கார்த் தரப்பில் இரட்டைக் குரல் ஊதப்பட்டது. மசோதாவை அவர்கள் ஆதரிக்க வேண்டும். சர்க்கார்த் தரப்பு மசோதா அல்லவா ? பாதகமாக எதிர்ப்பது சாத்தியம் அல்ல. ' ஆனால் ' போடவேண்டும். ' ஆனால் ' போட்டுவிட்டு பின்னால் செய்யக் கூடிய பிரசங்கம் பூராவும், ' அநேகமாக இந்த நாட்டில் இருக்கும்படியான குத்தகைதார்களுக்கும் வாரதார்களுக்கும் பாதுகாப்பு அவசியம் இல்லை,

இன்று தேவைப்பட்டிருப்பது எல்லாம் நிலச்சுவாந்தார்களுக்கும் நிலப் பிரபுக்களுக்கும்தான் பாதுகாப்பு' என்று பேசப்பட்ட பிரசங்கங்களையும் கேட்டோம், அந்தப் பக்கத்திலிருந்து.

"அதே பக்கத்திலிருந்து மறு புறத்திலே, 'இன்று தஞ்சை ஜில்லாவில் இருக்கக்கூடிய சட்டத்தை ஒரு காலத்தில் கடவுள் கொடுத்த வரப் பிரசாதம் என்று போற்றினோம். கடந்த மூன்று வருஷக் காலத்திற்குள் அந்த வரப்பிரசாதம் இப்படித்தானா முடியவேண்டும்? விவசாயிகளின் நிலைமை மாறிவிட்டது என்று தஞ்சையிலிருந்து வந்த ஒரு காங்கிரஸ் அங்கத்தினர் பேசினதையும் பார்த்தோம்.

"எதிர்க்கட்சியை எடுத்துக்கொண்டு பார்த்தால் அதிலும் இதைப் பார்த்தேன். ஒரு அங்கத்தினர்—எதிர்க்கட்சி என்று சொல்லக்கூடியவர்—காங்கிரஸ் கட்சியினர் மிராசுதாரைப் பாதுகாக்க வேண்டுமென்று சொன்னதைப் போல்தான் அவரும் பேசினார்.

"ஆனால், ஒரே ஒரு கட்சிதான் இது சம்பந்தமாக பிரிக்க முடியாத நிலைமையில் இருக்கிறது. எதைக் காட்டுகிறது? இதைக் கட்சி சம்பந்தமான பிரச்னையாக மட்டும் கொண்டுவிட முடியாது. வர்க்கப் பிரச்னை, இதில் அடங்கியிருக்கிறது. நிலப் பிரபுக்கள் பிரச்னை, விவசாயிகள் பிரச்னை என்று வர்க்கப் பிரச்னை அடங்கியிருக்கும்போது அந்த வர்க்கமனோபாவம் நிச்சயமாக வந்துவிடும். ஒருவர் என்ன நல்லெண்ணம் படைத்தவராக இருந்தாலும், ரத்தம், வர்க்க உணர்ச்சி ஏற்படும்போது நல்ல எண்ணம் அவருக்குத் தானாகவே போய்விடும். இந்த மசோதாவை வரவேற்க வேண்டுமென்று சொன்ன அதே சமயத்தில் வர்க்க உணர்ச்சி தன்னையும் மீறி உடைத்துக்கொண்டு வெளியே வந்துவிடுகிறது. அந்த நிலைமைதான் ஸ்ரீ கருத்திருமன் அவர்களுக்கு ஏற்பட்டது என்று நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

"எங்கள் கட்சி சம்பந்தப்பட்ட மட்டில் அதுதான் வித்தியாசம். அந்த வர்க்கத்தில் பிறக்காமற்போனாலுங்கூட வர்க்கப் போராட்டத்தில் ஊறி அந்த வர்க்க மனோபாவம் பரிபூரணமாக விட்டொழிக்கப்பட்ட கட்சியாக இருப்பதனால் எந்த வர்க்கத்திலிருந்து வந்த போதிலும் இரட்டைக் குரலைக் கேட்க முடியாது. இதுதான் மற்ற கட்சிகளுக்கும் எங்களுடைய கட்சிக்கும் உள்ள வித்தியாசம்.

"ஸ்ரீ கே. ஆர். நல்லசிவம் அவர்கள் பேசும்போது, எங்கள் கட்சியில் இந்தச் சட்டங்களையெல்லாம் செய்வதற்கு உறுதியாக இருக்கிறோம் என்று பேசினார். சட்டசபையிலே அது வெளியாகிவிட்டதே! காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே இந்தச் சட்டத்தை விவசாயிகளுக்கு நன்மை பயக்கக் கூடிய சட்டத்தைச் செய்யவேண்டுமென்ற ஆர்வம் கொண்டிருக்கக்கூடியவர்கள் பல்லாயிரக் கணக்கில் இருக்கிறார்கள் என்பதை ஏற்றுக்கொள்ளுகிறேன். அதே சந்தர்ப்பத்தில் இந்தச் சட்ட சபையில் சர்க்கார் கொண்டு வந்திருக்கக்கூடிய மசோதாவாக இருந்தபோதிலுங்கூட அதைச் சொல்லாமல் எதிர்க்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது, அதே கட்சியிலிருந்து அப்படிப் பட்டவர்களுடைய பிடிப்பு காங்கிரஸ்காரர்களில் இன்னும் நிச்சயமாக இருக்கிறது என்பதையும் பார்த்தோம். இந்தப் பிடிப்பு இருக்கும்போது—பிடிப்பு சாதாரண பிடிப்பு அல்ல. செல்வாக்கு படைத்தவர்கள், தனவந்தர்கள், இன்னும் மற்றவர்களை விலைக்கு வாங்கக்கூடிய அளவுக்கு உள்ளவர்களுடைய பெரிய பிடிப்பு—அதை சாதாரணமாக நாம் துச்சமாக மதிக்க முடியாது. அந்தப் பிடிப்பு இருக்கும்போதுதான் தயக்கம் ஏற்படுகிறது. ஏன்? மூன்று வருஷ காலமாக தயக்கம் ஏற்பட்டது மந்திரி அவர்களுக்குத் தெரியாதா?

"1946-ம் வருஷத்திலே நில வெளியேற்றம் மிகப் பெரும்பான்மையாக இந்த ராஜ்யத்தில் ஆரம்பமாகிவிட்டது தெரியாதா? 1946-ல் மன்னார்குடியில் தஞ்சை பூராவிலும் நில வெளியேற்றம் ஏற்படக்கூடிய சமயத்தில் ஸ்ரீ பாஷ்யம் அவர்கள் மந்திரியாக இருந்தபோது சமரசம் பேசுவதற்கு வந்தார். சமரச மகாநாட்டில், 'இந்த உரிமையை விட்டுக் கொடுக்க முடியாது, அரசாங்கம் விவசாயிகளுடைய அந்த பாத்தியதையைப் புறக்

6th August 1955] [Sri P. Ramamurthi]

கணிக்க முடியாது' என்று அன்றைக்குப் பேசினார். மரசம் தீராமல் திரும்பி வந்துவிட்டார். நில வெளியேற்றம் 1946-ம் வருஷத்தில் தொடங்கியது. சாதாரணமாக விவசாயியை வேண்டுமென்று யாரும் வெளியேற்ற மாட்டார்கள். ஆனால், என்றைக்கு வெளியேற்ற ஆரம்பிக்கிறார்கள் ? தாங்கள் கேட்டதை விவசாயிகள் கொடுத்து வருகிற வரையில் வெளியேற்ற மாட்டார்கள். இதுவரை அந்த நிலைமை மாறியிருந்தது. அதற்குப் பதிலாக அநியாயமாக கொள்ளையடிக்கக்கூடிய உரிமை பூரணமாக ரத்து செய்யப்படவேண்டுமென்று கோரி அந்த உரிமைக்கு வரம்பு கட்டப்படும் என்று அப்படி ஒரு இயக்கம் வளர்ந்து வருகிறது. அந்த இயக்கம் கொஞ்சமாக இருந்தாலுங்கூட பலமாக வளராமற் போனாலுங்கூட அந்த பலந்தான் ஜனங்களை நிர்ப்பந்தப்படுத்தக்கூடிய சக்தி இந்த இயக்கத்திற்கு உண்டு என்பதைப் பார்க்கும்போது அந்த உரிமையை எப்படியாவது நீக்கவேண்டுமென்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

"ஆகவே, நிலவெளியேற்றம் என்பது இன்று நேற்று ஏற்பட்டதல்ல. 1946-ம் வருஷம் முதற்கொண்டு எந்த இடத்தில் கொஞ்சம் விவசாய இயக்கம் பலமாக வளர்ந்ததோ அந்த இடத்தில் தோன்றி வளர்ந்து சட்டம் போடும் நிலைமை ஏற்படும்போது மாகாணம் பூராவும் வளர்ந்து வந்திருக்கிறது என்று மந்திரிமார்களுக்குத் தெரியும். தெரிந்திருந்தாலுங்கூட 1954-ம் வருஷம் டிசம்பர் மாதத்திற்குப் பிறகு நிலத்தில் சாகுபடி செய்பவர்களுக்குத்தான் நில வெளியேற்றத்தினின்று பாதுகாப்பு என்று ஏன் அந்த உரிமையை மிராசுதார்களுக்குத் தரவேண்டும் ? அந்த வர்க்கத்தினரின் பிடிப்பு சிக்கிரத்தில் போகுமா ? போகாது. ஸ்ரீமான் கருத்திருமன் கூறியதைப் பார்த்தால் Indian Penal Code ஐயே திருத்த வேண்டுமென்று தோன்றுகிறது. கொலை செய்வது குற்றம் என்று சட்டம் செய்யப்பட்டது. செய்யப்பட்ட காலத்தில் இந்த நாடும் பூராவுமா கொலைகள் நடந்துவந்தன ? அப்படியிருக்க ஏன் நாடு பூராவுக்கும் கொண்டு வரப்பட்டது ? எந்தெந்த இடத்தில் கொலை நடக்கிறதோ, யார் யார் கொலை செய்தார்களோ அவர்களைத்தான் சட்டம் பாதிக்கும். கொலை செய்யாதவர்களை சட்டம் பாதிக்காது. அப்படியிருக்கும்போது ஸ்ரீமான் கருத்திருமன் அவர்கள் சொல்வதுபோல் எந்தெந்தப் பிராந்தியங்களில் நிலவெளியேற்றம் நடந்துவருகின்றன என்பதைப் பார்த்து அந்தந்த பிராந்தியங்களுக்கு மட்டும் இந்தச் சட்டம் கட்டுப்படுத்தும் என்று சட்டம் இயற்றுவது முடியாது. அது தவறு. சட்டம் பொதுவாக இருந்தால், ராஜ்யம் பூராவுக்கும் இருந்தால் எந்தெந்த இடத்தில் யார் குற்றம் செய்கிறார்களோ அவர்களைச் சட்டம் பாதிக்குமேயொழிய குற்றம் செய்யாதவர்களை ஏன் பாதிக்கப்போகிறது ? அப்படியிருக்கும்போது ஸ்ரீமான் கருத்திருமன் அவர்கள் நில வெளியேற்றம் நடக்காத இடங்களுக்கு ஏன் விதிவிலக்கு கோரவேண்டும் ? அந்த எண்ணம் அவருக்கு எங்கிருந்து வருகிறது ? இந்தச் சட்டத்திலிருந்து தப்பித்துக்கொள்ளுவது சாத்தியமா என்ற மனோபாவத்திலிருந்து எழுகிறதே யல்லாமல் வேறுவிதமாக வருவது கிடையாது.

"பிறகு மத்திய பிரச்னை என்ன, என்ன நிலைமை ? சொத்து உரிமை பற்றிய பிரச்னைதான். ஸ்ரீ நல்லா கவண்டர் அவர்கள் பேசும்போது, நிலச்சுவான்தார்களுக்கு நிலங்களை சொந்த சாகுபடி செய்ய உரிமை கொடுக்க வேண்டுமென்றும், அப்படி உரிமை கொடுக்காமல் போனால், நிலத்தை விலைக்கு வாங்க யாரும் முன்வரமாட்டார்கள் என்றும், ஆகவே, நிலத்தை வாங்குவதற்கான தன்மையில், சாஸ்வதமாக இருப்பதற்கு இன்று, நிலங்களை மீண்டும் மிராசுதாரர்கள், சொந்த சாகுபடிக்கென்று சொல்லி, நிலங்களை தாங்களே எடுத்துக்கொள்ளும் உரிமை வேண்டுமென்று சொன்னார்கள். சிலருக்கு சொந்த சாகுபடிக்கு நிலங்களை கொடுக்க வேண்டுமா, வேண்டாமா என்பது வேறு விஷயம். ஆனால் நிலம் விற்க, அவர்களுக்கு உரிமை கொடுக்கவேண்டுமென்று சொன்னால், நான் கொடுக்காதே, அந்த உரிமை கொடுக்கக்கூடாது என்று சொல்லுகிறேன். ஏன் ? இந்த நாட்டில் நிலம் வாங்கும், விற்கும் முறை மாற்ற வேண்டிய காலம் வரும். பதினைந்து ஆயிரம் ரூபாய்க்கு ஒரு ஏக்கர் ஒருவர் வாங்கினால், அதனால் நாடு லாபம் அடையாது. யாருக்கு அதில் 12-45 p.m.

வரும் வருமானம் உரித்தானது என்பதுதான் முக்கியமான கேள்வி. சர்க்காருடைய மூலதனம் வளர வேண்டுமென்றால், இப்பேர்பட்ட வியாபாரத்தால் முடியாது. இந்நிலங்கள் வாங்கப்படுவதாலும், விற்கப்படுவதாலும், அதிலே போடப்பட்ட பணம் நாட்டுக்குப் பயன்படாமல் வீணாகப் போகிறது. இதை எல்லாம் தடை செய்ய இப்பேர்ப்பட்ட நில சீர்திருத்தங்கள் வேண்டும். இருக்கவேண்டியதற்கு அவசியமுண்டு என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

" அடுத்தபடி நில உரிமை சம்பந்தமானது என்ன ? உடமை சாஸ்வதமாக ஏற்பட்டது, என்றென்றைக்கும் அவ்வுடமையை மாற்றுவது சாத்தியமில்லை என்று சொன்னார்கள். உலகத்திலே சொத்து உரிமை கடவுளால் ஏற்பட்ட உரிமையல்ல. இயற்கையால் ஏற்பட்ட உரிமையுமல்ல. மனிதனால் உற்பத்தி செய்யப்பட்ட ஒரு உரிமையாகும். மனிதன் என்று சொன்னால், அன்று ஆட்சியில் இருக்கும் அரசாங்கத்தால் உற்பத்தி செய்யப்பட்ட உரிமையாகும். மிராசுதார் அந்த உரிமையை எடுத்துக்கொண்டான். தொன்று தொட்டு சாஸ்வதமாக அந்த உரிமை அவனிடம் இருந்ததென்று சொல்லமுடியுமா ? இது மன்ரோ காலத்தில் ஏற்படுத்தப்பட்ட முறையே தவிர வேறில்லை. வேத காலத்தில், புராண காலத்தில் இருந்ததா ? இல்லை. எதிர் கட்சிக்காரர்கள், பரம்பரை சொத்துரிமை எல்லாம், இப்போது முடியாதென்று சொல்லுவதின் காரணம், சொத்து உரிமை பற்றி ஆராய்ச்சி செய்தால், இந்த உரிமை வாதத்திற்கு நிற்காமல் காற்றில் பறக்க ஆரம்பிப்பதாலேயே. ஆகவே சொத்து உரிமை மனிதனால் உற்பத்தி செய்யப்பட்டது. அந்த மனிதனுக்கு அந்த உரிமையை அழிக்கவும் உரிமையுண்டு. இன்று இந்த சொத்து உரிமை, மனித வர்க்கத்தின் வளர்ச்சிக்குக் குறுக்கே வருமானால் அந்த உரிமையை தகர்த்து எரிந்துவிட்டு, அந்த உரிமை, நியாயப்படி யாருக்குக் கொடுக்கவேண்டுமோ, அவர்களுக்கு அதை கொடுக்க அரசாங்கத்திற்கு அதிகாரமுண்டு. இப்படிப்பட்ட உரிமை விவசாயிகளுக்கு வேண்டுமா, வேண்டாமா என்பதுதான் பிரச்னை.

" ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள் சொன்னார்கள், **Landlord** என்ற பெயர் தங்களைப் போன்றவர்களுக்கு வேண்டியதில்லை என்று. கனம் நாராயணசாமி அவர்கள் அதை வரவேற்றார்கள். ஆனால் அவர் பின்பு சொன்னதை இவர் கவனிக்கவில்லை என்று நினைக்கிறேன். **Landlord** என்பதிற்குப் பதிலாக **landowner** என்ற பெயரை கொடுத்துவிடுங்கள் என்று சொன்னார். என்ன அர்த்தம் ? இந்த நாட்டிலே நிலப் பிரபுக்களுக்கு பரம்பரையாக உரிமையான நிலம், அதனாலே நாங்கள் எல்லாம் நிலச் சொந்தக்காரர்கள் என்று பெயர் சூட்டவேண்டுமென்பதுதான் அதன் அர்த்தம். சரித்திர பூர்வமாக அப்படிச் சொல்ல முடியாது. அரசாங்கத்திற்குத்தான் அந்த நிலங்கள் எல்லாம் சொந்தம் என்று சரித்திர பூர்வமாக சொல்லமுடியும். சட்டமும் அப்படித்தான் சொல்லுகிறது என்று மந்திரி சுப்பிரமணியமும் சொல்லுகிறார். ஜனநாயக சர்க்காரிலே, இவர்களுக்கு உரிமை பட்டா வழங்கி, அதற்காக சர்க்கார் அவர்களிடமிருந்து வரியை வாங்கி, அவர்களுக்கு அந்நிலங்களின் அனுபவ பாத்தியதையைத்தான் கொடுத்திருக்கிறது. ஆகவே இன்று ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள், இந்த மாதிரி **landlord** பட்டம் வேண்டாம், நிலம் சர்க்காருக்கு சொந்தமல்ல, நான்தான் நில சொந்தக்காரன் என்று சொல்லிவிடுங்கள், ஏற்படுத்திவிடுங்கள் என்றுதான் சொல்லுகிறார்கள். இந்த மனப்பான்மையைப் பற்றித்தான் சொல்லுகிறேன். வர்க்க மனப்பான்மையிலிருந்து அதற்கு வேண்டிய உரிமைகள், பாதுகாப்புகள் எப்படி ஏற்றுக்கொள்ளலாம் என்று இயற்கையாகவே அந்த நில பிரபுக்கள் வர்க்கத்திற்கு வந்துவிடுகிறது. அந்த துறையில்தான் அவர்களுக்கு யோசனை போக முடியும். ஆகவே, இந்த முதலாளித்துவ பிடிப்பின் காரணமாக ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். இன்னும் இந்த நில பிரபுததுவத்தினுடைய எல்லா விதமான பிடிப்பிலிருந்தும், எல்லா நிலங்களும், விவசாயிகளும் மீட்கப்படவேண்டும்.

6th August 1955] [Sri P. Ramamurthi]

“இந்த சட்டத்தை எடுத்துக்கொண்டால், இது மிராசுதாரர்களுக்கு பாதுகாப்பு கொடுப்பதுமட்டுமல்ல. எந்த லட்சியம் நிறைவேற்றவேண்டுமென்று, மனப்பூர்வமாக சர்க்கார் தரப்பிலுள்ளவர்கள் அபிப்பிராயப்படுகிறார்களோ, அந்த நோக்கம் நிறைவேறாமல், அதற்கு மாறாக மேலும் அதிகப்படியான நில வெளியேற்றம்தான் இதிலே குறிப்பிட்ட ஷரத்துகளால் ஏற்படும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதுவரை இருக்கக்கூடிய குத்தகை பாக்கி தொகையை திருப்பிக்கொடுக்கவேண்டிய விஷயமாக ஏற்கனவே பலர் சொல்லிவிட்டார்கள். ஒரு விஷயம் மட்டும் சொல்லுகிறேன். இனிமேல், சரியான வாரம், குத்தகை எவ்வளவு இருக்கவேண்டுமென்று நிர்ணயிப்பதற்காக ஒரு சட்டம் வரப்போவதாக சர்க்கார் சொல்லுகிறது. இதுவரை இருந்திருக்கும் வாரம், குத்தகை நியாயமானவையல்ல, அநியாயமானவை என்று பகிரங்கமாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இதுவரை குத்தகை வாரம் ஏற்படுத்தினது அநியாயம் என்று ஏற்றுக்கொண்ட பிறகு, அந்த அநியாயத்தால் சேர்ந்திருக்கும் வாரம், குத்தகை பாக்கியை கொடுக்காவிட்டால், அவர்களுக்கு நிலம் கொடுக்கமுடியாது என்று சொல்லுவது அந்த அநியாயத்தை மேலும் ஊர்ஜிதப்படுத்துவதாகும். அதன் விளைவு எங்கு கொண்டுபோய் விடும் என்பதைப்பற்றி பலர் எடுத்துச் சொன்னார்கள்.

“நில உடமை **ceiling** சட்ட நுணுக்கங்களைப்பற்றி கனம் சுப்பிரமணியம் அவர்கள் எடுத்துச் சொன்னார். அரசியல் சட்டம் **31-(A)** செக்ஷன்படி சில தகராறுகள் இருப்பதாகவும் அதற்காக, மத்திய சர்க்கார் அரசியல் சட்டத்தை திருத்தப்போவதாகவும் பேசினார்கள். ஆனால் அது எப்போது திருத்தி பூர்த்தியாகும் என்பது தெரியாத நிலைமையில் இருக்கிறோம். மூன்று வருஷ காலத்திற்குமுன்பு, **1952** தேர்தல் காலத்திலே பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்கள் தேர்தல் பிரசாரம் செய்யும்போது இந்த அரசியல் சட்டம் நிலச்சீர்திருத்தம் செய்ய குறுக்கே நிற்கிறது என்று சொன்னார். மூன்று வருஷமான பிறகு இந்த மசோதாவின் மூலம் இந்த சின்ன சீர்திருத்தம்தான் வருகிறது. இது சென்னை ராஜ்யத்திற்குமட்டும் பிரத்தியேகமாக ஏற்பட்டிருக்கும் சிக்கல் நிலைமை. ஆகவே, இதற்காக எல்லா மாகாணங்களிலும் கிளர்ச்சிகள் ஏற்படுமென்று சொல்லமுடியாது. அரசியல் சட்டம் **31 (A)** செக்ஷனுக்கு போவதற்குப் பதிலாக 31-வது செக்ஷனின் கீழ் இதற்கான நடவடிக்கை எடுத்துக்கொள்வது சாத்தியமாகும். வரும் நில சீர்திருத்த சட்டம், நஷ்ட ஈடு எப்படி நிர்ணயிக்கவேண்டும், எப்படி கொடுக்கப்படவேண்டுமென்று, இந்த இரண்டும் நிர்ணயித்தால் போதும். அந்தச் சட்டம் செல்லுபடியாகுமென்று 31-வது செக்ஷன் அரசியல் சட்டம் சொல்லுகிறது. நஷ்ட ஈடு போதுமா போதாதா, என்பதை வாதாட நிலச்சுவான்தார் கோர்ட்டுக்குப் போக முடியாது என்று திருத்தம் வந்துவிட்டது. அந்த நிலைமையில் மாகாண சர்க்கார் இந்த நிலங்களையெல்லாம் எடுத்துக் கொள்வது என்று சட்டம் போட்டால், நஷ்ட ஈடு எப்படி கொடுக்கவேண்டுமென்பது இப்போதே தீர்மானிக்கவேண்டியதில்லை. அடுத்த 15 வருஷங்களுக்குப் பிறகு நஷ்ட ஈடு கொடுக்கமுடியுமென்று சொன்னாலும், சுப்ரீம் கோர்ட்டு அம்முடிவு செல்லுபடியாகாதென்று சொல்லமுடியாது. உடனே கொடுக்க பணமில்லை. அதனால் இந்த சட்டம் கொண்டுவர முடியவில்லை என்று சொல்லுவதற்குக் காரணம் சர்க்காருக்கு இல்லை என்பது நான் சொன்னதிலிருந்து விளங்குமென்று நினைக்கிறேன். உடனே நஷ்ட ஈடு பணம் கொடுக்கவேண்டியதில்லை. பின்னால் அதைப்பற்றி யோசனை செய்யலாமென்று சொல்லி, அந்த சட்டத்தைக் கொண்டுவரலாமென்று தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.”

* THE HON. SRI M. A. MANICKAVELU :—“ Mr. Deputy Speaker, Sir, in the first place let me thank the hon. Members for their suggestions as regards the manner in which this particular Bill can be improved. One or two criticisms were also made . . .” 12-5 p.m.

[6th August 1955

AN HON. MEMBER :—" On a point of order, Sir. தமிழில் பேசும்படி கேட்டுக்கொள்கிறேன்."

THE HON. SRI M. A. MANICKAVELU :—" இதில் சட்ட நுணுக்கங்கள் எல்லாம் இருக்கின்றன. தமிழில் பேசுவதற்கில்லை.

" One piece of criticism that was made, namely, that the Government are not earnest in bringing about land reforms, and that they do not want to do anything effectively is, I should submit, incorrect and also uncharitable. I am sorry that some hon. Members have such an impression. It is quite wrong. I may at once tell that the Government have been very anxious to bring this land reform and that they have been taking every step to introduce a comprehensive land legislation. But, as it was already pointed out, certain constitutional and legal difficulties came across. I am glad that even the Leader of the Opposition has admitted that there is some legal difficulty. He said that though there might be some difficulty under Article 31-A which had been amended recently in the Parliament, there was scope for the Government to take action under Article 31. But the whole frame-work of the reform Bill was based on the amendment of Article 31-A. But now that it cannot be done, we have to look to other ways to bring about the legislation. We are trying our best to find out in what manner the difficulty can be surmounted. There are also certain difficulties in taking action under Article 31. It is not as if that there are not difficulties. If we take action under that article, the Government will have to shoulder the responsibility of meeting the compensation, the distribution of the lands and also many other difficulties like that. The Government thought at the time when Article 31-A was being amended in the Parliament, that the amendment
1 p.m. originally suggested for Article 31-A was good, if passed, for effecting land legislation. Now that Article 31-A was not amended as we originally thought, anyhow we shall bring in legislation. It was said that the Government only yielded to pressure and did not bring in legislation of their own accord. That also is incorrect. The fact that the Government appointed a committee as early as in 1950 shows that they have been earnest to bring in a legislation. That also shows clearly that the Government were not moved by the recent disturbances. The party in power in 1950 thought of a land reform legislation and appointed a committee to go into several aspects of the land problem. The committee's report was carefully examined and some of the proposals for land reform were based on the report of that committee.

" Simply because there is some disturbance here and there, some people think that there is widespread disturbance in the rural part and that there is much cleavage between the mirasdar and the tenant. It is not so. Disturbances occur only in some isolated pockets. As was pointed out by the hon. Member Sri P. G. Karuthiruman, there is no disturbance in Coimbatore district where there are tenants who have been tilling the same land for forty or fifty years. Disturbances arise for obvious reasons and people who

6th August 1955] [Sri M. A. Manickavelu]

have looked into them carefully know how they occur. But every district is not like Coimbatore district. Poor Tiruchirappalli district has fallen a victim to disturbances.

" The hon. Leader of the Opposition said that the party in power spoke with two voices. I am not ashamed of that. On the other hand, I am very glad that two points of view were expressed. Land reforms being a very complicated problem, we wanted to know all the implications of the proposed reform. So we allowed full freedom to the Members to express their views, and they expressed their views. There is nothing wrong in it. He said : ' Look at my party, there is no difference of opinion and we speak with one voice. I am not surprised at that also, having regard to their way of thinking about political problems : (The Hon. Sri C. Subramaniam : ' There is regimentation of even thinking '.) I have not heard of regimentation of thinking till now. I have heard of regimentation of voting. In this country everybody is free to vote as he likes. But in the country from which he draws his ideology, the party bosses set up a particular candidate and pass a decree that all should vote for him. There is no scope for liberty in voting. Therefore, there is nothing surprising in what the Leader of the Opposition said. This piece of legislation is only a sort of preliminary legislation. I will not even call it an instalment. The object of this measure is to create a calm and peaceful atmosphere before we think of other instalments of reform. I will give a homely simile. Before a surgeon operates, he applies the anæsthetic. Why? Because he wants the patient to be quiet without moving his hands or legs. If the patient moves his hands or legs, the operation cannot be successful. We want to bring in some reform. If there are disturbances here and there, the atmosphere will not be conducive to calm thinking and bringing in legislation. So we thought it fit to bring in this temporary measure to remove the disturbances and create a calm atmosphere. That is all the object of this legislation. There is nothing new about it. We passed a similar legislation with regard to South Kanara district.

" It was pointed out that the prevailing rates of rent were very high, that we must have more reasonable rates, and that the payment of arrears of rent on the basis of the prevailing high rates should not be made a condition precedent for the restoration of possession of land to an evicted tenant. I admit all that. But how can we fix fair rent now? It can be done only later. In fact we want legislation for fixing fair rent, and that legislation is coming up in this session itself. Some Members expressed a doubt whether it would come during this session. It will come during this session. Therefore it is provided in the Bill that a tenant will have to pay the arrears of rent at the rate which he has been paying. There is nothing wrong or unreasonable about it. When the legislation for fixing fair rents comes up, it is open to the Members to suggest any propostion they like. Then we will arrive at a reasonable rate. The adoption of the rate that has

been prevailing till now is the only practicable thing in the present circumstances. If we tamper with that rate just now, I am afraid we will get into deep waters.

"This legislation is no doubt necessary to bring about a calm and peaceful atmosphere. But I submit that the best way of bringing about a calm and peaceful atmosphere is by mutual adjustment. I appeal both to the mirasdar and the tenant's to adjust their relationship by mutual agreement notwithstanding this legislation. As a matter of fact, a majority are adjusting their relationship in that way. This legislation is intended only for the minority of people who are not practical-minded, and who want to go a little out of the way. Only if the landlord-tenant relationship is cordial, food production will go on well. If there is not that cordial relationship, the welfare of the community at large will be seriously affected. The Government are very anxious to maintain cordial relationship. Only where that cordial relationship is disturbed, the Government step in and see that peaceful relationship is re-established.

"Hon. Members referred to the question of ceiling and other matters. I say all that is beyond the scope of this Bill. This Bill is only for the prevention of eviction. When the other Bill comes up, they can express their views. Though the views they have expressed now may not be useful for the purpose of this Bill, they will be useful in the sense that they will enable the Government to know in what way their mind is working.

"An hon. Member from Tanjore spoke at length. In fact, it was a review of the Tanjore Tenants and Pannaiyal Protection Act. We are not now reviewing that Act. He pointed out the difficulties arising from the working of that Act. I admit that practical difficulties may arise in actual working not only under this Act but under many other Acts. As far as possible, we try to remove all possible difficulties by making provision in the Act itself. But it may happen that, in spite of all our expert knowledge and legal acumen, there may be room for loopholes. The loopholes can be removed only after we actually come to know of them. In that way we shall have the benefit of the Tanjore Tenants and Pannaiyal Protection Act in framing new legislation."

DEPUTY SPEAKER :—"There is another subject on the agenda. So I hope the Hon. Minister will finish soon."

1–10 p.m. * THE HON. SRI M. A. MANICKAVELU :—"I am thankfull to you, Sir, for the tip that you have given. At this stage, I need not say anything more since the Bill is being referred to a Joint Select Committee. That Committee will go into all these questions and adjust matters as much as possible. With regard to the use of the term 'landlord', I may say a word. The term 'landlord' is very loosely used. Anybody who owns a bit of land calls himself a landlord and he prides over it. It is not a correct English expression. 'Landlord' will refer to a house-owner but

6th August 1955] [Sri M. A. Manickavelu]

not to a owner of a land. But we have been very loosely using it. The correct word will be 'landowner' or 'landholder'. If the word 'landholder' is used, there will be a clash with the technical expression 'landholder of an estate'. That was why that term was avoided. If the word 'landowner' is to be used, as the hon. Member the Raja of Chettinad wanted, there is difficulty then also. 'Landowner' will carry with it all the attributes of ownership. That is not possible here. Probably it is possible only in Malabar in the case of janmam land. That is why that word has not been used. Anyway at the Select Committee stage we shall consider it.

"Now, I beg to mention the names of the hon. Members of this House who will serve on the Joint Select Committee. They are—

The Hon. Sri M. A. Manickavelu,
The Hon. Sri C. Subramaniam,
Sri K. Rajaram,
Sri V. K. Ramaswami Mudaliar,
Sri S. Ramaswami Naidu,
Sri P. B. K. Rajachidambaram,
Sri P. S. Krishnaswamy Ayyangar,
Sri V. K. Palaniswamy Gounder,
Sri R. Krishnaswami Padayachi,
Sri M. Kattimuthu,
Sri M. Chinnathambi Thevar,
Sri T. V. Sannasi,
Sri P. Ramamurthi,
Sri C. Kandasamy,
Sri K. R. Sambandam,
Sri R. Rangasami Gounder,
Sri K. R. Nallasivam,
Sri M. Palaniyandi,
Sri D. Dasarathan,
Sri K. Vinayakam."

DEPUTY SPEAKER :—" The question is—

'That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses to consider the Madras Cultivating Tenants Protection Bill, 1955, and that the following Members of this House be selected to serve on such a Joint Select Committee :—

The Hon. Sri M. A. Manickavelu,
The Hon. Sri C. Subramaniam,
Sri K. Rajaram,

Sri V. K. Ramaswami Mudaliar,
Sri S. Ramaswami Naidu,
Sri P. B. K. Rajachidambaram,
Sri P. S. Krishnaswamy Ayyangar,
Sri V. K. Palaniswamy Gounder,
Sri R. Krishnaswami Padayachi,
Sri M. Kattimuthu,
Sri M. Chinnathambi Thevar,
Sri T. V. Sannasi,
Sri P. Ramamurthi,
Sri C. Kandasami,
Sri K. R. Sambandam,
Sri R. Rangasami Gounder,
Sri K. R. Nallasivam,
Sri M. Palaniyandi,
Sri D. Dasarathan,
Sri K. Vinayakam.''

The motion was put and carried.

IV.—DEMANDS FOR GRANTS FOR EXCESS EXPENDITURE FOR THE YEAR * 1950—51.

1–13 p.m.

Sri S. Ramalingam :—" கனம் உப சபாநாயகர் அவர்களே, 1950–51-ம் ஆண்டிலே சர்க்கார் சில இனங்களிலே, சட்டசபை அனுமதியின்றி, அதிகமாக செலவு செய்துவிட்டதன் காரணமாக, அதை சரிக்கட்டுவதற்காக இப்போது ஒரு வரவு செலவு திட்டத்தை நம் முன் வைத்திருக்கிறார்கள். அதை நம் சபை அனுமதிக்கவேண்டும் என்று சர்க்கார் கோருகிறது. அதை அனுமதிப்பதைத்தவிர, நமக்கு இப்போது வேறு வழியில்லை. ஏனென்றால் அந்தச் செலவு 1950–51-ல் நடந்துவிட்ட காரியம். அதை நாம் இப்போது அனுமதிக்காவிட்டால், அப்போது எந்த மந்திரிகள் அதிகாரத்தில் இருந்தார்களோ அவர்களிடமிருந்து வசூல் செய்யவேண்டிவருமே தவிர வேறு வழி கிடையாது. அந்த விதமான துர்ப்பாக்கியமான நிலைமையில் அவர்களை வைக்கவேண்டாம் என்பதற்காக சென்ற வருஷம் சர்க்கார் நியமித்த **Accounts Committee** அந்தப் பணத்தை சட்டசபை மூலமாக அனுமதித்து விடுவோம் என்று சொல்லி, மேலும் சில யோசனைகளை கொடுத்திருக்கிறார்கள். அதில் குறிப்பிட்ட வருஷத்தில் சர்க்கார் இலாக்காக்களில் நடந்த தவறுதல்களை சுட்டிக் காண்பித்து அவைகளை திருத்திக்கொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக சர்க்கார் 1950–51-ல் என்னென்ன இனங்களில் அதிகமாக செலவு செய்துவிட்டதற்காக, இப்போது நமது சபையின் அனுமதியை கோருகிறது என்றால், இந்த **Madras Electric Tramways Company** அதாவது ஏற்கனவே ஓடிக்கொண்டிருந்து இப்போது நிறுத்தப்பட்டிருக்கிறதே டிராம்கள் அந்த டிராம்வே கம்பெனி சர்க்காருக்குக் கொடுக்கவேண்டிய **Electric Charges** சுமார் ரூ. 4,98,254-ஐ கொடுக்க மறுத்துவிட்டார்கள். அந்த பணத்தையும் சேர்த்து வரவு செலவை கணக்கிட்டோம், அது கிடைக்காத காரணத்தினால் மீண்டும் சட்ட சபையின் அனுமதியை வாங்கி கணக்கை சரிக்கட்டவேண்டுமென்பதற்காக, இப்போது நம் முன்பாக நிற்கிறார்கள். இதைப்பற்றி சபையின்முன்பு சொல்லுவதற்கு வெட்கக்கேடாக இருக்கிறது. நிர்வாகம் பூராவும் சர்க்கார் கையில் இருக்கிறது. பரிபூரண அதிகாரம்

6th August 1955] [Sri S. Ramalingam]

அவர்கள் கையில் இருக்கிறது. அப்படியிருக்கும்போது, ஒரு வெள்ளைக்கார கம்பெனி பல நூற்றுண்டுகளாக நமது நாட்டு மக்களிடமிருந்து எவ்வளவு அதிகமாக லாபம் சம்பாதிக்கவேண்டுமோ, சம்பாதிக்கமுடியுமோ, அவ்வளவையும் சம்பாதித்து இங்கிலாந்திற்கு அனுப்பிவிட்டபின்னும்கூட நமது சர்க்காருக்கு சேரவேண்டிய **Electricity Bill** 4 லட்ச ரூபாய்க்கு மேற்பட்ட தொகையை கொடுக்க மறுக்கிருர்கள் ஆகையால் சபை இந்தப் பணத்தை அனுமதிக்கவேண்டுமென்றுல், இதைப்பற்றி நாம் என்ன சொல்லுவது. அந்த வெள்ளையனே போய்விட்டான். இருந்த சாமான்களையும் **Debenture holder** களுக்குச் சொந்தம் என்று சொல்லி விற்றுவிட்டுப் போய்விட்டான். சர்க்காரையும் பணம் கொடுக்காமல் ஏமாற்றிவிட்டான். இனி இந்த மாதிரியாக சர்க்கார் ஏமாறக்கூடாது. தங்களுக்கு வேண்டிய அதிகாரத்தை எடுத்துக்கொண்டு, நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த சந்தர்ப்பத்தில் ஒரு விஷயத்தை சபையின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். இன்று காலை விவாதத்தில்கூட இந்த விஷயம் குறிப்பிடப்பட்டது. அதாவது, சர்க்காரானது தப்பித்தவறி ஒரு விவசாயீ கேழ்வரகு சாகுபடி செய்வதற்கு பதிலாக நெல் சாகுபடி செய்துவிட்டால், அவன்மேல் நடவடிக்கை எடுக்கவும், ஏக்கருக்கு 100 ரூபாய் தண்ட அபராதம் விதித்து ஆடு, மாடுகளையும், இன்னும் இவனுக்கு இருக்கக்கூடிய சொத்துக்களை அனைத்தையும் ஜப்தி செய்யவும் கொஞ்சமும் தயங்குவது கிடையாது. பரிதாபமும் படுவது கிடையாது. ஆனல் இப்பேர்ப்பட்ட முதலாளிகள் சர்க்காருக்கு கொடுக்கவேண்டிய பாக்கியை கொடுக்க மறுக்கிருர்கள் என்றுல், எந்த நடவடிக்கையும் எடுக்க மனம் வருவதில்லை. எடுத்தாலும் ஜெயிப்பதில்லை. அவன் ஹைக்கோர்ட்டில் **Writ petition** போடுகிருன், தோற்கடித்துவிடுகிருன். அந்தமாதிரியான காரியங்கள் நடக்கிறது. இப்பேர்ப்பட்ட தவறுகளை சர்க்கார் இனிமேலாவது செய்யக்கூடாது என்று இந்த சந்தர்ப்பத்தில் சுட்டிக் காண்பிக்க ஆசைப்படுகிறேன்.

" அடுத்தபடியாக இந்த **Demand**-ல் எடுத்துக் காண்பித்து இருக்கக்கூடிய **item** என்னவென்றுல், ஒரு கிளார்க்கு 32,000 ரூபாய் சர்க்கார் பணத்தை கொள்ளையடித்துவிட்டான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்த கிளார்க்கின்மீது சர்க்கார் நடவடிக்கை எடுத்திருக்கிருர்கள் என்றும் பின்னல் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த கிளார்க்கு 32,000 ரூபாய் கொள்ளையடிக்கும்வரைக்கும் விட்டுவைத்திருந்து, அதன்பிறகு ஆடிட்டர்கள் பரிசோதனை செய்தபிறகு கண்டுபிடிக்கப்பட்டு, மேல் நடவடிக்கை எடுக்கக்கூடிய அளவுக்கு சர்க்காருடைய கண்காணிப்பு மிகவும் மோசமாக இருந்திருக்கிறது என்பதை இதனல் புரிந்துகொள்ளமுடிகிறது. இதைப் போன்ற பல கையாடல்கள் சபையின்முன்பு பல தடவைகள் எடுத்துக் காண்பிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக **Co-operative Society** கள் சரியானபடி நிர்வகிக்கப்படுவதில்லை, அதில் இருக்கக்கூடிய மானேஜர்களோ, வேறு அதிகாரிகளோ, **Official**-ம், **Non-official**-ம் கூட, பொது மக்களின் பணத்தை துஷ்பிரயோகம் செய்கிருர்கள் என்று எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. நீண்ட நாட்கள் தங்கள் தவறுகளை மறைத்துவைத்தபிறகுதான் இப்பேர்ப்பட்டவர்கள் அகப்பட்டுக் கொள்ளுகிருர்கள். இதற்கு சர்க்கார் இடம் கொடுக்கக்கூடாது என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

